# பாட்டாளி சிந்தனை

Volume 28 No. 10 சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

SUCI (Communist)

June 2018 தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ் விலை ரூ 5


# தூத்துக்குடி மக்களின் போர்க்குணமிக்க எழுச்சி காட்டும் பாதை

அடிப்படை சுற்றுச்சூழல் பாதுகாப்பு விதிகளை முற்றிலுமாக மீறி, நச்சுப்பொருட்களை வெளியிட்டு வீசுகின்ற வேதாந்தா ஸ்டெர்லைட் தொழிற்சாலையால் தொடர்ந்து தங்களின் உயிருக்கு ஏற்படும் அச்சுறுத்தலை எதிர்த்து தங்களின் எதிர்ப்புக்குரலைக் காட்டிட நிராயுதபாணியாக, அமைதியான முறையில் ஆற்று வெள்ளமென தென் தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நோக்கி மே 22 அன்று மக்கள் அணிவகுத்துச் சென்றனர். ஒரு தன்னெழுச்சியான ஊர்வலமாக அல்லாமல், அது ஒரு நன்கு ஒருங்குதிரட்டப்பட்ட ஒன்றாக இருந்தது. அவர்களின் கோரிக்கை நியாயமான ஒன்றாகும்.

ஆனால், அதிகார வர்க்கம் இவர்களின் பக்கம் நிற்கத் தயாரில்லை. அவர்களைப் பொருத்தமட்டில் ஆயிரக்கணக்கான ஏழை மக்களின் உயிருக்கும் வாழ்வாதாரத்திற்கும் ஏற்பட்டிருக்கும் கடுமையான அச்சுறுத்தலை தடுப்பதைவிட, லண்டனை தலைமையகமாகக் கொண்ட ஒரு மிகப்பெரும் இந்திய கார்ப்பொரேட் நிறுவனமான வேதாந்தா குழுமத்தின் வஞ்சக வியாபார நலன்களை பாதுகாத்திடுவதே மிக முக்கியமானதாக இருந்தது. ஆதலால், மாவட்ட நிர்வாகமானது, அஇஅதிமுக தலைமையிலான மாநில அரசாங்கத்தின் கட்டளைக்கிணங்க நடைபெறவிருக்கும் ஊர்வலத்தை தடைசெய்யும் நோக்கத்தில் அப்பகுதியில் 144 தடையுத்தரவைப் பிறப்பித்தது.

அதுமட்டுமின்றி, போராடிக்கொண்டிருக்கும் மக்களை எதிர்கொள்ள சிறப்புப் பயிற்சியளிக்கப்பட்ட துப்பாக்கிச் சுடும் வீரர்களைக்கொண்ட, நவீன ஆயுதங்களைக்கொண்ட மிகப்பெரும் போலீஸ் படையையும் அங்கு குவித்திருந்தது. தங்களின் உயிருக்கான பாதுகாப்பை உத்திரவாதப் படுத்துவதற்கான கோரிக்கையை முன்வைத்து அங்கு குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு இது ஆத்திரத்தை ஏற்படுத்தியது. எனவே அவர்கள் தங்களின் மனக்குறையை வெளிப்படுத்திட, தடையுத்தரவை மீறி ஆட்சியர் அலுவலகத்தை நோக்கிச் செல்வதென முடிவெடுத்தனர். நிர்வாகமானது எவ்விதத் தயக்கமுமின்றி உடனடியாக துப்பாக்கியேந்திய வீரர்களையும் ஆயுதமேந்திய போலீஸையும் அவர்கள் மீது ஏவியது.

கண்ணிமைக்கும் நேரத்திற்குள் 13 அப்பாவி உயிர்கள் மாய்ந்தன. நூற்றுக்கணக்கானோர் படுகாயமுற்றனர். இறந்தவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமென அதிகாரபூர்வமற்ற செய்திகள் கூறுகின்றன. இறந்தவர்களில் நால்வர், போராட்டத்தின் பிரதான ஒருங்கிணைப்பாளர்களாகும். வேதாந்தா குழுமம் எதை விரும்பியிருக்குமோ அதுவே நடந்தது. போலீஸ் வாகனம் மீது அமர்ந்துகொண்டு அவர்களின் தொலை நோக்கி துப்பாக்கிகளுடன் போராட்டக்காரர்களை நோக்கி அதிகாரம் படைத்த கொலையாளிகள் குறிபார்த்துக்கொண்டிருக்கும் வீடியோக்கள் மற்றும் பலியானவர் ஒருவரின் உடலை சுட்டு வீழ்த்தியதில் பெருமை கொண்ட சில போலீஸார் இறந்தவரின் உடலை எட்டி மிதிக்கும் வீடியோக்கள் வலைதளங்களில் வேகமாகப் பரவின. ஆட்சியதிகாரத்திலிருக்கும் முதலாளித்துவ வர்க்கத் திற்குச் சேவை புரிந்திட உறுதி பூண்டிருக்கும் அரசாங்கத்தின், நிர்வாகத்தின் கொடுங்கோன்மை முகம் இங்கே அப்பட்டமாக வெளிப்பட்டது.

“துப்பாக்கிச் சூட்டிற்கான பொறுப்பு போலீஸ் மற்றும் மாவட்ட நிர்வாகம் மட்டுமல்லாது, தொழிற்சாலை நிர்வாகத்திற்கு ஆதரவாயிருக்கும் தமிழக அரசாங்கம், மத்திய சுற்றுச்சூழல் வனத்துறை மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் நீதித்துறையையும் சாரும்” என ஒரு ஆங்கில நாளேட்டின் தலையங்கத்தில் சரியாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. (தி ஸ்டேட்ஸ்மேன், 26.05.2018) மரணம் எய்திய தியாகிகளின் நியாயமான போராட்டமும் தியாகமும் பயனற்றுப்போகவில்லை. சக்திவாய்ந்த மக்கள் போராட்டங்கள், நாடு தழுவிய எதிர்ப்பியக்கங்கள் மற்றும் மனசாட்சி கொண்ட அனைத்துப் பிரிவினரிடமிருந்தும் வந்த கண்டனங்களுக்கு அடிபணிந்து, அஇஅதிமுக தலைமையிலான தமிழக அரசாங்கம் தொழிற்சாலையை நிரந்தரமாக மூடும் உத்தரவைப் பிறப்பிக்கும் நிர்ப்பந்தத்திற்குள்ளானது.

மக்களுக்கு, தங்கள்மீது முதலாளித்துவம் ஈவிரக்கமற்று மேன்மேலும் தொடுத்துவரும்

தொடர்ச்சி 2ம் பக்கம்

## தூத்துக்குடியில் போராட்டத்தின்போது 13 பேர் போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டதை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) வன்மையாகக் கண்டிக்கிறது

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் 23.05.2018 அன்று வெளியிட்ட அறிக்கை:*

மாசுபடுத்திக்கொண்டிருக்கும் தூத்துக்குடி வேதாந்தா ஸ்டெர்லைட் காப்பர் தொழிற்சாலையை மூடக்கோரி நியாயமான முறையில் அமைதியாகப் போராடியவர்கள் மீது அகில இந்திய அண்ணா திமுக தலைமையிலான அரசாங்கத்தின் போலீசானது நேற்றய தினம் துப்பாக்கிச் சூடு நடத்தி இரண்டு பெண்கள் உள்ளிட்ட 13 பேரை கோரமான முறையில் கொலை செய்ததுடன் பலரை படுகாயமுற வைத்திருப்பதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

காற்று மற்றும் நிலம் சம்பந்தப்பட்ட அடிப்படை மாசுக்கட்டுப்பாட்டு விதிகளை மீறியதாகவும், நச்சுக் கழிவுகளை சட்டவிரோதமாக குவித்து வைத்திருப்பதாகவும் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு கடுமையான சுகாதாரக் கேடுகளை விளைவிக்கக்கூடிய நச்சு வாயுக் கசிவை தடுத்து நிறுத்தவில்லை என்பதாகவும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் வேதாந்த குழுமத்தின் உரிமையாளர்கள் மீது உள்ளது. அந்த ஆலையை மூட வேண்டுமென்ற ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தும், தேசிய பசுமைத் தீர்ப்பாயம் இறுதியாக அவ்வாலையை மீண்டும் திறக்கலாமென அனுமதித்திருக்கிறது. இது பாதிப்படைந்துகொண்டிருந்த சுற்று வட்டார கிராமத்தினருக்கு எரிச்சலூட்டியது. இதனையெதிர்த்து அவர்கள் ஊர்வலமாகச் சென்றபோது அரசாங்கமானது கொடுங்கோன்மையாக துப்பாக்கிச்சூடு நடத்தியிருக்கிறது. எவ்வாறு பேராசை பிடித்த ஏகபோக குடும்பங்கள் மக்களது உயிரையும், ஆரோக்கியத்தையும், சுகாதாரத்தையும் பணயம் வைத்து தங்களது பணப்பெட்டியை நிரப்பிக் கொண்டிருக்கின்றனர் என்பதையும், பூர்ஷ்வா அரசாங்கத்தின் உடந்தையுடன் எவ்வாறு சட்டத்தின் பிடியிலிருந்து ஆனந்தமாகத் தப்பிக்கின்றனர் என்பதையும் இச்சம்பவம் மீண்டும் சுட்டிக்காண்பிக்கிறது.

இத்தொழிற்சாலையை நிரந்தரமாக மூட வேண்டுமென்றும், குற்றமிழைத்த காவல்துறை அதிகாரிகளுக்கு உயர்ந்தபட்ச தண்டனை வழங்க வேண்டுமென்றும், இறந்தவர்கள் மற்றும் காயமுற்றோரின் குடும்பத்தாருக்கு போதிய இழப்பீடு வழங்க வேண்டுமென்றும், மக்களின் உயிரின் மீது விளையாடிக்கொண்டிருக்கும் லாபவெறி பிடித்த தொழில் நிறுவனங்கள் மீது மாசுக்கட்டுப்பாட்டு விதிகளை கடுமையாக அமல்படுத்த வேண்டுமென்றும் நாங்கள் கோருகிறோம் ■

# ஸ்டெர்லைட் ஆலைக்கெதிராகப் போராடிய மக்களை படுகொலை செய்ததைக் கண்டித்து மே 24, அகில இந்திய கண்டன நாள்




கொல்கத்தா




சென்னை

# தூத்துக்குடி மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவான நாடுதழுவிய ஒன்றுபட்ட இயக்கங்கள் தேவை

1ம் பக்கத் தொடர்ச்சி

பொருளாதார, அரசியல், கலாச்சாரத் தாக்குதலை முறியடிப்பதற்கான ஒரே வழி போராட்டப் பாதை ஒன்றுதான். இதிலிருந்து மக்களை விலக்கி வைத்திட, ஆளும் முதலாளித்துவ வர்க்கமும், அதற்கு கீழ்ப்படிந்துள்ள அரசாங்கங்களும் அதற்குச் சேவகம் புரியும் அரசியல் கட்சிகளும் அவைகளின் ஒட்டுமொத்த படைக்கலன்களையும் தடைகளாக முன்னிறுத்தி வைத்திருக்கின்றன. இந்தப் பின்னணியில் தூத்துக்குடி மக்களின் போர்க் குணமிக்க போராட்ட எழுச்சியும் அதன் வெற்றியும் மகத்தானதாகும். இதன் காரணமாக உழைக்கும் மக்களின் பல்வேறு பிரிவினரின் போராட்ட ஒற்றுமையை சீர்குலைக்கும் நோக்கத்தில், அவர்களின் சகோதரத்துவத்தை நாசப்படுத்தும் நோக்கத்தில், அவர்கள் மத்தியில் பரஸ்பர வெறுப்பை, நம்பிக்கையின்மையை மற்றும் சந்தேகத்தை உருவாக்கும் நோக்கத்தில், அவர்களை சகோதரத்துவ சண்டையில் ரத்தக்களரியில் சிக்குண்டு வைத்திருக்கும் நோக்கத்தில் இனவாதம், ஜாதியவாதம், மதவாதம், பழமைவாதம் மற்றும் சமயவாதத்தின் அடிப்படையிலான அனைத்து வகை பிரிவினைவாத எண்ணங்களும் ஊட்டி வளர்க்கப்படுகின்றன.

மக்களின் சிந்தனைச் செயல்முறைப் போக்கினை மழுங்கடிப்பதற்கான, பகுத்தறிவை அகற்றுவதற்கானநன்குபின்னபட்ட ஒருதந்திர வலை விரிக்கப்பட்டிருக்கிறது. அதன் நோக்கம், ஒடுக்கப்படும் மக்கள் தேவையான சமூக அரசியல் விழிப்புணர்வை அடையக் கூடாது; அவர்களிடம் மனித சாராம்சம் அற்றுப்போக வேண்டும்; அவர்கள் செயலற்றவர்களாகி, ஒடுக்குமுறை ஆட்சியாளர்களுக்கெதிராக துணிச்சலுடன் எழுந்து நிற்கும் உத்வேகத்தைப் பெற்றுவிடக் கூடாது; அதற்குப்பதிலாக பல்வேறு பாராளுமன்ற கட்சிகளின் வாக்கு வங்கிகளாக, பூர்ஷ்வா வாக்கு வங்கி அரசியலின் வலையில் சிக்குண்டு அல்லல்பட வேண்டும் என்பதாகும். இடதுசாரிகளென்றும் மார்க்சிஸ்டுகளென்றும் தங்களை அழைத்துக் கொள்ளக்கூடிய சிபிஐ (எம்), சிபிஐ போன்ற கட்சிகள்கூட ஆட்சியதிகாரத்தில் நீடித்திட நீண்ட காலமாகவே போராட்டப்பாதையைக் கைவிட்டதுடன் ஆளும் வர்க்கத்திற்குப் பிடிக்காத எந்த நடவடிக்கையையும் அவர்கள் எடுப்பதில்லை.

நியாயமான ஜனநாயக இயக்கங்களைக் கட்டுவதற்கு இடையூராக இருக்கும் இத்தகைய அனைத்துத் தடைகளையும் மீறி, துணிச்சல்மிகுந்த தூத்துக்குடி மக்கள் அனைத்துவித பிரிவினைவாதத்தையும் கடந்து தன்னம்பிக்கையுடன் முன்முயற்சியை எடுத்ததுடன் போராட்ட ஒற்றுமையையும் வளர்த்தெடுத்தனர். மேலும் ஒட்டுமொத்த நிர்வாகத்தின் ஒப்புதலையும் ஆதரவையும் வெளிப்படையாக அனுபவித்துவருகின்ற, ஆட்சியதிகாரத்தில் இருப்பவர்களுடன் நெருக்கமான தொடர்புடைய மூர்க்கத்தன்மைகொண்ட ஒரு கார்ப்பொரேட் குழுமத்தை எதிர்த்த ஒரு மாபெரும் போராட்டத்தை முன்னெடுத்தனர். வேதாந்தா குழுமம் எவ்வாறு ஆளும் அரசியல் வட்டாரம், ஒழுங்குமுறை மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரிகள் மத்தியில் தன் செல்வாக்கைப் பிரயோகித்து வந்தது என்பதை சில உண்மைகள் எடுத்துக்காட்டுகின்றன. வேதாந்தா குழுமம் திட்டமிட்ட முறையில் சுற்றுச்சூழல் விதிகளை காற்றில் பறக்கவிட்டு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இதுவரையில் அவர்கள் ஏற்படுத்தியுள்ள தொழிற்சாலைகளில் தனது ஊழியர்களுக்கும் அருகாமையில் வசிக்கின்ற மக்களுக்கும் கடுமையான சுகாதாரக் கேட்டை ஏற்படுத்திக்கொண்டிருப்பதற்கான கடந்தகால உதாரணங்கள் இருக்கின்றன. இக்குழுமத்தின் கொடிய வியாபார நலன்களுக்கும் பேராசைக்கும் முன்பாக மனித உரிமை விதிகள் என்பது இரண்டாம் பட்சமே.

சுரங்கம் தோண்டுவதற்காக ஏழை கிராமவாசிகளை வலுக்கட்டாயமாக வெளியேற்றினர் என்ற குற்றச்சாட்டு இக்குழுமத்தின் மீது உள்ளது. இத்தகைய ஒரு கார்ப்பொரேட் குழுமம் தூத்துக்குடியில் சர்ச்சைக்குரிய காப்பர் உருக்காலையை ஏற்படுத்த, 1993இல் தமிழகத்தில் அப்போது ஆட்சியிலிருந்த அஇஅதிமுக முதலமைச்சரான மறைந்த ஜெ ஜெயலலிதாவால் அழைக்கப்பட்டு இவ்வாலைக்கு 1995இல் அடிக்கல் நாட்டப்பட்டது. அவரது பிரதான எதிரியான திமுக கட்சியின் தலைவர் கருணாநிதி தனது ஆட்சிகாலத்தில் முதலமைச்சராக 1996இல் அவ்வாலையைத் திறந்து வைத்தார்.

அதுமுதற்கொண்டே ஒன்றன் பின் ஒன்றாக நடந்த நிகழ்வுகள் யாவும் மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் முதல் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் வரையில் கூட்டணியாக நின்று அந்நிறுவனம் சுற்றுச்சூழல் விதிகளை மீறியது கண்டுபிடிக்கப்பட்டபோதெல்லாம் அந்நிறுவனத்தைக் காப்பாற்றியதற்குச் சாட்சியம் கூறுகின்றன. பல சந்தர்ப்பங்களில் சென்னை உயர்நீதிமன்றம் மட்டுமல்லாது, உச்சநீதிமன்றமும்கூட இந்நிறுவனத்தைக் காப்பாற்றிட முன்வந்துள்ளது.

2013இல் இவ்வாலையிலிருந்து பெரும் வாயுக் கசிவு ஏற்பட்டு அருகாமையில் வாழ்ந்த மக்கள் மூச்சுத் திணறலால், இருமல், கண்ணெரிச்சல், கருச்சிதைவு மற்றும் கடுமையான உபாதைகளினால் அவதிப்பட்டபோது, இவ்வாலைக்கெதிரான உறுதியான சாட்சியங்களைச் சேகரித்திட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தவறியதாக அறிவிக்கப்பட்டதால் இந்த வேதாந்தா நிர்வாகம் கடுமையான தண்டனையிலிருந்து தப்பித்தது.

இத்தகையதொரு அபாயகரமான தொழிற்சாலையின் மட்டுமீறிய செயல்பாடு, அதனால் காற்று, நீர் மற்றும் நிலத்தடி நீர் மாசுபடல் என்பது கடுமையாக இருந்ததனால், இப்பகுதி மக்களின் யதார்த்தநிலை கூற்றுப்படி தூத்துக்குடி நகரமானது படுவேகமாக தமிழ்நாட்டின் புற்றுநோய் தலைமையிடமாக மாறிக்கொண்டிருக்கின்றது. ஒரு கண் துடைப்பு நாடகமாக இவ்வாலையின் விரிவாக்கத்திற்கு தடை போடப்பட்டு இருந்தாலும், கிடைக்கின்ற அனைத்து அறிகுறிகளும் பாதிக்கப்பட்ட இப்பகுதி மக்களின் நியாயமான நீண்ட கால கோரிக்கையை அலட்சியம் செய்து பாஜக தலைமையிலான மத்திய அரசாங்கம், மாநிலத்தை ஆளும் அஇஅதிமுக அரசாங்கம், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் ஆகியன யாவும் வேதாந்தா நிறுவனத்தின் நலன்களுக்கு சாதகமாகச் சேவை புரிவதுடன் இவ்வாலை விரிவாக்கத்திற்கான அனுமதியை வழங்கிட தீவிரமாக ஆலோசித்து வருகிறது என்பதையே காட்டுகிறது. ஆளும் கட்சிகள் மற்றும் அவைகளின் கொடுங்கோல் அதிகாரிகளுடன் வேதாந்தா குழுமம் கொண்டிருக்கும் நெருக்கத்தைப் பார்க்கையில் அத்தகைய அச்சம் ஏற்படுவதற்கான ஆதாரம் உள்ளது.

தமிழகத்தை மாறிமாறி ஆளுகின்ற இரண்டு பிராந்திய பூர்ஷ்வா கட்சிகளான அஇஅதிமுக, திமுகவுடன் கூடவே இந்திய ஏகபோகங்களின் மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமான அரசியல் பிரதிநிதிகளான காங்கிரசுடனும் பாஜகவுடனும் கூட மிகவும் சுமூகமான உறவை வேதாந்தா குழுமம் கொண்டிருக்கிறது. வேதாந்தா குழுமசட்ட ஆலோசகர்களில் ஒருவராகவும் இயக்குனர் குழுவில் ஒருவராகவும் இருந்த காங்கிரஸ் தலைமையிலான முன்னாள் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கத்தின் நிதியமைச்சர் அக்குழுமத்தின் வியாபார நலன்களுக்குச் சாதகமாக நிதிக்கொள்கைகளை வகுத்து நடைமுறைப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டுக்கும் உள்ளாகியிருக்கிறார். இப்போது அந்த வேதாந்தா குழுமம் ஆளும் பாஜகவுக்கும் பிரதமர் நரேந்திர மோடிக்கும் விசுவாசமான ஆதரவாளராக உள்ளது எனத்தெரிகிறது. வேதாந்தா குழுமத்தின் தலைவர் வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் மோடியின் பிரச்சார நிர்வாகக் குழுவில் பிரதான நபராகவும், பாஜக அரசாங்கத்தின் தனியார்–பொதுமக்கள் கூட்டு முயற்சிகளின் மிக முக்கிய அங்கமாகவும் உள்ளார்.

இப்பின்னணியில், தூத்துக்குடி மக்களின் தீரமிகுபோராட்டம் உண்மையில் பிரமிக்கத்தக்கதும் கருமை படர்ந்த இருண்டதோர் சூழ்நிலையில் குன்றின் மீது வைத்த ஓர் விளக்காகவும் விளங்குகிறது. நாட்டின் பிறபகுதி மக்களுக்கான உத்வேகத்திற்கு ஆதாரமாகவும், நாடுமுழுவதிலும் நடைபெறும் ஒருங்குதிரட்டப்பட்ட, சக்திவாய்ந்த, வாழ்வா சாவா என்ற போராட்டத்தின் உயர்ந்த கட்டத்திற்கும் வளர்ச்சிக்கும் மக்கள் பின்பற்ற வேண்டிய ஓர் உதாரணமாகவும் விளங்குகிறது. இதன் காரணமாகத்தான் ஆட்சியதிகாரத்திலிருப்போர் அவர்களின் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டி, நச்சை உமிழும் இவ்வாலையை மூட அறிவிக்கும் நிர்ப்பந்தத்திற்கு ஆளானார்கள். நாட்டின் விழிப்புணர்வுகொண்ட மக்களால் துயரத்தில் வாழும் ஏழை, எளிய மக்களால் இப்போராட்டம் வெகுவாகப் பாராட்டி உயர்த்திப் பிடிக்கப்பட்டது என்றால் மிகையாகாது.

நமது சுதந்திரப்போராட்டத்தை ஒடுக்கிட பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் நிகழ்த்திய ஜாலியன் வாலாபாக் பயங்கரப் படுகொலைகளை அனைவருக்கும் நினைவுபடுத்தும் வகையில் அமைந்த இத்தகைய அப்பட்டமான அரசு பயங்கரவாத காட்டுமிராண்டித்தனத்திற்கு எதிராக ஒன்றுபட்டு வெகுண்டெழுந்த மக்களின் எதிர்ப்புப்போராட்டம் நாடு முழுவதிலும் எங்கே நடந்திருக்கிறது? பூர்ஷ்வா கட்சிகள் இதற்கு முன்வந்து மக்களின் போராட்டத்திற்கும் கோபத்திற்கும் ஓர் முறைப்படுத்தப்பட்ட வடிவத்தை தரும் என நிச்சயமாக எவரும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் இந்நாட்டு மக்கள், குறிப்பாக இடதுசாரி எண்ணம் கொண்ட பிரிவினர் முற்றிலும் கவலையுற்று இருக்கையில், தமிழ்நாட்டில் வெகுஜன ஆதரவு எங்களுக்கு இருக்கின்றது என கூறிக்கொள்கின்ற, பாராளுமன்றத்தில் குறிப்பிடத்தக்க இருப்பைக் கொண்டுள்ள சிபிஐ(எம்), சிபிஐ கட்சிகள்கூட பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் அகில இந்திய அளவிலான போராட்டம் எடுப்பது ஒருபுறமிருக்கட்டும், இவை போராட்டத்திற்கு ஆதரவான எவ்வித முன்முயற்சியையும் எடுக்கவில்லை. மக்களின் கோபத்தை ஓர் ஒருங்கு திரட்டப்பட்ட போராட்ட வடிவமாக இந்தப் போராட்டத்தை மாற்றி, இடதுசாரிவழியில் மக்களின் எரியும் பிரச்சினைகளின் அடிப்படையில் நாடுமுழுவதிலுமான ஒரு ஒன்றுபட்ட போராட்டமாக கட்டியெழுப்ப வேண்டிய தேவை இருக்கையில், சிபிஐ(எம்) கட்சியின் தலைமை ஒரு சம்பிரதாய அறிக்கையை வெளியிட்டதுடன், பெயரளவிலான சில ஆர்ப்பாட்டங்களை நடத்தி தன் பொறுப்பை முடித்துக்கொண்டது.

இதற்கு முன்னரும்கூட, தமிழ்நாட்டில் கூடங்குளம் அணு ஆலை விரிவாக்கத் திட்டதிற்கு எதிராக ஒரு சக்திவாய்ந்த மக்கள் போராட்டத்தை அப்பகுதி மக்கள் வளர்த்தெடுத்தபோது, அப்போராட்டத்தின் நிர்ப்பந்தத்தால் அப்போதைய காங்கிரஸ் அரசாங்கம் பின்வாங்கி, உத்தேசித்திருந்த விரிவாக்கத்திற்கு தற்காலிகத் தடை விதித்திருந்தது. அப்போதுகூட, சிபிஐ(எம்), சிபிஐ கட்சிகள், பாடுபடும் வெகுஜனங்களின் பெருகிவரும் வறுமைக்கும் அவல நிலைக்கும் எதிரான வெகுஜனப் போராட்ட வீச்சினை முன்னெடுத்துச்செல்லும் நோக்கத்தில் அப்போராட்ட செய்தியை நாட்டின் மூலை முடுக்கெல்லாம் கொண்டுசெல்வதற்கு எவ்வித முயற்சியையும் எடுப்பதைத் தவிர்த்தன.

ஏன் இவ்வாறு நடக்கிறது? ஏனெனில், பிற பூர்ஷ்வா குட்டி பூர்ஷ்வா கட்சிகளைப் போன்றே சிபிஐ(எம்)மும் மற்றும் சிபிஐ போன்ற அதன் கூட்டாளிகளும் போராட்டப்பாதையைக் கைவிட்டது மட்டுமல்லாது, எங்கெல்லாம் எப்போதெல்லாம் அவை ஆட்சிக்கட்டிலில் அமர்ந்திருந்தனவோ அப்போதெல்லாம் அவை போலீஸ் மற்றும் நிர்வாகத்தை முடுக்கிவிட்டு ஜனநாயக இயக்கத்தை நசுக்கியது. ஆட்சியதிகாரத்தில் இல்லாத சமயங்களில், அவை பணத்தாசை பதவியாசையின் காரணமாக ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் அதிருப்தியை வரவழைத்துக்கொள்ளாத அளவிற்கு, ஆட்சியிலமர்ந்திட கிங் மேக்கர்களின் ஆட்சி நழுவிப்போகாத அளவிற்கு அவைகளின் செயல்பாட்டைக் கவனமாக பார்த்துக்கொண்டன. இவைகளின் சமரசவாத, சரணாகதி அரசியல் காரணமாக, தூத்துக்குடி மக்கள் போராட்டத்தின் வாயிலாக உத்வேகத்தைப்பெற்று ஒன்றுபட்ட இடதுசாரி ஜனநாயக இயக்கங்களை அலையலையாக உருவாக்கும் ஒரு பிரகாசமான வாய்ப்பு நழுவிப்போய்விட்டதால் மக்கள் நலனுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுவிட்டது.

சரணாகதி, ஏமாற்று, இழப்பு மற்றும் சமரச அரசியலுக்கு எதிராக உண்மையான புரட்சியாளர்கள் உறுதியுடன் உயர்த்திப்பிடிக்க வேண்டிய

தொடர்ச்சி 14ம் பக்கம்

# மனித நாகரிகத்தின் கட்டுக்கோப்பை அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் வகையில் அதிகரித்துவரும் குற்றங்களும் ஈவிரக்கமற்ற கொலைகளும்

செய்தித்தாள்களைப் படிப்பது, இருபத்திநான்கு மணி நேர வானொலிச் செய்திகளைக் கேட்பது, மின்னணு மற்றும் காணொளி ஊடகச் செய்திகளைப் பார்ப்பது இல்லாத நவீன வாழ்க்கையை நினைத்துப்பார்த்திட முடியாது. ஆனால், சமீப காலமாக செய்திகளைப் படிப்பதை, பார்ப்பதை அல்லது கேட்பதை நினைத்துப்பார்த்திடவே மக்கள் நடுங்குகின்றனர். இத்தகைய ஊடகச் செய்திகளின் ஒவ்வொரு பக்கத்திலும் எத்தகைய பயங்கரமான செய்திகளை கண்ணுறவேண்டி வருமோ என்ற அச்சத்தில் மக்கள் எப்போதுமே இருந்துகொண்டிருக்கின்றனர்.

அடுக்கடுக்காக ஈவிரக்கமற்ற முறையில் நூற்றுக்கணக்கில் கொலைகளும் குற்றங்களும் கொடுஞ்செயல்களும் புரியப்படுகின்றன. மனித இனம் சந்தித்திராத பிறழ்வுகளும் திரிபுகளும் நடந்துகொண்டிருக்கின்றன. பிரபலங்கள் முதல் நடைபாதைவாசிகள் வரை, ராணுவத்தினர் முதல் குடிமக்கள் வரை, நகரங்கள் மற்றும் கிராமங்கள் என எல்லா இடத்திலும், அனைத்துப்பிரிவு மக்கள் மத்தியிலும் குற்றம் புரிபவர்களும் பாதிக்கப்படுவர்களும் நாடு முழுவதிலும் எல்லா வயதினரிலும் அதிகரித்துக்கொண்டிருக்கின்றனர்.

தந்தையே மகளை மானபங்கப்படுத்துவதும், மகனே தாயைக் கொலை செய்வதும், தாயே மகளைக் கொல்வதும், கணவனே மனைவியைக் கொல்வதும், மனைவியே கணவனைக் கொலை செய்வதும், நண்பர்களே நண்பர்களைக் கொலை செய்வதும், சர்வ சாதாரண நிகழ்வுகளாகிக்கொண்டிருக்கின்றன. எவ்வித மனித உறவுகளைப்பற்றியும் எவரும் கவலைப்படுவதில்லை என்பதையே இவை யாவும் காட்டுகின்றன. இன்றைய நாட்களில் இவை இங்கொன்றும் அங்கொன்றும் நடக்கும் நிகழ்வுகளாக இல்லை. ஒவ்வொரு தினமும், புதிய புதிய கொடூரமான முறைகளில், வழக்கமான வழிகளுக்கு அப்பாற்பட்டு, ஒன்றன் பின் ஒன்றாக இவை நடந்துகொண்டேதான் இருக்கின்றன.

குற்றங்கள் அதிகரித்து குற்றவாளிகள் பெருகிக்கொண்டேயிருக்கின்றனர். குற்றப்பின்னணி இல்லாத சாமானிய நபர்களும்கூட கொடூர சம்பவங்களில் தீவிரமாக சம்பந்தப்பட்டிருக்கின்றனர். இதன் காரணமாக, ஈவிரக்கமற்ற கொலைகள், பெண்கள், குழந்தைகள், சிறுபான்மை தலித்துக்கள் மீதான காட்டுமிராண்டித்தனமான அட்டூழியங்கள் அரங்கேறிக்கொண்டேயிருக்கின்றன. இதன் விளைவாக அனைத்துவகை கொடூரமான காட்டுமிராண்டித்தனமும் ஒட்டுமொத்த நாகரிக உலகை கொலைக்களமாக ஆக்கும், சமூகம் எக்கணமும் நொறுங்கிப்போகும் நிலைமையை இவை ஏற்படுத்திவருகின்றன.

## படுபாதகக் கொலைகள்:

### ரத்தக்களரி நிறைந்த சம்பவங்கள் தொடர்ந்து அரங்கேறிக்கொண்டேயிருக்கின்றன

இந்திய தேசியக் குற்றப்பதிவேட்டுத் துறை (National Crime Records Bureau), கடந்த ஒரு பத்தாண்டுகளாக ஒவ்வொரு வருடமும் 30,000 கொலைகள் நடந்துள்ளதாகப் பதிவு செய்திருக்கிறது. உதாரணமாக, ஒரு இளம் வயதுப் பேராசிரியர் சொத்துக்காக நோய்வாய்ப்பட்டிருக்கும் தன் தாயை வீட்டின் கூரை மீது வீசியெறியும் செய்தியை, ஒரு நகரத்தில் மகனும் மருமகளும் 52 வயதான தந்தையை கொலை செய்து தலையைத் துண்டித்து உடலைத் துண்டுதுண்டாக்கியிருக்கும் செய்தியை படிக்க நேரிடுகிறது. ஆனால், மேற்கண்ட இப்புள்ளிவிபரங் கள் கொலை செய்யப்படும் விதத்தின் கொடூரத்தை பொதுவாகச் சுட்டிக்காண்பிப்பதில்லை.

எண்ணிப்பார்த்திட முடியாத அளவிற்கு ஒரு பெண் பிறர் உடந்தையுடனோ அல்லது இல்லாமலோ தன் மகளைக் கொலை செய்கின்றாள். பல காரணங்களால் ஒரு மனைவி அல்லது கணவன் ஓர் கள்ளத்தனமான உறவில் ஈடுபடுவதற்காக திட்டமிட்டு தன் கணவனை அல்லது தன் மனைவியை கொலை செய்வதை காலை செய்தித்தாள்களில் படிக்கையில் மனிதனைப் பித்துப் பிடித்துப்போக வைக்கின்றது.

தெருக்களில்கூட நண்பர்களுக்கிடையில் சச்சரவுகள் நடப்பது ஒன்றும் அசாதாரண விஷயமல்ல. ஆனால் இன்றைய நாட்களில் இத்தகைய வாய்த்தகராறுகள் அருவருக்கத்தக்க வடிவமெடுத்து கோரக்கொலையில் முடிவதையும், கொலை புரிந்தவர் எவ்வித மனசாட்சியுமில்லாமல் இரக்கமில்லாமல் நடந்து செல்வதையும் பார்க்க நேரிடுகிறது. இவ்வாறாக, தலைநகரின் ஒரு பிரபலமான பள்ளியின் 15திலிருந்து 16 வயதேயான மூன்று மாணவர்கள், 14 வயது சக மாணவனை பள்ளி வளாக கழிவறையில் அடித்துக் கொலை செய்யும் காட்சியை ஒரு கண்காணிப்பு கேமரா பதிவு காட்டுகிறது. மற்றொரு சம்பவத்தில், கீழ்நிலை தேர்வெழுதச் செல்லும் இரண்டு சக மாணவர்களுக்கிடையிலான வாக்குவாதம் முற்றிப்போய், அவர்களில் ஒருவன் மற்றவனைக் கொலை செய்துவிட்டு அவ்விடத்திலிருந்து வெளியேறி தேர்வறையில் அமைதியாகச் சென்று அமர்வதையும் பார்க்க நேரிடுகிறது. நண்பர்களுக்கிடையே அடிக்கடி உருவாகும் வாக்குவாதத்தின் தொடர்ச்சியாக, மூன்று நண்பர்கள் ஒரு கூரிய வெட்டருவாளுடன் வருகின்றனர், மது அருந்துகின்றனர், அதன் பின்னர் அவர்களில் இருவர் மூன்றாம் நபரின் கழுத்தை அறுத்துக் கொலை செய்யும் மற்றொரு கொடூர சம்பவமும் நடக்கிறது. இது போன்றே பேருந்து நடத்துனரும் அவரது உதவியாளரும் ஓர் வாக்குவாதத்திற்குப் பின்னர், ஒரு பயணியை கொலை செய்துவிட்டு சடலத்தை சாலை அருகேயுள்ள நெல் வயலில் வீசியெறியும் வழக்கமாக நடைபெறும் சம்பவத்தை அறியும் ஒருவர் அதிர்ச்சியடையலாம். ஒரு சக பெண் பயணி இதை கொலைசெய்யப்பட்டவரின் குடும்பத்திற்குத் தெரியப்படுத்துகிறார். போலீஸ் அவர்களது முதல் தகவல் அறிக்கையைப் பெற மறுத்ததாகக் கூறப்படுகிறது.

ஒரு நகரத்தில் தண்ணீர் டேங்கர் லாரியில் தண்ணீர் பிடிப்பது தொடர்பான வாக்குவாதத்தில் ஈடுபட்ட தன் மகளைக் காப்பாற்றிட முயன்ற ஒரு அறுபது வயது முதியவரை ஒரு வெறி பிடித்த கூட்டம் அடித்துக் கொலை செய்கிறது. ஹோலி பண்டிகையின்போது வண்ணங்களைத் தெளித்து தங்களது ஆடையை வீணடித்துவிட்டது என ஒரு குழந்தையை அடித்த இரு நபர்களிடமிருந்து காப்பாற்றிய ஒரு தலித் இளைஞர், நகரத்தின் ஒரு தெருவில் கிட்டத்தட்ட 20 பேர் கொண்ட கும்பலால் 50க்கும் மேற்பட்ட இடங்களில் குத்தப்பட்டுக் கொலை செய்யப்படுகிறார்.

பத்தாண்டுகளுக்கும் முன்பாக, டில்லியின் புறநகர்ப் பகுதியில் இருக்கும் ஒரு கிராமத்தில், இறந்த குழந்தைகள் மற்றும் வயதுவந்த இளைஞர்களின் உடற்பகுதிகள் ஒரு வீட்டில் கண்டெடுக்கப்பட்ட பயங்கரத்தை ஒரு நாள் காலை இந்நாடு கேள்வியுற்றது. அங்கு வேலை பார்த்த பணியாள் பெண்களை, பெரும்பாலும் சிறுமிகளை கற்பழித்துக் கொலை செய்ததும் அவர்களின் உடற்பகுதிகளையும் சாப்பிட்டு வந்ததாகவும்கூடத் தெரியவந்தது. வீட்டுச் சொந்தக்காரருக்குத் தெரியாமல் இத்தகைய குற்றத்தைச் அவன் செய்திருக்க வாய்ப்பில்லை. எப்படி, எந்த சூழ்நிலையில், எப்படிப்பட்ட மனநிலையில் இது நடந்திருக்க முடியும் என நாடே அதிர்ந்தது.

மக்களின் ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு கௌரவக்கொலை என்ற பதம் பிடித்தமான ஒன்றாக ஆகிவிட்டது என எண்ணத்தோன்றுகிறது. இப்படிப்பட்டவர்களில், ஒரு தந்தையானவர் அவரது மகளைக் கொன்று அண்டை வீட்டார் முன்பு வீசியெறியத் தயங்குவதில்லை. சகோதரன் நண்பர்களுடன் சேர்ந்துகொண்டு தனது சகோதரியைக் கொல்லத் தயங்குவதில்லை. இன்னும் இதுபோன்றவை நடந்துகொண்டிருக்கின்றன.

ஒரு பண்பட்ட கொலைகாரன் ஒரு குற்றத்தைப் புரிந்து, சிறைக்குச்சென்று, விரைவிலேயே விடுதலையடைந்து மீண்டும் ஒரு புதிய குற்றத்தைப் புரிகின்றான். அவன் ஒரு சந்தைப்பகுதியில் ஒருவனை நேருக்கு நேராகச் சுட்டுவிட்டு பாதுகாப்பாகத் தப்பித்துவிடுகிறான். அந்த அளவிற்கு கொலைகள் இன்றைய நாட்களில் சர்வ சாதாரணமாக நடைபெறுகின்றன. இன்றைய அரசியலில் எவ்வித நல்லொழுக்கமும் அறநெறியும் இல்லாதிருப்பதால், அரசியல் கொலைகள் மேற்கூறியவற்றிற்கு இணையாகப் பெருகிக்கொண்டிருக்கின்றன. அற்ப காரணங்களுக்காக, ஒரே கட்சிக்குள்ளிருக்கும் அவர்களின் எதிரிகளைக்கூட கொல்லத் தயங்குவதில்லை.

### பெண்கள் மீதான அட்டூழியங்கள்

பெண்கள் மீதான அட்டூழியங்கள்கூட தொடர்ச்சியாக அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது. தேசியக் குற்றப்பதிவேட்டுத் துறை பதிவேடுகள் சுட்டிக்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# ஏப்ரல் 24: எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் 71வது ஸ்தாபகதினம்





புதுச்சேரியில் ஏப்ரல் 24, 2018 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் ஸ்ரீதர், மத்திய ஸ்டாப் உறுப்பினர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) உரையாற்றுகிறார். கூட்டத்தில் கலந்துகொண்டோர்

## மனித நாகரிகத்தின் கட்டுக்கோப்பை அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் . . .

# இதன் பின்னணி என்ன? எவ்வழியில் இதை எதிர்கொண்டு முறியடிப்பது?

*3ம் பக்கத் தொடர்ச்சி*

காட்டுவதுபோல், தரவுகள் (Data) வெளியிடப்பட்டுள்ள **2007** வரையிலான கடந்த மூன்று பத்தாண்டுகளில் இந்தியாவில் நடக்கும் கற்பழிப்புகளின் எண்ணிக்கை அனைத்து மதிப்பீடுகளையும் மிஞ்சி ஆறு மடங்கு அதிகரித்திருக்கிறது, பணம் பறித்திட ஆட்களைக் கடத்தி பிணையமாக வைத்து அவர்களைக் கொலை செய்யுமளவிற்குச் செல்வது இரு மடங்காகியிருக்கிறது. அதன்பின் வந்த பத்தாண்டுகளில், சூழ்நிலை மேம்படுவதற்குப் பதிலாக நிச்சயம் மோசமாகியிருப்பது தெளிவாகத் தெரிகிறது.

**2018** பிப்ரவரி **26** வரையிலான ஃபைனான்சியல் எக்ஸ்பிரஸ்ஸின் மிகவும் புதுப்பிக்கப்பட்ட (Updated) தகவல் அறிக்கை, இந்தியாவில் இத்தகைய சம்பவங்கள் **2018**ஆம் ஆண்டின் முதல் **45** நாட்களில் அதற்கு முந்தைய ஆண்டின் முதல் **45** நாட்களை ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளது என்றும் கொலை மற்றும் கற்பழிப்புகள் உச்சத்தைத் தொட்டிருக்கிறது என்றும் தெளிவாகக் கூறுகிறது. டிசம்பர் **2017**இல், தி இந்து பத்திரிகையும்கூட, கற்பழிப்பு நிகழ்வுகள் வேகமாக அதிகரித்திருக்கிறது என்றும் மத்தியப்பிரதேசம் மற்றும் உத்திரப்பிரதேச மாநிலங்கள் இவ்வரிசையில் முன்னணியில் உள்ளன என்றும் கூறுகிறது. பரிதாபகரமான ஒன்றாயிருப்பினும் இதில் அதிர்ச்சியடையக்கூடிய விஷயம் என்னவெனில், **2014**ஆம் ஆண்டில் ஒரு புதிய அரசாங்கமும், ஒரு புதிய சட்டமும் வந்த பின்னரும்கூட, கற்பழிப்பு வழக்குகளில் தண்டனை விகிதம் டில்லியிலும் பிற மாநிலங்களிலும் கணிசமாகக் குறைந்துள்ளது என்பதாகும்.

குடும்பத்தில் நடக்கும் வன்முறையில், வரதட்சணையை மையமாக வைத்து நடைபெறும் கொலைகள் இந்தியாவில் பிரத்யேகமானதாகும். இது **1961**இல் சட்டவிரோதமானது என ஆக்கப்பட்டிருப்பினும், அரசியல் தலைமையில் அனைத்து மாற்றங்களும் ஏற்பட்ட பின்னரும்கூட, இந்த பிரத்யேக இந்திய குணாம்சம் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. இதன் சோககர விளைவாக, மணப்பெண்கள் துன்புறுத்தப்படுகிறார்கள், மாமனார் மாமியார்களால் கொலையும்கூட செய்யப்படுகிறார்கள். ஆனால், பிரச்சினை ஏற்பட்டுவிடும் என்ற அச்சத்தினாலும் சமூகத்தில் களங்கம் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தினாலும் பெற்றோர்களால் எப்போதாவது அவர்கள் காப்பாற்றப்படுகின்றனர்.

**2005**லிருந்து **2015** வரையில் ஒரு பத்தாண்டுகளாக ஒவ்வொரு நாளும் வரதட்சணை தொடர்பான சம்பவங்களில் சராசரியாக **22** பெண்கள் இறக்கின்றனர். **2015**ஆம் ஆண்டில் மட்டும் வரதட்சணைக் கொடுமையால் **7,634** பெண்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் கூறுகின்றன. உலகத்திலேயே அதிக சிசுக்கொலை சம்பவங்கள் நடைபெறும் நாடு இந்தியா. ஆட்களைக் கடத்துதலில் **2016**இல் அதற்கு முந்தைய ஆண்டைவிட கிட்டத்தட்ட **25** சதவீதம் அதிகரித்திருக்கிறது. இதற்கு கிட்டத்தட்ட **20,000** பெண்களும் குழந்தைகளும் பலியாகியுள்ளனர் என அரசாங்கப் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. (ரூட்டரஸ், **9** மார்ச் **2017**)

இவை யாவும் மேலோட்டமாகப் பார்க்கையில் வெறும் எண்ணிக்கை மட்டுமே. உண்மை நிலவரம் இரத்தத்தை இன்னும் உறைய வைப்பதாகவும் அதிர்ச்சியடைய வைப்பதாகவும் இருக்கின்றது. டிசம்பர் **16, 2012**இல் டில்லியில் ஓடும் பேருந்தில் கூட்டு பலாத்காரம் செய்யப்பட்டு, உண்மையில் மிருகத்தனமாக துன்புறுத்தப்பட்டு, இறுதியில் மாய்ந்துபோன, துணிச்சலான பெண் என பேசப்பட்ட பார மெடிகல் மாணவியான நிர்பயாவின் பெயரை ஒவ்வொரு இந்தியரும் மறந்திருக்க மாட்டார்கள். நாடு முழுவதும் நடைபெற்ற மிகப் பெரும் போராட்டங்கள் காரணமாக அரசாங்கம் சில புதிய கடுமையான சட்டத்தை **2013**இல் கொண்டு வந்தது. **2014**இல் மத்தியில் வந்த ஒரு புதிய அரசாங்கம் கற்பழிப்பவர்களுக்கு எதிரான விரைவான நடவடிக்கை எடுக்கப்படும் என்ற, அவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும் என்ற உத்தரவாதத்தை உரத்த குரலில் அறிவித்தது. இதன் பின்னணியில், **2017**, மே **11** அன்று அருகாமையிலுள்ள நகரத்திலிருந்து மே, **9** அன்று காணாமற்போன **23** வயது மதிக்கத்தக்க ஒரு பெண் அதே போல் உருக்குலைக்கப்பட்டு, சிதைந்துபோன உடல் வடக்கு மாநிலத்தில் மீண்டும் கண்டெடுக்கப்பட்டது. அவள் கூட்டு பலாத்காரம் செய்யப்பட்டு கொடூரமாகக் கொலை செய்யப்பட்டிருக்கிறாள். எண்ணிலடங்காமல் நடக்கும் இத்தகைய நிகழ்வுகள் யாவும் மேற்கண்ட சம்பவங்கள் ஏதோ இங்கொன்றும் அங்கொன்றுமாக நடப்பவை அல்ல என்பதை நிரூபிக்கின்றன.

சில சம்பவங்களில் சாதாரண குழந்தைகளே நெருங்கிய உறவினர்களால், வழக்கமாக நம்பிக்கையுடன் நெருங்கிப் பழகக்கூடிய வயதான அண்டைவீட்டார்களால் பாலியல் துன்புறுத்தல்களுக்குள்ளாகி கற்பழிக்கவும் படுகிறார்கள். இது போன்ற சம்பவங்களில் மைனர் பெண்கள் கர்ப்பமடைந்து, அவளது குடும்பத்தார் வழக்குப் பதிவு செய்கின்றனர். பெரும்பாலும் குற்றவாளியானவர் அவரது குடும்பத்தாருடன் சேர்ந்துகொண்டு பாதிக்கப்பட்டவளின் குடும்பத்தினரை மிரட்டவும் செய்கின்றனர்.

ஆசிரியர்கள், பாதுகாவலர்கள் எனப்படுபவர்கள், ஏன், பள்ளி உதவியாளர்கள்கூட மாணவர்களையும் குழந்தைகளையும்கூட பாலியல் ரீதியில் பயன்படுத்துவதில் பின்தங்கியிருக்கவில்லை. பள்ளி மற்றும் கல்லூரிகளில் உயர்ந்த மட்டத்தில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கிடையேயான உறவின் புனிதத்தன்மை வெற்றிடமாக்கப்பட்டு சீரழிந்துள்ளது. வகுப்பறையில் தேர்ச்சி, தகுதிக்கும் மேலாக அதிக மதிப்பெண்களைப் பெற்றல், தகுதியற்ற மாணவர்களுக்கு ஆராய்ச்சிப் பட்டங்கள் வழங்கல் போன்ற பிற அற்ப நலன்களுக்காகச் செயல்படுதல் கல்வித்துறையில் காணப்படுகின்றன. இவற்றில் மேலோங்கி நிற்பது பணமும் பாலியல் ரீதியில் மாணவிகளை பயன்படுத்துவதும் ஆகும். ஒரு பள்ளியின் முதல்வர் நிச்சயமான தேர்ச்சி வழங்கிட ஒரு பெண் மாணவியின் தந்தையிடம் லஞ்சமாக கேட்டு நிர்ப்பந்தப்படுத்திய விதம் இதற்கான ஒரு பயங்கரமான உதாரணமாகும். அந்த முதல்வர் அப்பெண் மாணவியை தனியறைக்குள் அழைத்துச் சென்று உடனிருந்த இரு பெண்கள் உதவியுடன் கற்பழித்துவிட்டு, பின்னர் அவளுக்காக இன்னொருவரை ஏற்பாடு செய்து பரிட்சை எழுத வைத்திருக்கிறார். இன்னொரு சம்பவத்தில், மதிப்பு வாய்ந்த ஒரு பல்கலைக்கழக நிர்வாகத்துடன் நல்ல தொடர்பில் இருந்த பேராசிரியர் ஒருவர் மாணவர்களுடன் பாலியல் ரீதியில் தவறான நடத்தை கொண்டிருந்தார் என குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார். ஆனால், சில மணி நேரத்திலேயே அவருக்கு ஜாமீன் கிடைத்துவிட்டது. இதைப்போன்ற அசிங்கமான சம்பவங்கள் குடும்பங்களுக்குள்ளும்கூட நடக்கின்றன. ஒரு இளம் மனிதர் தன் மருமகளை தொடர்ந்து கற்பழித்துவிட்டு அவளை மிரட்டியிருக்கிறார். ஒரு தந்தை தன் மகளை கற்பழித்ததற்காக தண்டனையடைந்திருக்கிறார்.

மேற்கத்திய நாடுகளில் நடந்த போராட்டங்கள், பிரபலங்களால் பாலியல் ரீதியில் தொடுக்கப்பட்ட கடுமையான எண்ணற்ற சம்பவங்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்தன. மிடூ (நானும்கூட) என்ற இயக்கத்தால் உந்தப்பட்ட மேற்குவங்கத்தைச் சேர்ந்த படித்த பெண்கள் ஒன்றுகூடிய ஒரு கூட்டத்தில், அவர்களுக்கு நன்கு பரிட்சயப்பட்டவர்களால், அண்ணன்களால், மாமன்களால், மிகவும் நம்பகமான வேலையாட்களால், பாதுகாவலர் போல உள்ள அண்டைவீட்டார்களால், தந்தையர்களால்கூட பல்வேறு வடிவத்தில் பாலியல் ரீதியில் அவர்கள் எவ்வாறு கொடுமைகளுக்கு ஆளானார்கள் என்பதைப் பற்றிப் பேசினார்கள்.

இதைப்போன்றே, மூத்த பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் பரிதாபகரமானது. திருமணமான **40** வயது மதிக்கத்தக்க, ஒரு ஹோட்டலில் வேலை பார்க்கும் மேற்கு மாநிலத்தைச் சேர்ந்த ஒரு பெண் **6** பேர்களால் கூட்டு பலாத்காரம் செய்யப்பட்டு, அதன் வீடியோ சமூக வலைதளத்தில் பரவவிடப்பட்டது. முகநூலில் பெண் நண்பர் தன்னை திருமணம் செய்ய மறுத்ததற்காக, ஆட்சேபனைக்குரிய புகைப்படங்களை சமூக வலைதளத்தில் பதிவேற்றம் செய்யத் துவங்கிய மேற்கு கொல்கத்தாவைச் சேர்ந்த ஒரு கல்லூரி மாணவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். கிராமத்துப் பெண் ஒருவர் தனது கைபேசியை தொலைத்துவிட்டார். அதைக் கண்டெடுத்த அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் அதில் ஆட்சேபனைக்குரிய அவளது புகைப்படங்களை சமூக வலைதளத்தில் பதிவேற்றம் செய்துவிட்டார். இதற்கான பொறுப்பு நான்கு இளைஞர்கள் என்பதை சம்மந்தப்படுத்தி, அதைப் பதிவு செய்ததுடன் அப்பெண் தற்கொலை செய்துகொண்டார். அந்த இளைஞர்கள் பின்னர் கைது செய்யப்பட்டனர். இதுபோன்ற சம்பவங்களின் பட்டியல் நிச்சயம் அதிகமாக இருக்கும்.

அரசாங்கங்களும் சில சமயங்களில் ஊடகங்களும் எவ்வாறு திறமையாக, விரைவாக, குற்றவாளிகள் போக்சோ சட்டப்படி (POCSO- Prevension of Children against Sexual Offences) நீதி விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறார்கள் எனக் காட்டிட முனைகின்றன. சட்டத்தை இயற்றுபவர்களின் கூற்றுக்கு மாறாகவே பெரும்பாலும் நிலவரங்கள் உள்ளன. ஆக, அண்டை வீட்டுப் பணக்காரரின் மகன், அவரது குடும்ப உறுப்பினர் மற்றும் வட்டார காவல்துறையிடம் தொடர்பிலிருக்கும் ஒரு ரௌடிகூட ஒரு ஏழைப் பெண்ணை பாலியல் பலத்காரம் செய்யலாம். அப்பெண் காவல்துறையில் புகார் செய்யத் துணிந்தால், அவனும் அவனது நண்பர்களும் மற்றும் உறவினர்களும்கூட பாதிக்கப்பட்டவரையும் அவரது குடும்பத்தாரையும் தொடர்ந்து அச்சுறுத்துகின்றனர். காவல்துறையே புகாரைத் திரும்பப்பெறுமாறும், வாய்மூடியிருக்குமாறும் பாதிக்கப்பட்டவர்களை அறிவுறுத்துகிறது. பாதிக்கப்பட்டவர்கள் இவ்விஷயத்தை மேலும் தொடர்ந்திட நினைத்தால் பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தினர் அல்லது அவர்களின் நலனில் அக்கறைகொண்டு முயற்சியெடுப்பவர் உயிரிழக்க நேரிடும். இதுபோன்ற சம்பவமும் நடந்துள்ளது. ஒரு நகரத்தின் வெளியேயிருக்கும் வட்டாரத்தில், அவ்வாட்டாரத்திலிருக்கும் ரௌடிகள், அதிகாரத்தைப் பயன்படுத்தி வெகுஜனங்களை அச்சுறுத்தி வைத்துக்கொண்டு, இளம் பெண்களைத் தொடர்ந்து கொடுமைப்படுத்தியும் மானபங்கப்படுத்தியும் இருக்கின்றனர். ஒரு துணிச்சல் கொண்ட இளைஞர் இத்தகைய அச்சுறுத்தல் ஆட்சிக்கு எதிராக மக்களைத் திரட்ட முயற்சித்தார். அவர் தனிமைப்படுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டார். அனைத்து அதிகாரமும் படைத்த இந்த ரௌடிகளுக்கு ஆளும் கட்சியின் ஆசிகள் உண்டென்பது மக்களுக்குத் தெரிந்திருந்தது.

இதுபோன்ற வேறுவகை சம்பவங்களும் நடைபெறுகின்றன. நாட்டின் சில இடங்களில் நடந்துகொண்டிருக்கும் ஆணவக் கொலைகளில், வேறு மதத்தைச் சார்ந்த, அல்லது வேறு ஜாதியைச் சார்ந்த ஒரு பையனையோ, நபரையோ காதலித்ததற்காக, அல்லது திருமணம் செய்துகொண்டதற்காக பெரும்பாலும் பெண்களே காரணமாக்கப்பட்டு கொலை செய்யப்படுகிறார்கள். இன்னொரு வகையான சம்பவமும் செய்தியாக வெளிவந்துள்ளது. ஓர் ராணுவவீரர் பிலாய் நகரில் இருக்கும் மாநில அளவிலான ஒரு குத்துச்சண்டை வீராங்கனையை போலீஸ் வேலைக்கான ஆள் சேர்ப்பில் உடற்தகுதி தேர்ச்சி பெற ஆலோசனை தருகிறேன் என ஆசைகாட்டி பாலியல் பலாத்காரம் செய்தார் என்று குற்றம் சாட்டப்பட்டதால் அவரும் அவரது குடும்பத்தாரும் வீட்டை காலி செய்துவிட்டு வெளியேறியிருக்கின்றனர்.

இந்தியாவின் வடக்கேயுள்ள ஒரு மாநிலத்திலிருக்கும் இன்னொரு கிராமத்தில் பெண்ணொருவர் மற்றொரு ஆணுடன் ஓடிவிட்டார் என்பதற்காக அப்பெண்ணை பொது இடத்தில் வைத்து அடித்ததற்காக அப்பெண்ணின் கணவனும் இன்னும் இருவரும் பஞ்சாயத்தார் தீர்ப்புப்படி கைது செய்யப்பட்டனர். அவர்கள் அப்பெண்ணை பொது இடத்தில் ஒரு மரத்தில் கட்டிவைத்து அடித்திருக்கின்றனர்.

இத்தகைய தகவல்களும் சம்பவங்களும் தங்களின் குடும்பத்திற்குள்ளும் வெளியிலும், இந்தியாவில் பெண்கள் குற்றங்களின், குற்றவாளிகளின் இறுக்கமான பிடியில் எவ்வாறு வாழ்ந்திட வேண்டியுள்ளது என்பதைக் கோடிட்டுக்காட்டுகின்றன. குடும்பத்துகுள்ளேயும் நிச்சயமாக குடும்பத்துக்கு வெளியிலும் பெண்களின் நிலைமை மேலும் மேலும்

தொடர்ச்சி 5ம் பக்கம்

## மனித நாகரிகத்தின் கட்டுக்கோப்பை அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் . . .

# குற்ற எண்ணிக்கை பெருகிவிட்டது, அதிர்ச்சியளிக்கும் வகையில் குற்றங்களும் மிருகத்தனமும் ஈவிரக்கமற்ற கொலைகளும் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன

4ம் பக்கத் தொடர்ச்சி

பாதுகாப்பற்றதாக ஆகி மிகவும் மோசமடைந் திருக்கிறது. வேலைக்கு அல்லது பிறவற்றிற்காக வெளியில் செல்லும் பெண் குழந்தைகள் பாதுகாப் பாகத் திரும்பி வருவார்கள் என்ற உத்தரவாதத்தை அப்பெண்களின் பாதுகாவலர்களுக்குத் தரமுடிய வில்லை. உரத்த குரலில் எக்காளமிட்டுப் பேசியும், பேடி படோவ், பேடி பச்சாவ், அதாவது பெண்கள் படிக்கட்டும், அவர்களைப் பாதுகாப்போம் மற்றும் கன்னிகாஸ்திரீ, ரூபாஸ்திரீ அதாவது கன்னிப் பெண்களுக்கு மணமாகட்டும் மற்றும் இதுபோன்ற அனாவசியமான திட்டங்களுக்கு பொதுப்பணத்தை வீணடித்தும் வருகின்ற ஆட்சியிருக்கும் அனைத்து அரசியல் கட்சிகள் ஆட்சி புரியும் மத்திய, மாநில அரசாங்கங்கள் இருந்தபோதிலும் இவையாவும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இத்துடன், பாரம்பரிய பழக்கவழக்கங்கள் தொடர்ந்துகொண்டு வேரூன்றியிருக்கும் நம்மைப் போன்றதொரு நாட்டிலுள்ள குடும்பங்களில் அவை ஆணாதிக்க மனப்பான்மையினாலும் மேலாதிக்கத்தினாலும் பெரும்பாலும் கட்டுப்படுத்தப்படுத்தப்படுகின்றன. அவைகளை வெளியில் சொல்வது ஒருபுறமிருக் கட்டும், குடும்பத்திற்குள் நடக்கும் வன்முறையை ஒரு குற்றமாக ஏற்றுக்கொள்வதைக்கூட அது தடுத்துவிடுகிறது.

### கொடூரச் சம்பவங்கள்:

#### சிறுபான்மையினர் அவமானப்படுத்தப்படுகின்றனர், தலித்துக்கள் தாக்கிக் கொலை செய்யப்படுகின்றனர், மனிதர்கள் கடத்தப்படுகின்றனர்

மாட்டிறைச்சியை உண்டார் எனும், பசுவைக் கொலை செய்தார் எனும் பல பொய்யான குற்றச் சாட்டுக்களின் அடிப்படையில் சிறுபான்மையினர், தலித்துக்கள் அடித்துக் கொலைசெய்யப்பட்டனர். பாஜக ஆட்சியின்போது, வேறு மதத்தினருடனான திருமணங்கள் என்ற குற்றச்சாட்டுகளின் அடிப் படையில் சிறுபான்மை மதத்தினருக்கு எதிரான "லவ் ஜிகாத்" குற்றங்கள் என்ற ஒரு பிரச்சாரம் முன்வைக்கப்பட்டு, இந்து மதத்திலிருந்து இஸ்லாம் அல்லது கிருஸ்துவ மதத்திற்கு மதம் மாறினர் எனக் குற்றம் சாட்டப்பட்டது. இவையாவும் தற்போதைய பாஜக அரசாங்க ஆட்சியின் கீழ் வன்முறை கொலை வெறித் தாக்குதல்கள் நடப்பதற்கு மேலும் தூண்டு தல்களாக ஆகிவிட்டன.

பாஜக ஆளுகின்ற 5 மாநிலங்களில், 2014லிருந்து 2016 வரையில் தலித்துக்களுக்கு எதிரான குற்றங் களின் விகிதம் அதிகம் எனவும், குற்றவாளிகள் மீதான தண்டனை விகிதம் 2010இல் 35%ஆக இருந்தது 2015இல் 28% ஆகக் குறைந்துவிட்டதென தேசிய குற்றப் பதிவேட்டுத் துறை (என்சிஆர்பி– National Crime Recods Bureau) கூறுகிறது. (ஆதாரம் லைவ் மின்ட் 08.01.2018)

நாம் ஒரு குறிப்பிட்ட "லவ் ஜிகாத்" நிகழ்வை கூறினாலே போதும். வேறு எதனையும் கூறத்தேவை யில்லை. ராஜஸ்தான் மாநிலத்தில், புலம் பெயர்ந்த ஒரு முஸ்லீம் தொழிலாளி பலர் முன்னிலையில் மிருகத்தனமாக கொலைசெய்யப்பட்டிருக்கிறார். பலியானவர் ஒரு ஹிந்து பெண்ணுடன் கள்ளத் தொடர்பு வைத்திருந்ததற்காகத்தான் அவரைக் கொலை செய்தாரென்பதை நியாயப்படுத்து வதற்காக கொலை செய்ததை வீடியோ படமெடுத் ததாக பெருமையுடன் வாதிட்டிருக்கிறார். நாடு முழுவதும் இது பரவியதால், இச்சம்பவம் ராஜஸ்தான் அரசாங்கத்திற்கும் காவல்துறைக்கும் நெருக்கடியை ஏற்படுத்தியது. இறுதியில், அதன் காவல்துறை அவ்வழக்கை விசாரித்து எவரது கௌரவத்தைக் காப்பாற்றிட அவர் அம்மனிதரைக் கொலை செய்தாரோ, அவரே அவரது "இந்து மத சகோதரி"யுடன் கள்ளத்தொடர்பு கொண்டிருந்தார் என்பதைக் கண்டுபிடித்தது. (டைம்ஸ் ஆஃப் இந்தியா, 15 ஜனவரி 2018) முந்தைய குற்றச்சம்பவம் பிரசாரம் செய்து தீவிரமாகப் பரப்பப்பட்டது போல், இவ்வுண்மை பரப்பப்படவில்லை.

ஆட்கடத்தல் என்பது ஒரு செழிப்பான வியாபார மாக மாறிவிட்டது. இது பல வடிவங்களில் மறை முகமாக நடப்பதால் பெரும்பாலும் இதைக் கண்டு பிடிக்க முடியாமல் போகிறது. அதற்கான ஆதாரமாக இங்கே ஒரு உதாரணத்தைத் தருகிறோம். இந்தியாவின் வடக்கேயுள்ள ஒரு மாநிலத்தில் இரு ஏழை பெண் ரூபாய் 22,000த்திற்கு ஏலமிடப்பட்டிருக்கிறாள். அவளை விலைக்கு வாங்கியவர் அவளைத் திருமணமும் செய்துகொண்டிருக்கிறார். ஆனால், அப்பெண்ணை ஏலத்திற்கு விட்ட இரண்டு இளம் வயது சகோதரர்கள் ஏலப்பணம் தராததற்காக, ஏலத்திற்கு எடுத்தவர் வீட்டை அதிரடி சோதனை செய்து அப்பெண்ணை மீட்டு வந்திருக்கின்றனர். ஏலம் எடுத்தவரை அருகாமையிலுள்ள மரத்தில் கொலை செய்து தொங்கவிட்டிருப்பது கண்டறியப் பட்டது. இவ்விஷயத்தில் காவல்துறை அந்த இரண்டு சகோதரர்களுக்கு ஆதரவாகவே இருந்தது.

#### இந்திய நாட்டுக்கு வெளியில் நடக்கும் கொடூரச் சம்பவங்கள்

இத்தகைய கொடூரச் சம்பவங்கள் இந்தியாவில் மட்டும் நடக்கவில்லை. ஏற்கனவே குறிப்பிடப் பட்ட மிடு இயக்கமானது இவ்விஷயத்தில் தொடர்புடைய அமெரிக்கா, ஐரோப்பாவிலிருக்கும் ஆக உயர்ந்த மட்டத்திலிருக்கும் பிரபலங்களின் பட்டியலைத் தந்திருக்கிறது. அமெரிக்காவில் மட்டுமே பல்வேறு வடிவத்திலான குற்றங்களும் கொடூரச் செயல்களும் நடைபெறுகின்றன. துப்பாக்கி எளிதாகக் கிடைப்பதால், கடுமையான துப்பாக்கிப் பயன்பாட்டுச் சட்டத்திற்கு சக்திவாய்ந்த துப்பாக்கி வியாபாரி களின் செல்வாக்கு ஒரு தடைக்கல்லாக இருப்பதால், துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்வது அங்கே சர்வ சாதாரணம். தனியொருவன் அப்பாவி மக்கள் மீது குண்டுமழை பொழியும் சம்பவங்கள் மீண்டும் மீண்டும் நடைபெறுகின்றன. பல சம்பவங்களில் அவ்வாறு கொலை செய்யப்படுபவர்கள் பள்ளிக் குழந்தைகளாகவும் ஆசிரியர்களாகவும் இருக்கின் றனர். அவர்கள் அவர்களின் வளாகத்தினுள்ளேயே, வகுப்பறைக்குள்ளேயே கொல்லப்படுகின்றனர். மிகவும் வெறுக்கத்தக்க உண்மையாதெனில், அத்தகைய தாக்குதலை நடத்துபவருக்கு எவ்வித மனக்கிலேசமோ மன வருத்தமோ இருப்பதில்லை. மாறாக, அவர்களின் இத்தகைய பயங்கரமான தவறான நடவடிக்கைக்காக ஆனந்தப்பட்டுக்கொள் வதாகத் தெரிகிறது. இத்தகைய கோரச் சம்பவங்கள் நடைபெற்றதன் பின்னர், சமீப காலமாக பொது மக்கள், குறிப்பாக இளம் மாணவர்களும் அவர் களது குடும்பத்தினரும் மனமுடைந்திருக்கின்றனர் எனத் தெரிகிறது.

அந்த நாடு முழுவதிலுமுள்ள பள்ளிகளில் 17 நிமிட 'வெளிநடப்பு' நடந்திருக்கிறது. அதனைத் தொடர்ந்து கடந்த ஆண்டு மார்ச், 25 அன்று அமெரிக்காவின் கிட்டத்தட்ட அனைத்து முக்கிய நகரங்களில் மிகப்பெரும் ஊர்வலங்கள் நடை பெற்றுள்ளன. வாஷிங்டன் டிசியில் 8,00,000 பொதுமக்கள் கலந்துகொண்டதாக மதிப்பிடப் பட்டிருக்கிறது. "எங்களின் உயிர்களுக்கான பேரணி" (March for Our Lives) என அழைக்கப்பட்ட ஒரு மக்களின் போராட்டமாக அமைந்த அது வாஷிங்டன் டிசியில் இருக்கும் அமெரிக்க தலைமை யகத்தை குறிவைத்த பேரணியாக அமைந்தது. அதாவது அரசாங்கத்தையும் சட்டமியற்றுபவர் களைக் குறிவைத்த பேரணியாக அமைந்தது.

மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் பங்கெடுத்த அப்பேரணிகள் கடுமையான துப்பாக்கிப் பயன் பாட்டுச் சட்டம் கொண்டுவர வேண்டும் என்றும், அதிக எண்ணிக்கை தோட்டாக்களைக்கொண்ட மேகசைன்களை விற்பதை தடைசெய்ய வேண்டும் என்றும் மற்றும் துப்பாக்கி வாங்குபவரின் பின்னணி குறித்த அனைத்து சோதனைகளும் செய்யப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். பேரணியில் உரையாற்றிய 11 வயது மாணவர் காலாவதியாகிப்போன அடையாள அட்டை வைத்துள்ள எந்த மாணவனும் துப்பாக்கிக் கடைக்குள் நுழைந்து துப்பாக்கிகளை வாங்குகிறான் எனக் குற்றம் சாட்டியுள்ளார். "பாதுகாப்பு எங்கிருக் கிறது? 'நமது பள்ளிக்குள் நாம் முழுமையான பாதுகாப்புடன் இருக்கிறோமா?' வகுப்பறைக்குள் எவ்வாறு பாதுகாப்பைக் கொண்டுவரப்போகிறோம்" என அவள் கேட்டிருக்கிறாள். குடியுரிமைக்காகப் போராடியவர்களின் அடையாளமாகத் திகழக் கூடிய மார்ட்டின் லூதர் கிங்கின் 9 வயது பேத்தி, "தனது நான்கு சின்னஞ்சிறு குழந்தைகளின் உடல் தோலின் வண்ணத்தை வைத்து எதையும் தீர்மானிக்கக்கூடாது, ஆனால் அவர்களின் உள்ளடக் கத்தை வைத்துத்தான் தீர்மானித்திட வேண்டும்" எனக்கூறிய அவளது தாத்தாவின் கனவினை நினைவுகூர்ந்தாள். மெய்மறந்து கேட்டுக்கொண்டி ருந்த கூட்டத்தினரிடம் "எனக்கொரு கனவொன்று இருக்கிறது, நான் இனியும் பொறுத்துக்கொள்ள முடியாது" என்று கூறினாள்.

2014இல் அமெரிக்காவில் நடந்த "வன்முறை கொள்கை மையம்" (Violence Policy Centre) என்ற ஒரு கருத்துக்கணிப்பு, துப்பாக்கிச்சூட்டுத் தாக்குதலில் பலியாவோர் எண்ணிக்கையில் வெள்ளை அமெரிக்கர்களைவிட கருப்பு அமெரிக்கர்கள் இரு மடங்கு அதிகமெனக் கூறுகிறது. இதைப்போலவே தாக்கப்படுபவர்களின் எண்ணிக்கையில் வெள்ளை நிறப் பெண்களைவிட கருப்பு நிறப் பெண்கள் இருமடங்கு அதிகம். எத்தகைய ஆழமான குற்றங் களும் ஈவிரக்கமற்ற கொலைகளும் அமெரிக்க சமூகத்தினுள் ஊடுருவியிருக்கிறது என்பதை "எங்களின் உயிர்களுக்கான பேரணி" எனும் போராட்டம் காண்பிக்கும் அதே வேளையில், அங்கு வேறுபட்டதொரு ஆரோக்கியமற்ற சூழலும் காணப்படுகிறது. அமெரிக்காவில் ஹூஸ்டன் நகரில் ஒரு தந்தை தனது மகளை சில ஆயிரம் டாலர்களுக்கு விற்பதற்காக இணையதளத்தில் பதிவேற்றம் செய்ததற்காக கைது செய்யப்பட்டி ருக்கிறார். அவரது மகள் 10 வயதிற்கும் குறை வானவள். ஐரோப்பாவின் பிரான்ஸ் நகரத்தில் 2015இல் மற்றும் 2017இல் நடந்த ஐஎஸ் தீவிர வாதத் தாக்குதலால் இறந்தவர்கள் 250 பேருக்கும் அதிகம். சமீபத்தில் மேற்கு பிரான்சின் ஒரு சிறிய நகரத்தில் சூப்பர் மார்க்கெட்டில் மார்ச் 23 அன்று 3 பேர் துப்பாக்கியேந்திய ஒருவனால் கொல்லப் பட்டனர். அதன் பின்னர் அவன் ஒரு வாகனத்தை பலவந்தமாகக் கைப்பற்றியபோது மேலும் ஒருவரும் கொல்லப்பட்டார்.

பிரதானக் கருத்தை வலியுறுத்துவதற்கான ஒரு சில குறிப்பிடத்தக்க, முக்கிய நிகழ்வுகள் மட்டுமே மேலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது தவிர, அப்பாவி சிறார்களையும் பெண்களையும்கூட பணயக் கைதிகளாக வைத்து வெடிகுண்டுத் தற்கொலைத் தாக்குதல் தொடுத்தல், தொழுகை மண்டபங்களில்கூட அப்பாவி ஆண்களை, பெண்களை மற்றும் குழந்தைகளை மொத்தமாகக் கொல்லுதல் போன்ற மிகக்கொடிய குற்றங்களை ஈராக், சிரியாவில் ஐஎஸ் பயங்கரவாத அமைப்பு களும் நைஜீரியாவில் பொகொ ஹரம் அமைப்பு களும் அவர்கள் விரும்பியவாறு புரிகின்றன.

இவைகளைப்பற்றிய முழு விபரங்களை சொல்லா மல் சுருக்கமாகக் கூறுவதானால், இத்தகைய அனைத்து பயங்கரவாத அமைப்புகளையும் ஏகாதி பத்தியவாதிகளே, குறிப்பாக அமெரிக்க ஏகாதி பத்தியமே உருவாக்கியிருக்கிறது என்பதைக் குறிப் பிடுவது அவசியம். மேலும், பயங்கரவாதத்தை எதிர்க்கிறோம் என்ற பெயரில் அமெரிக்க ஏகாதி பத்தியவாதிகளும் அவர்களின் கூட்டாளிகளும் அப்பாவி மக்கள் மீதான அரசு பயங்கரவாதத்தை கட்டவிழ்த்துவிட்டுக்கொண்டு, போர்க்குற்றங்களையும் புரிந்துகொண்டு, அதனை பக்கவிளைவுப் பாதிப்பு (Collateral Damage) எனக் குறிப்பிடுவது நடை பெற்றுக் கொண்டிருக்கும் குற்றங்கள் வரிசையில் மிகவும் ஆபத்தானவையாகும். ஆக, பல்வேறு வடிவங் களில், பல்வேறு விகிதங்களில் அச்சுறுத்தும் வகையில் உலகம் முழுவதிலும் குற்றங்கள் பெருகி வருகின்றன என்பதே உண்மையாக இருக்கிறது.

#### நல்லெண்ணம் கொண்டோர் கவலையுற்றிருக்கையில், அரசு நிர்வாகம் மௌனம்காத்து வருகிறது

இந்தியாவில் நடைபெறும் மேலே விவரிக்கப் பட சம்பவங்கள் உண்மையில் சில உதாரணங்களே. குறைந்தபட்ச நற்சிந்தனை, நாகரிகம் கொண்டவர்

தொடர்ச்சி 6ம் பக்கம்

## மனித நாகரிகத்தின் கட்டுக்கோப்பை அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் . . .

# மிருகத்தனமும் கிரிமினல்தனமும் கொலைகளும் அபாயகர உயரத்தை அடைந்து, மனித இருப்பையே கேள்விக்குறியாக்கியிருக்கிறது

5ம் பக்கத் தொடர்ச்சி

களுக்கு இவையெல்லாம் ஏன் நடக்கின்றன எனும் கேள்விகளை எழுப்பத் தோன்றும். ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிரான வாழ்வா சாவா எனும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது நிச்சயம் நிலைமை இவ்வாறாக இருக்கவில்லை. மத்திய காலகட்டத்தில் இருந்த நிலப்பிரபுக்கள் ஆட்சியில் மத்தியக்கால காட்டுமிராண்டித்தனம் நிலவியது. ஆயினும், இன்றைய நாட்களில் நடந்துவரும் குற்றங்களைப்போல் ஒரு அம்சத்தில் அன்றைய நாட்களில் நடந்த குற்றங்கள் அந்த அளவிற்கு மிக மூர்க்கத்தனமாகவோ, பயங்கரமானதாகவோ, ஈவிரக்கமற்றதாகவோ இருக்கவில்லை. மாறாக, அதிகரித்துவந்த தேசியவாத எழுச்சியானது அத்தகைய குற்றங்கள் நடைபெறுவதற்குத் தடையாக இருந்தது. நாடு படிப்படியாக முன்னேறிச்சென்று விடுதலையைப் பெற்றது. வளர்ந்திட விரும்பிய ஒரு இறையான்மை கொண்ட நாடாக எழுபதுக்கும் மேலான வருடங்களை கழித்திருக்கிறது.

நிலைமை மோசமான கட்டத்திற்குச் செல்லு மளவிற்கு என்ன நடந்தது? அனைத்து மதிப்புணர்வு களும் எங்கு சென்றது? மக்கள் ஏன் பொறுப் பற்றவர்களாக ஆகி வருகின்றனர், ஏன் மனித நேயம், மரியாதை குறித்த சாதாரண நியதிகளை காற்றில் பறக்கவிடுவது மட்டுமில்லாமல், ஏன் வெறிபிடித்து சட்டத்தை மதிக்காமல் இருக்கின்றனர். குற்றங்களின் விகிதம் ஏன் அதிகரித்தவண்ணம் இருக்கிறது? அரசாங்கங்களும் அவைகளின் நிர்வாகங்களும் இதில் பரிதாபகரமாகத் தோல்வி யடைந்திருப்பதை இது காட்டவில்லையா? அல்லது இதில் அவர்களுக்கும் பங்குண்டா? உண்மையில், நிர்வாகத்தின் மற்றும் அரசாங்கத்தின் அனைத்து மட்டத்திலும் பரவிக்கிடக்கும் ஊழலானது, பெரும் பாலான விஷயங்களில் குற்றவாளிகள் அவை களுடன் கூட்டு சேர்ந்து செயல்படுகிறார்கள் என்பதையே உறுதி செய்கிறது.

மேலே குறிப்பிட்டவாறு, போக்சோ சட்டத்தின் கீழ் கைதுகள் நடைபெறுகின்றன. ஆனால், பாதிக்கப் பட்டவர் ஏழைக் குடும்பத்திலிருந்து வந்தால் அல்லது தாக்கியவர் வசதி படைத்தவராக இருப்பாரேயானல், பெரும்பாலும் காவல் துறையும் நிர்வாகமும் வழக்குப் பதிவு செய்ய மறுப்பதில்லையா? தரமற்ற போலீஸ் விசாரணை, குறிப்பாக அத்தகைய விசாரணைகள் பணம் படைத்த அத்துமீறல்காரர்களின் வழிகாட்டு தல்படி நடைபெறுவதால், இது பாலியல் பலாத்கார வழக்குகள் வெற்றியடைவதன் விகிதம் குறைவதற்கு இட்டுச்செல்லவில்லையா? வழக்கு விசாரணைகள் செல்வாக்கு மிகுந்த குற்றம் சாட்டப்பட்டவர்கள் மற்றும் ஆர்வமற்ற அரசு வழக்கறிஞர்களால் சமரசம்கூட செய்துவைக்கப்படுவதில்லையா?

இவர்கள் சாமானிய மக்களின் மனக்குழப்பத்தை, பாதுகாப்பின்மையை மற்றும் நிராதரவற்ற உணர்வை அதிகரித்திடும் வகையில் அவர்களின் மனதை சீரழித்து வருகின்றனர். அவர்கள் வழி தெரியாமல் தட்டுத்தடுமாறிக்கொண்டிருக்கின்றனர். நகரங் களாக இருந்தாலும், சிறு நகரங்களாக இருந்தாலும் அல்லது கிராமங்களாக இருந்தாலும் பெரும்பாலான வழக்குகளில் பணம், சமூக அந்தஸ்து மற்றும் அரசியல் காரணங்களினால் அவர்கள் எதுவும் செய்யமுடியாமலேயே போகிறது. மனவெறுப்பின் காரணமாக, இத்தகைய சூழ்நிலை ஒருபோதும் மாறாது என்றும், வேறு வழியே இல்லை என்றும், தொடர்ந்து அச்சுறுத்தும் வகையில் அதிகரித்து வரும் குற்றங்களைத் தடுத்திட வழியேயில்லை என்றும் எண்ணிடத் தோன்றும். ஆகவே, இவ்விஷயம் குறித்த ஒரு சில வார்த்தைகளைக் கூறுவது தேவைப்படுகிறது.

### நிலைமை இத்தகைய கோர வடிவத்தை எடுப்பதற்கு எது காரணம்?

தகவல்கள் நிரூபிப்பது போல், குற்றங்கள் மிகவும் அதிகரித்திருக்கின்றன. கிரிமினல்களும் அதிகரித் திருக்கின்றனர். சந்தேகத்திற்கிடமின்றி இது அச்சமடையக்கூடிய ஒன்றுதான். ஆனால், பிறப்பிலேயே ஒருவன் குற்றவாளியாகப் பிறப்ப தில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அதற்குக் காரணம் அவனது சுற்றுப்புற சூழல் மற்றும் அவனது குடும்பம் உள்ளிட்ட சமூகம்தான். இவற்றிலிருந்துதான் அவன் கற்றுக்கொள்கிறான். மனிதர்களைக் குற்றம் புரியத் தூண்டுவது இத்தகைய சக்திகள்தான். நாட்டின் பொருளாதார அமைப்பு, விரிவடைந்துகொண்டேயிருக்கும் சமூகப்பாகு பாட்டுப் பிளவினால்தான் நிலைத்துகொண்டிருக் கிறது. காரணம், இந்த பொருளாதார அமைப்பு தான் பெரும்பான்மையினரைச் சுரண்டி, விரல் விட்டு எண்ணவிடக்கூடிய ஒரு சிலரை கொழுக்க வைத்துக்கொண்டிருக்கிறது. இவ்வாறாக, அத்தகைய விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் உலகின் ஆகச்சிறந்த பணக்காரர்களில் ஒருவராக ஆகிட செல்வத்தில் மிதக்கிறார்கள். சிலர் அவர்களிட மிருந்து சில உரிமைகளையும் சாதகங்களையும் அனுபவிக்கின்றனர். அவர்களிடம் செல்வமிருப்ப தால் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்கிறார்கள்.

இத்தகைய சொற்ப எண்ணிக்கையிலிருப்பவர் களுக்கு நேர் மாறாக, எண்ணற்ற குழந்தைகள் மனிதர்களைவிடக் கேவலமான வாழ்நிலைமை யில் வளர்கின்றனர். பிறந்த நாள் முதற்கொண்டே அவர்கள் வறுமையை எதிர்கொள்கிறார்கள். அசுத்த மான குடிசைகளில்தான் வாழ்கின்றனர். தேவையான சமயத்தில் அவர்களுக்கு மருத்துவ வசதி கிடைப் பதில்லை. இவர்களுக்கு முறையான கல்வியும் கிடைப்பதில்லை, இவர்களுக்கு வேலை கிடைப் பதில்லை, வேலைப் பாதுகாப்பும் இல்லை. எனவே, பணிபுரியும் பெண்களும், மாணவர்களும் குற்றவாளிகளுக்கும் மற்றும் குற்றத்திற்கும் சுலபமாகப் பலியாகிவிடுகின்றனர். அப்படிப் பலியாகிப்போகிறவர்கள் இருவகையில் பாதிப் படைகின்றனர். முதலில், குற்றவாளிகளினால் பாதிக்கப்படுகின்றனர். பின்னர், அவர்களுக்கு ஆதரவாக இருக்க நிர்வாகம் மறுப்பதால் பாதிக்கப் படுகிறார்கள். மிக ஏழைகளாக இருப்பவர்கள்தான் மிகவும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். மற்றொருபுறம், கௌரவமான வாழ்வாதாரம் கிடைக்கப்பெறாத தாலும், கிரிமினல்கள், நிர்வாகம் மற்றும் பணம் படைத்தவர்களின் கூட்டினை எதிர்கொள்வதாலும், அவர்களுடன் சமரசம் செய்திட நிர்ப்பந்தப் படுத்தப்படுவதாலும் இறுதியில் அவர்கள் கிரிமினல் உலகத்தின் சதிவலையிலேயே சிக்குண்டுவிடுகிறார்கள்.

சற்றே வசதிபடைத்தவர்களும்கூட இதில் சிக்கி விடுகின்றனர். கடும் சந்தை நெருக்கடியினால் பொருளாதாரம் தடுமாறிக்கொண்டிருப்பதால், வளர்ச்சியில் மற்றும் தொழில்மயமாவதில் மந்தம் ஏற்படுகிறது. இதனால் வேலையின்மை அதிகரிப்ப துடன் அதற்கிணையாக மக்களின் வாங்கும் சக்தியும் வீழ்ச்சியுறுகிறது. வாழ்வின், வாழ்வாதாரத்தின் முற்றிலும் நிச்சயமற்ற தன்மை, மக்களின் வாழ்வைப் பீடித்துள்ளது. சந்தர்ப்பவாத வாழ்க்கையை விரும்புபவர்கள் மற்றும் கிரிமினல்களும்கூட அரசியலில் செல்வாக்கு செலுத்திவருகிறார்கள். ஊழல், பதவியாசை, பணத்தாசை கீழிருந்து மேல் வரையில் ஒட்டுமொத்த அரசியல் உலகில் ஊடுருவியிருக்கிறது.

சமூகத்தின் ஒட்டுமொத்த கலாச்சார அறநெறிச் சூழல் சீர்குலைக்கப்பட்டு கடும் சீரழிவு ஏற்பட்டி ருக்கிறது. நற்பண்புகளும் நன்நெறிகளும் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் துடைத்தெறியப்பட்டிருக் கிறது. இவைகளுடன் கூடவே, தொலைக்காட்சிகள், திரைப்படங்கள், செல் போன் மற்றும் ஸ்மார்ட் போன்கள் வாயிலாக ஆபாசமும் வன்முறையும் பிரளயமாக கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கின்றன. இளைஞர்கள் உள்ளிட்ட அனைவரும் தனிநபர் தகவல்களைத் தவறாகப் பயன்படுத்தும் மற்றும் தனிநபர் தகவல்களைக் கசிய விடப்படும் அறிகுறிகள் தென்படுகின்றன என ஏற்கனவே அறியப்பட்ட பல்வகைப்பட்ட வெகுஜனத்தொடர்பு சாதனங்கள், சமூக ஊடகங்கள் போன்றவைகளில் மயக்கி ஈர்க்கப்படுகிறார்கள். க்ரைம் சீரியல்கள் என்றழைக்கப்படுபவைகள்கூட, விழிப்புணர்வு எச்சரிக்கை தருகிறோம் என்ற பெயரில், குற்றங்கள் எவ்வாறு ஆயிரமாயிரம் வழிகளில் நடத்தப் படுகிறது என்பதை மக்களுக்கு அறிமுகப்படுத்தி, குற்றக் கலாச்சாரத்தை உயிரோட்டமாக, அமைதி யாக, மறைமுகமாக வைத்துக்கொண்டிருக்கிறது.

இவையாவும் மக்களின் கலாச்சார முது கெலும்பை அழித்தொழிக்கும் நோக்கத்திலேயே செய்யப்படுகின்றன. குறிப்பாக இளைஞர்கள் அநீதிக்கு எதிராகத் தலை நிமிர்ந்து நின்று

தொடர்ச்சி 15ம் பக்கம்

## தோழர் ஜி எஸ் பத்மகுமார் அவர்களுக்குச் செவ்வணக்கம்!



தோழர் பத்மகுமார் அவர்கள் தனது 17வது வயதில் 1978இல் நமது கட்சியில் சேர்ந்தார். இவர் தனது செயல்பாடுகளை திருவனந்தபுரம் மாவட்டத்தில் துவக்கினார். அதன் பின்னர், எர்ணாகுளம் மாவட்டத்தில் கட்சியைக் கட்டி யமைக்கும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப் பட்டது. அவரது மிகப்பெரும் திறமை மற்றும் உயர்ந்த கலாச்சாரத் தரத்துயுடன், அவர் அங்கு நம் கட்சியைக் கட்டியமைக்க இரவுபகல் பாராது உழைத்தார். பெரும் எண்ணிக்கையில் தொண்டர்களை உருவாக்கியதுடன், அம்மாவட் டத்தில் பலம்வாய்ந்த கட்சியமைப்பை அவரால் ஏற்படுத்த முடிந்தது. 1988இல் அவர் மாநிலக் கமிட்டி உறுப்பினர்களில் ஒருவரானார். கூடவே, எர்ணாகுளம் மாவட்டத்துடன் திருச்சூர் மாவட்டத்தையும் கவனிக்க அனுப்பிவைக்கப் பட்டார். அதன் பின் பாலக்காடு மற்றும் மலப்புரம் மாவட்டங்களையும் கவனிக்க அனுப்பப்பட்டார். இவ்வனைத்து மாவட்டங் களிலும், கட்சியமைப்பைக் கட்டுவதில் வெற்றியடைந்தார். அவரது பிரிவின்போது இவர் கொல்லம் மாவட்ட செயலாளராகவும் மாநில செயற்குழு உறுப்பினராகவும் இருந்தார்.

ஓர் விடாப்பிடியான போராட்டத்தின் மூலம் அவர் மார்க்சிசம், லெனினிசம், சிப்தாஸ் கோஷ் சிந்தனையின் பாராட்டுதலுக்குரிய புரிதலை அடைந்தார். அவர் சாமானிய மனிதர்கள் வாழும் வாழ்க்கையை விட்டுவிட்டு, உழைக்கும் வர்க்கத்தின், அதன் கட்சியாகிய எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் நலன்களுக்கு தனிப்பட்ட அனைத்தையும் சமர்ப்பிக்க முயற்சித்து ஒரு கம்யூனிஸ்ட் புரட்சியாளனின் வாழ்க்கையைத் துவக்கினார். இவ்வாறாக, இவரது வாழ்க்கை முறையே பிற தோழர்களுக்கு பின்பற்றும் உதாரணமாக இருக்கும்.

தோழர் பத்மகுமார் அவர்களின் அகால மறைவினால் கேரளா கட்சியானது ஒரு முழுமையான அமைப்பாளரை தலைவரை இழந்து நிற்கிறது. ஈடுகட்ட முடியாத இந்த இழப்பை ஈடுசெய்ய தோழர்கள் கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது ■

# ஃபேஸ்புக்–கேம்பிரிட்ஜ் அனலிடிகா இயங்குமுறை – மக்கள் மீது கட்டற்ற தாக்குதல்; சைபர்நெடிக்ஸின் அப்பட்டமான துஷ்பிரயோகம்

லட்சோப லட்சக்கணக்கான முகநூல் (Facebook) பயன்பாட்டாளர்களின் தகவல்களை (Data) தேர்தல்களின்போது கேம்பிரிட்ஜ் அனலிடிகா என்ற கம்பெனி அரசியல் பிரச்சாரத்திற்காக தவறாக பயன்படுத்தியதாக பிரிட்டிஷ் நாளேடான தி அப்ஸர்வரும் அமெரிக்க நாளேடான தி நியூயார்க் டைம்ஸூம் முதலில் செய்தி வெளியிட்டபோது உலகமே அதிர்ந்தது. இவ்விவகாரம் உலகம் முழுவதும் தலைப்புச் செய்தியானது. இவ்விரு பத்திரிகைகளும் செய்தி வெளியிட்டதைத் தொடர்ந்து பிரிட்டிஷ் தொலைக்காட்சி சேனலான சேனல் 4 ஒரு வீடியோவை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியது. இலங்கையில் தேர்தலில் வேட்பாளராக நிற்கும் ஒருவருடைய ஏஜெண்டுகளாக தங்களை அறிமுகப்படுத்திக்கொண்ட அந்த சேனலின் இரண்டு பத்திரிகையாளர்கள் கேம்பிரிட்ஜ் அனலிடிகா நிறுவனத்தின் (இனி இக்கட்டுரையில் இதனை சிஏ (cambridge analytica) என்றழைப்போம்) தேர்தல் யுக்திகளை ரகசிய வீடியோ மூலம் அம்பலப்படுத்தினர்.

இந்த செய்தி வெளியானதையடுத்து மக்கள் வெகுண்டெழுந்ததால் பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க அரசாங்கங்கள் நடவடிக்கைகள் சில மேற்கொண்டன. யுகே அரசாங்கத்தின் தகவல் ஆணையர் அலுவலகம், தேர்தல் ஆணையம் ஆகிய இரண்டு துறைகளும் சிஏ மற்றும் முகநூல் விவகாரம் தொடர்பாக புலனாய்வு செய்யுமாறு பணிக்கப்பட்டன. யுஎஸ்ஸில் தரவுகள் கசிந்தது தொடர்பாக காங்கிரஸ் விசாரணையைத் துவக்கியது. முகநூலின் நிறுவனரும் உரிமையாளருமான மார்க் ஸ்ஸுக்கர்பெர்க் தன் முன்பு ஆஜராகி வாக்குமூலம் அளிக்க வேண்டுமென யுஎஸ் காங்கிரஸ் அவரை சம்மன் செய்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற அமெரிக்க அதிபர் தேர்தலில் ரஷ்யாவின் மறைமுக தலையீடு இருந்ததாக ஏற்கனவே எழுந்த சர்ச்சைக்கும் கேம்பிரிட்ஜ் அனலிடிகாவிற்கும் தொடர்பிருக்கிறதா என்று புலனாய்வு செய்ய வேண்டுமென யுஎஸ் காங்கிரஸ் உறுப்பினர்கள் விரும்பினர். இந்த தகவல் கசிவு விவகாரத்தில் ஃபேஸ்புக்கின் பங்கு இருந்தமைக்காக மார்க் ஸ்ஸுக்கர்பெர்க் வேறு வழியின்றி பகிரங்க மன்னிப்பு கேட்குமளவிற்கு மக்களின் விமர்சனம் இருந்தது. இந்த சர்ச்சையை அடுத்து, "முகநூலை நீக்குவோம்" (delete facebook) என்ற பிரச்சாரம் சூடு பிடித்தது. பங்குச்சந்தையில் முகநூலின் பங்குகள் வீழ்ச்சிகண்டன. அதன் வீச்சு இந்திய அரசியலிலும் காணப்பட்டது.

இன்றைய காலத்தில், குறிப்பாக வளர்ந்துவரும் நாடுகளில் மக்கள் மென்மேலும் தங்களின் தினசரி பயன்பாடுகளான பொருட்கள் வாங்குதல், வங்கிச் சேவை, கல்வி, பொழுதுபோக்கு முதலானவைகளுக்கு இணையதள சேவையையே சார்ந்து இருக்கின்றனர். இத்தகைய சூழலில் தனிநபர் தகவல்கள் கசிவு என்பது மிகப்பெரும் பிரச்சினையாகும். இது தனிநபர் விஷயம் மற்றும் பாதுகாப்பு தொடர்புடைய பிரச்சினையாகும். தனிநபர் விஷயம் என்பது தனிநபரின் தகவல்களை பிறருக்குக் கிடைக்கக்கூடாது என்பதாகும். தனிநபர் தகவல்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு மட்டுமே உரித்ததாகும். பூர்ஷ்வா ஜனநாயகம் இதனை மதிக்கிறது. அதனால் தான் மக்கள் இதுகுறித்து அச்சமடைகின்றனர்.

## கேம்பிரிட்ஜ் அனலிடிகா–முகநூல் கூட்டு எவ்வாறு செயல்படுகிறது ?

ஸ்ட்ராடெஜிக் கம்யூனிகேஷன்ஸ் லேபரேட்டரி குழுமம் (எஸ்சிஎல் க்ரூப்) என்றொரு நிறுவனம் உள்ளது. இது தன்னை "உலகளாவிய தேர்தல் மேலாண்மை முகமை" என்று அழைத்துக்கொள்கிறது. இந்நிறுவனம் பிரதானமாக வளர்ந்துவரும் நாடுகளின் தேர்தல்களில் ஈடுபட்டிருந்தது. அந்நாடுகளின் அரசியல் கட்சிகள் இந்நிறுவனத்தின் டிஜிட்டல் நிபுணத்துவத்தின் உதவியோடு பொதுக் கருத்தையும் அரசியல் உறுதியையும் தம்மிஷ்டத்திற்கு வளைத்து பயன்படுத்துவதற்கு இந்நிறுவனம் வேலை செய்தது. இந்த நிறுவனத்திலிருந்து தோன்றியதுதான் கேம்பிரிட்ஜ் அனலிடிகா, (சிஏ) ஆகும். இது 2013ஆம் ஆண்டிலிருந்து லண்டனிலிருந்து செயல்படும் சர்வதேச அரசியல் கலந்தாலோசனை நிறுவனமாகும்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் முன்னாள் வெள்ளை மாளிகை ஆலோசகரான ஸ்டீவ் பேன்னன் என்பவர் இந்த சிஏ நிறுவனத்தை துவக்குவதில் முக்கியமான பங்காற்றியவராவார். (இவர் நரேந்திர மோதி மற்றும் பாஜகவின் அபிமானி என்பது குறிப்பிடத்தக்கது) இவர் பெரும் கோடீஸ்வரரான ராபர்ட் மெர்சர் என்பவரிடமிருந்து 15 மில்லியன் டாலர் நிதி திரட்டித் தந்தார். பிரிட்டிஷ் தொலைக்காட்சி சேனலான சேனல் 4 வெளியிட்ட வீடியோவில் இந்த சிஏ நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலரான (சிஇஓ) அலெக்சாண்டர் நிக்ஸ் என்பவர் 2016ம் ஆண்டு அமெரிக்க அதிபர் தேர்தலில் சிஏ நிறுவனம் "பரந்துபட்ட அளவில் பங்காற்றியது" பற்றி தம்பட்டம் அடித்துக்கொண்டதாக தெரிகிறது. டொனால்ட் ட்ரம்பிற்காக அனைத்துவித ஆராய்ச்சிகளையும், பகுப்பாய்வுகளையும் நடத்தியதோடு டிஜிட்டல் மற்றும் தொலைக்காட்சி பிரச்சாரங்களையும் அவருக்கு ஆதரவாக மேற்கொண்டதாக அவர் அந்த வீடியோவில் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரச்சாரங்களில் இந்த சிஏ நிறுவனம் செயல்படும் விதம் பற்றி முதலில் வெளிக்கொண்டு வந்தவர் கிறிஸ்டோஃபர் வைலீ என்பவராவார். இந்நிறுவனத்தின் முன்னாள் செயல் அலுவலரான இவர், பிரிட்டிஷ் நாளிதழான தி அப்ஸர்வருக்கு அளித்த பேட்டியில் இதனை முதலில் வெளியிட்டார். வாக்குப்பெட்டியில் அளிக்கவிருக்கும் வாக்குகளை ட்ரம்பிற்கு ஆதரவாக பெறுவதற்கு கணிப்புகள் மேற்கொண்டு செல்வாக்கு செலுத்துவதற்காக மிகவும் சக்திவாய்ந்த மென்பொருள் ப்ரோகிராமை உருவாக்குவதற்காக லட்சோப லட்சம் அமெரிக்க வாக்காளர்களின் முகநூல் ப்ரொஃபைலைப் பெற்று உபயோகித்ததாக அப்பேட்டியில் வைலி தெரிவித்தார். திஸ் இஸ் யுவர் டிஜிட்டல் லைஃப் என்ற செயலி மூலம் வாக்காளர் தகவல்களை எடுத்துள்ளனர். இந்த செயலியை (Application) வடிவமைத்தவர் அலெக்சாண்டர் கோகன் என்பவர். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் கல்வியாளரான இவர் ரஷ்யாவுடன் தொடர்புடையவர். இவருக்கு சொந்தமான கம்பெனியான குளோபல் சயன்ஸ் ரிசர்ச் (ஜிஎஸ்ஆர்) சிஏவுடன் கூட்டு சேர்ந்து குறிப்பிட்டதொரு ஆளுமை சோதனைக்கு உட்படுத்திக்கொள்ளுமாறு லட்சக்கணக்கான முகநூல் பயன்பாட்டாளர்களை பணம் கொடுத்து சம்மதிக்கவைத்து, கல்வியியல் பயன்பாட்டிற்காக இந்த தகவல்களை சேகரிப்பதாகக் கூறியுள்ளது. ஏறக்குறைய 3 லட்சத்து ஐந்தாயிரம் முகநூல் பயன்பாட்டாளர்கள் இந்த சோதனைக்கு உட்பட்டனர். ஆனால் இந்த செயலியானது அவர்களுடைய தகவல்களை மட்டுமின்றி அவர்களது நட்புப் பட்டியலில் உள்ளவர்களின் தகவல்களையும் சேகரித்துவிட்டது. இவ்வாறாக, பயன்பாட்டாளர்களின் சம்மதமின்றி 8 கோடியே 70 லட்சம் நபர்களின் தகவல்களை குவிப்பதற்கு சிஏ நிறுவனத்திற்கு இந்த செயலி உதவியது.

இந்தத் தகவல்களின் உதவியோடு முகநூல் பயன்பாட்டாளர்களின் உளவியல் ப்ரொஃபைல்கள் உருவாக்கப்பட்டன. இதன் பிறகு இவர்களை நோக்கி "நுண்ணியமாக குறிபார்த்து" பிரச்சாரங்கள் துவக்கப்பட்டன. இவர்கள் ஒவ்வொருவருடைய ஆர்வங்கள், தேர்வுகள், எதை விரும்புவர், அவர்கள் பலியாகும் விஷயங்கள், பலவீனங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒவ்வொருவரையும் தனித்தனியாக குறிவைத்து பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. டிஜிட்டல் சந்தைப்படுத்துதல், விளம்பரப்படுத்துதல், சமூக ஊடகம், யூடியூப் ஆகியவை வாக்காளர்கள்மீது செல்வாக்கு செலுத்திடப் பயன்படுத்தப்பட்டன.

வழக்கமான தேர்தல் பிரச்சாரங்களில் வேட்பாளர்கள் தாங்கள் செய்த நற்செயல்களை பட்டியலிட்டும், எதிரிகளை சாடியும், தேர்ந்தெடுக்கப்பட்டால் எதிர்காலத்தில் என்ன நற்செயல்களை தான் செய்வேன் என பட்டியலிட்டும் வாக்காளர்களின் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்று தேர்தலில் வெற்றிபெற முயல்வார்கள். ஆனால் சிஏவின் திட்டம் நயவஞ்சகமானது. ஏனெனில் ஒரு தனிநபரின் பலவீனங்களை தம்மிஷ்டத்திற்கு பயன்படுத்திக்கொள்வதன் மூலம் உளவியல் ரீதியாக அவர்மீது தாக்குதல் தொடுக்கிறது. அதோடு, அவரது தேர்வை தீர்மானிப்பதற்கு இது முயல்கிறது. இவையனைத்தையும் சூழ்ச்சிகரமாகவும் மறைமுகமாகவும் செய்கிறது. இவையனைத்தும் திரை மறைவில் நடக்கின்றன. தங்களது தேர்வுகள் எவ்வாறு வளைக்கப்படுகின்றன என்பது பற்றி பொதுஜனத்திற்கு துளியும் தெரியாது.

பிரிட்டனின் சேனல் 4 ஒளிபரப்பிய காணொளி காட்சியில் சிஏ நிறுவனம் எவ்வாறு தேர்தலில் செயல்படுகிறது என்பதை அதன் முதன்மை செயல் அலுவலரான, பின்னர் பதவி நீக்கம் செய்யப்பட்ட அலெக்சாண்டர் நிக்ஸ் விளக்கியுள்ளார். இதில் ஒன்று, குறிவைத்த தனி நபர்களை வலையில் சிக்க வைப்பதற்காக பெண்களை பயன்படுத்துவதும் ஒன்றாகும். அப்பட்டமான தவறான தகவல்கள், எதிரணியைச் சேர்ந்த அரசியல்வாதிகளுக்கு கவர்ச்சிகரமான டீல்களை முன்வைத்து அவர்களை வளைத்துப்போடுதல், இதனை வீடியோ பதிவு செய்து எதிர்க்கட்சியினரின் செல்வாக்கை சீர்குலைத்தல் போன்றவையும் இதுபோன்ற வேறுபல அறத்திற்கு புறம்பான ஆன்லைன் செயல்பாடுகள் மூலமாகவும் தேர்தல்களில் வாக்காளர்களின் மனங்கள் மீது உளவியல் தாக்குதல் தொடுக்கப்படுகின்றன. இவற்றை வெல்லாம் தெரிவித்த அலெக்சாண்டர் நிக்ஸ், நைஜீரியா, லித்துவேனியா, ரொமானியா, இந்தியா, அர்ஜென்டைனா, செக் குடியரசு, கென்யா உள்ளிட்ட உலகின் பல்வேறு நாடுகளில் நடைபெற்ற 200க்கும் அதிகமான தேர்தல்களில் அவர்கள் செயல்பட்டதாக அந்த வீடியோவில் தம்பட்டம் அடித்துக் கொண்டார். இவ்விவரங்களை அம்பலப்படுத்திய மற்றொருவரான பிரிட்டனி கெய்சர் என்பவர் எத்தியோப்பியா, லித்துவேனியா, ரொமானியா, நைஜீரியா, ஸ்லாம்பியா ஆகிய நாடுகளில் தேர்தல்களிலும் அரசியல் செயற்போக்குகளிலும் செல்வாக்கு செலுத்துவதற்காக அரசியல் கட்சிகளுக்காகவும் கார்ப்பொரேட் நிறுவனங்களுக்காகவும் சிஏ வேலை பார்த்ததாக குறிப்பிட்டுள்ளார்.

நைஜீரியாவில் குட்லக் ஜொனாதன் என்ற ஒரு கிறிஸ்தவருக்கு ஆதரவாக பிரச்சாரம் நடத்திட சிஏவை நைஜீரிய பெரும் கோடீஸ்வரர் ஒருவர் அமர்த்தியுள்ளார். தேர்தலில் அவருக்கு எதிராக போட்டியிட்டு இறுதியில் வெற்றிபெற்ற முஸ்லீம் எதிரி வேட்பாளரான முகம்மது புஹாரியை குறிவைத்து ஒரு வீடியோ பிரச்சாரம் செய்யப்பட்டது. 2015ம் ஆண்டு நைஜீரிய அதிபர் தேர்தலில் செல்வாக்கு செலுத்திட சிஏ முயன்றது. கிராஃபிக்ஸ் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பயங்கரமான படத்தை தயாரித்து தேர்தல் வேட்பாளர் ஒருவரை ஷரியா சட்டங்களை ஆதரிப்பவராகவும் அவரோடு உடன்படாதவர்களையும் எதிர்ப்பவர்களையும் அவர் கொடூரமாக நசுக்குவார் என்றும் இஸ்லாமிய தீவிரவாதிகளோடு பேச்சுவார்த்தை மேற்கொள்வார் என்றும் சித்தரித்து வெளியிட்டது. கடந்த வாரத்தில் டிஜிட்டல், கலச்சாரம், ஊடகம், ஆதரவு (டிசிஎம்எஸ் கமிட்டி என்று சுருக்கமாக சொல்லப்படுகிறது) தேர்வுக்கமிட்டி முன்பு ஆஜராகி பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் வாக்குமூலம் அளித்த கிறிஸ்டோஃபர் வைலீ (இந்த விவகாரத்தை அம்பலப்படுத்தியவர்) வாக்காளர்களை அச்சுறுத்தும் ஒரே நோக்கத்தில்தான் இந்த வீடியோ நைஜீரியாவில் பரப்பப்பட்டது. "இந்த வீடியோவில் மக்கள் கண்டம் துண்டமாக ஆக்கப்படுவதும், குரல் வளையை அறுத்து இரத்தம் சொட்டச்சொட்ட சாக்கடையில் வீசப்பட்டு துடிதுடித்து சாகின்ற காட்சிகளும் இடம்பெற்றிருந்தன. சிலர் உயிருடன் எரித்துக்கொல்லப்படும் காட்சிகளும் இருந்தன. முஸ்லீம்களை வன்முறையாளர்களாக சித்தரிக்கின்ற அப்பட்டமான இஸ்லாமிய விரோத அச்சுறுத்தும் செய்திகள் அதில் நிறைந்திருந்தன என்று கூறினார்" இது பிரிட்டனின் தி கார்டியன் பத்திரிகை 4.4.2018 அன்று வெளியிட்ட செய்தியாகும்.

சிஏவின் தாய் நிறுவனமான எஸ்சிஎல் குழுமம் பிரிட்டனில் கன்சர்வேடிவ் கட்சி, லேபர் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளுக்காகவும் வேலை

தொடர்ச்சி 8ம் பக்கம்

## ஃபேஸ்புக்-கேம்பிரிட்ஜ் அனலிடிகா . . .

# டிஜிட்டல் தொழில்நுட்பம் - மக்கள் கருத்தையும், அரசியலையும் கையாளப் பயன்படுத்தப்படுகிறது

7ம் பக்கத் தொடர்ச்சி

செய்தது. பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சகத்திற்காக இந்நிறுவனம் வேலை செய்தபோது ரகசிய ஆவணங்களை பெறுவதற்கு அரசாங்கம் அனுமதி அளித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இரண்டு வெவ்வேறு ப்ராஜெக்டுகளை நிறைவேற்றுவதற்காக ஏறக்குறைய இரண்டு லட்சம் பவுண்ட் ஸ்டெர்லிங் கொடுக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு வெளியேறுவது தொடர்பாக பிரிட்டனில் நடைபெற்ற வாக்கெடுப்பில் "ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு வெளியேறு" பிரச்சாரத்திற்காக சிஏ வேலை செய்துள்ளது. பாதுகாக்கப்பட்ட தகவல்கள் வெளியான விவகாரத்தில் சிஏ மற்றும் முகநூலின் பாத்திரம் குறித்து பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் டிசிஎம்எஸ் கமிட்டி புலனாய்வைத் துவக்கியுள்ளது.

குற்றவாளி சிஏ நிறுவனம் மட்டுமல்ல. முகநூலும் குற்றவாளியே. ஏனெனில், முன்னெப்போதும் காணாத வகையில் தகவல்கள் திருடப்பட்டிருப்பதை 2015ம் ஆண்டின் இறுதிவாக்கில் ஃபேஸ்புக் கண்டுபிடித்தது. ஆனாலும், அச்சமயம் அவை கம்பெனியின் கட்டுக்குள்ளேயே இருந்தது. எனவே, அது பயன்பாட்டாளர்களை எச்சரித்து ஏறக்குறைய 8.7 கோடி நபர்களின் தனிப்பட்ட தகவல்களை திரும்பப்பெற்று அவற்றை பாதுகாப்பாக வைப்பதற்கு திறம்பட எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. சிஏவோடு முகநூல் கூட்டு சேர்ந்து பாதுகாக்கப்பட்ட தரவுகளை வெளியிட்டதாகவும் சிஏவிற்கு தகவல்களை விற்றதே முகநூல்தான் என்றும்கூட குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. சிஏ என்ற ஒரேயொரு கம்பெனி மட்டுமல்ல, இன்னும் இதுபோன்ற பல கம்பெனிகள் முகநூல் போன்ற வலைத்தளங்களைப் பயன்படுத்தி தனிப்பட்ட தகவல்களை அறுவடை செய்கின்றன. இவ்வாறு அறுவடை செய்த தகவல்களை பயன்பாட்டாளர்களின் நலனுக்கு எதிராக வஞ்சகத்தனமான நோக்கங்களுக்காக பயன்படுத்துகின்றன. இந்த சிஏ விவகாரம் அம்பலப்படுவதற்கு முன்பு தனிநபர்களின் சொந்த விவரங்கள் பாதுகாக்கப்படாமல் உடைக்கப்படுகின்றன என்று அச்சங்கள் வெளிப்பட்டபோது அவற்றை முகநூல் தூசியாகக் கருதி ஊதித்தள்ளிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### கேம்பிரிட்ஜ் அனலிடிகாவின் இந்திய செயல்பாடுகளும் அதன் தொடர் விளைவுகளும்

அயல்நாட்டு ஊடகங்களில் சிஏ குறித்து செய்திகள் வெளியானதும் இந்தியாவில் அதன் தாக்கம் குளவிக்கூட்டை தட்டிவிட்டாற்போல் இருந்தது. இந்தியாவில் வெறும் 355 முகநூல் பயன்பாட்டாளர்கள் மட்டுமே சிஏவின் செயலியான "திஸ் ஈஸ் யுவர் டிஜிட்டல் லைஃப்"ஐ பதிவிறக்கம் செய்துள்ளனர். ஆனாலும், இதன் மூலம் மட்டுமே 5,62,455 பயன்பாட்டாளர்களின் தரவுகள் பெறப்பட்டுள்ளன. இவ்விவரம் வெளியான உடனேயே சிஏவின் சேவைகளை பயன்படுத்திக் கொண்டதாக பாஜகவும் காங்கிரசும் ஒருவர் மீது மற்றவர் குற்றஞ்சாட்டத் துவங்கினர். சிஏ மற்றும் முகநூல் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பாஜகவின் தகவல் தொழில்நுட்ப அமைச்சரான ரவிசங்கர் பிரசாத் அச்சுறுத்தல்கள் விடுத்தார். ஆயினும் இது மக்களை முட்டாளாக்குவதற்கான வெற்றுக்கூச்சல்தான் என்பது தெளிவு. இவ்விவகாரங்கள் வெளிப்பட்டு சலசலப்புகள் ஏற்படுவதற்கு வெகுகாலம் முன்னரே இந்நிறுவனம் எவ்வாறு செயல்படுகிறது என்பதை பாஜக நன்கறியும். ஏனெனில், சிஏவின் இந்தியாவுடனான உறவு நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே இருக்கிறது. அந்நிறுவனம் தனது வலைத்தளத்திலேயே "2010ல் நடைபெற்ற பிஹார் சட்டமன்ற தேர்தலின்போது ஆழமான வாக்காளர் பகுப்பாய்வு மேற்கொள்வதற்கான கான்ட்ராக்டை சிஏ பெற்றது. இதில் உட்கருவான சவாலாக இருந்தது என்னவெனில் ஒவ்வொரு கட்சியிலிருக்கும் ஸ்திரமற்ற வாக்காளர்கள் மற்றும் கட்சி மாறி வாக்களிக்கக்கூடிய வாக்காளர்களைக் கண்டறிந்து, தேர்தல்கள் குறித்து அவர்களுக்கிருக்கும் ஆர்வமின்மையை மதிப்பிடுவதாகும். 15 ஆண்டுகாலமாக அப்போது ஆண்டுவந்த கட்சியின் ஆட்சியில் மாநிலம் எந்த வளர்ச்சியும் காணாததால், இந்த ஆராய்ச்சியில் ஈடுபடுவது மட்டுமின்றி, ஆதரவாளர்களை ஊக்குவிப்பதற்காக தகவல்தொடர்பு படிநிலையை உருவாக்குவதன் மூலம் கிராம அளவில் கட்சிக்கான அடித்தளத்தை கட்டமைக்கின்ற பணியும் சிஏவிற்கு வழங்கப்பட்டது. எங்களை பணிக்கமர்த்திய க்ளையன்ட் கட்சி பெருவாரியான வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. சிஏ குறிவைத்த தொகுதிகளில் 90 சதவிகிதத்திற்கும் அதிகமான தொகுதிகளில் அக்கட்சி வெற்றி பெற்றது" என்று பெருமையடித்துக்கொண்டுள்ளது. சிஏ சொல்கின்ற இந்த வாடிக்கையாளர் கட்சி பாஜக என்பதை சொல்லத் தேவையில்லை. ஏனெனில் 2010ம் ஆண்டு பிஹாரி சட்டமன்றத் தேர்தலில் வெற்றிபெற்றது பாஜக-ஜனதாதளம் (யு) கூட்டணியாகும்.

சிஏவின் இந்திய கூட்டுக்கம்பெனியாக செயல்படும் நிறுவனத்தின் பெயர் ஓவ்லேன் பிசினஸ் இன்டலிஜென்ஸ் ஆகும். இதன் உரிமையாளர் அம்ரீஷ் தியாகி. இவர் ஐக்கிய ஜனதா தளத்தின் பொதுச் செயலாளரான கே சி தியாகியின் மகனாவார். இந்நிறுவனத்தின் வலைத்தளத்தில் ஐக்கிய ஜனதா தளம், காங்கிரஸ், பாஜக ஆகிய கட்சிகள் தங்களின் வாடிக்கையாளர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுமக்கள் கவனத்தை ஈர்த்ததுமே இந்நிறுவனம் தனது வலைத்தளத்தை முடக்கிவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. கம்பெனி செயல்படும் விதம் குறித்து உரிமையாளர் தியாகி ஊடகங்களுக்கு தெரிவிக்கையில், "குறிப்பிட்ட தொகு வாக்குச்சாவடி குறித்து நாங்கள் மேற்கொண்ட ஆய்வுகள் மற்றும் ஓட்டு வரலாற்றிலிருந்து குறிப்பிட்டதொரு சித்தாந்தத்திற்கு எத்தனை பேர் வாக்களித்துள்ளனர் என்பதை அறிந்துகொண்டோம்.... அதன்பிறகு அந்த வாக்குச்சாவடி குறித்து ப்ரொஃபைல் தயாரித்தோம்" என்று கூறினார். "ஆதரவை மாற்றிக்கொள்ளக்கூடிய வாக்காளர்களைக் கண்டறிந்து தேர்தல் குறித்து அவர்கள் எந்த அளவிற்கு ஈடுபாடின்றி இருக்கின்றனர் என்பதை அளவிடுவதே கடுமையான சவாலாகும்" என்றும் கூறினார். (தி ஏசியன் ஏஜ் என்ற நாளேடு 22.03.2018)

நோக்கம் தெளிவாக விளங்குகிறது. அதாவது, ஓட்டுப்போட மனமில்லாத அல்லது முடிவெடுக்காத வாக்காளர்களை தங்களது வாடிக்கையாளர் கட்சிக்கு ஆதரவாக திருப்பி, அவர்களை வாக்குச்சாவடிக்கு செல்ல வைத்து அக்கட்சிக்கு வாக்களிக்க வைப்பதே நோக்கமாகும்.

இந்தியாவின் 600 மாவட்டங்கள் மற்றும் 7 லட்சம் கிராமங்களின் தகவல்கள் எஸ்சிஎல் நிறுவனத்திடம் உள்ளதாக அலெக்சாண்டர் வைலீ டிவிட்டர் பதிவு ஒன்றில் தெரிவித்துள்ளார். "தங்களுக்கு சாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதற்காக மக்கள் கூட்டத்தின் முக்கியமான குழுவினரை கண்டறிந்து அவர்களுடைய நடத்தைகள் மீது செல்வாக்கு செலுத்துவதற்கு தங்களது வாடிக்கையாளர் கட்சிகளுக்கு உதவுவதே எங்களது சேவையாகும்." இதில் சாதகமான விளைவு என்பது வாடிக்கையாளர் அரசியல் கட்சிக்கு ஆதரவாக தேர்தலை செலுத்துவதற்காக குறிப்பிட்ட வாக்காளர்களை குறிவைத்து விஷமத்தனமான பிரச்சாரத்தில் ஈடுபடுவதாகும். எஸ்சிஎல்/சிஏ வேலைபார்த்த இந்திய தேர்தல்களாவன: 2009 நாடாளுமன்றத் தேர்தல், 2007, 2011, 2012ம் ஆண்டுகளில் நடந்த உத்தரப்பிரதேச சட்டமன்றத் தேர்தல்கள், 2010 பிஹார் சட்டமன்றத் தேர்தல், 2007ம் ஆண்டில் கேரளா, மேற்கு வங்கம், அஸ்ஸாம், ஜார்க்கண்ட், உத்தரப்பிரதேச மாநிலங்களில் நடைபெற்ற தேர்தல்கள், 2003ம் ஆண்டு மத்தியப் பிரதேச தேர்தல், 2003ம் ஆண்டு ராஜஸ்தான் மாநில தேர்தல் ஆகியனவாகும். இவ்விவரங்கள் வைலீயின் டிவிட்டர் பதிவில் பகிரப்பட்டுள்ளன. இத்தகைய நேர்மையற்ற வழிகள் ஜனநாயக உணர்வுகளுக்கு முற்றிலும் எதிரானதல்லவா? இவை முழுக்க முழுக்க மக்கள் விரோதமானவை அன்றோ? தேர்தல் தில்லுமுல்லுகள் மிகவும் நுண்ணியமானவையாகவும் அடாவடித்தனமானவையாகவும் ஆக்கப்பட்டுள்ளன.

என் டி டிவி ஊடகச் செய்திப்படி, ஓவ்லேன் பிசினஸ் சொல்யூஷன்ஸ் நிறுவனத்தின் இயக்குனர்களில் ஒருவரான ஹிமன்ஷு ஷர்மா என்பவரது லிங்க்ட் இன் (இணைய தளத்தில் இருக்கின்ற தொழில்முறை சமூக வலைத்தளம்) பக்கத்தில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்: "ஆளும் பாஜகவிற்காக 4 தேர்தல் பிரச்சாரங்களை வெற்றிகரமாக நடத்தியுள்ளேன்". பணத்தை தண்ணீரைப் போல இறைத்து நடத்தப்பட்ட இந்தப் பிரச்சாரத்தில் "குறி 272+ என்ற இலக்கு அடையப்பட்டது." (அதாவது 2014 தேர்தலில் பாஜகவின் கோஷமாகும்). இந்த விவகாரம் அம்பலமானதற்குப் பிறகு இந்தப் பதிவு மேற்படி ஷர்மாவின் லிங்க்ட் இன் ப்ரொஃபைலிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது.

சிஏ நிறுவனத்தின் இந்திய பங்குதாரரான அவ்னீஷ் ராய் என்பவரது நேர்காணல் ஒன்றை என் டி டிவி ஒளிபரப்பியது. (இதனை https://www.ndtv.com/topic/Avneesh-Rai என்ற இணைப்பில் காணலாம்) இவர் எஸ்சிஎல் ப்ரைவேட் லிட் என்ற நிறுவனத்தின் இயக்குநருமாவார். எஸ்சிஎல் யுகேவின் இந்திய பிரிவாக இந்நிறுவனம் 2011இல் துவக்கப்பட்டது. எஸ்சிஎல் யுகேயின் அலெக்சாண்டர் நிக்ஸ், அலெக்சாண்டர் ஓக்ஸ் ஆகியோரும் அம்ரிஷ் தியாகி, அவ்னீஷ் ராய் ஆகியோரும் இந்நிறுவனத்தின் இயக்குனர்களாவர். 2011ம் ஆண்டில் இந்தியாவிற்கு வருகை தந்த அலெக்சாண்டர் நிக்ஸ் எஸ்சிஎல்இன் செயல்பாடுகளை இந்திய தேர்தல் அரங்கிற்கும் விரிவாக்குவதற்காக ராய், தியாகி ஆகியோருடன் பேசத்துவங்கினார். "இந்திய வாக்காளர்களின் தகவல்களை தயாரித்து அடுத்து வருகின்ற தேர்தல்களில் தங்களது வாடிக்கையாளர் அரசியல் கட்சிகளுக்கு ஆதரவாக தேர்தல்களை கையாள்வதில் இணைந்து செயல்படுவதற்காக" இவர்கள் அனைவரும் இணைந்து எஸ்சிஎல் இந்தியா நிறுவனத்தை பதிவு செய்தனர்.

நிறுவனத்தின் சேவைகளை அநேகமாக முழுவதும் காங்கிரஸ் கட்சிக்கு வழங்குவதில்தான் அலெக்சாண்டர் நிக்ஸ் குறியாக இருந்தார். ஆனால், பின்னர் அவர் காங்கிரசிலிருந்து விலகிச் செல்வது தெரிந்தது. காங்கிரஸ் எதிர்ப்பு போக்கை காட்டிய சர்வே ஒன்றைப் பற்றி கமிட்டி கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தபோது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பெண் ஒருவரை அவ்னீஷ் ராய் எதிர்கொள்ள நேர்ந்தது. "நாம் இங்கே கூடியிருப்பது காங்கிரசை தோற்கடிப்பதற்காக" என்று அவர் தெரிவித்துள்ளார். அப்பெண்மணி யார் என்பது தனக்கு சொல்லப்படவில்லை என்று அலெக்சாண்டர் நிக்ஸ் கூறுகிறார். இதுபற்றி அவ்னீஷ் ராய் அலெக்சாண்டர் நிக்ஸை கேட்ட போது, "நான் இங்கே இருப்பது பணம் பண்ணுவதற்காக" என்று தெரிவித்தாராம். இவை நடந்தது 2012ல்.

உண்மையில், தேர்தல் பிரச்சாரத்திற்காக டிஜிட்டல் வெளியையும் சமூக வலைத்தளங்களையும் பரந்துபட்ட அளவில் இந்தியாவில் முதலில் பயன்படுத்தியது பாஜக கட்சியே. 2014 பொதுத்தேர்தலில் பாஜகவிற்காக மிகவும் திறம்பட டிஜிட்டல் பிரச்சாரத்தை நடத்தும் பொறுப்பை வகித்தவர் அரவிந்த் குப்தா என்பவராவார். இவர் தற்போது மைகவ் (MyGov) என்ற இணையதள சேவையின் முதன்மை செயல் அலுவலராவார். அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்துவதற்காக துவக்கப்பட்ட பிரதமர் மோதியின் ஆசிர்வாதம் பெற்ற இணையதள சேவையாகும் இது. இந்த அரவிந்த் குப்தா தனது ட்விட்டர் பக்கத்தில் பின்வரும் செய்தி வெளியிட்டுள்ளார்: "சிஏ ஒரு சக்திவாய்ந்த கருவியாகும். சரியாக அதைப் பயன்படுத்தினோமானால் ஆழமான புரிதல்களையும் நுண்மையாக ஒத்திசைவு செய்யப்பட்ட தகவல் தொடர்பையும் மக்களிடம் கொண்டுசெல்லும் உத்தியையும் வழங்க முடியும்." இதிலிருந்து பாஜகவிற்கும் சிஏ நிறுவனத்திற்கும் இடையேயான பாசப்பிணைப்பு நன்கு விளங்கும். லண்டனில் உள்ள சிஏ அலுவலகத்தில் மாட்டப்பட்டிருந்த சுவரொட்டி ஒன்றில் காங்கிரசின் தேர்தல் சின்னம் இடம்பெற்றிருந்ததற்காக ராஜீவ் காந்தியை கேலிசெய்த மத்திய அமைச்சராக இருந்த ஸ்ம்ருதி இராணி ட்விட்டர் வலைத்தளத்தில் சிஏவை பின்தொடர்கிறார் என்பது கவனிக்கத்தக்கது.

தொடர்ச்சி 9ம் பக்கம்

ஃபேஸ்புக்–கேம்பிரிட்ஜ் அனலிடிகா . . .

# ஜனநாயக செயல்முறைப் போக்கை மேலும் சீர்குலைப்பதில் டிஜிட்டல் மோசடியின் பங்கு

8ம் பக்கத் தொடர்ச்சி

சிஏவின் சேவைகளை பயன்படுத்திக்கொள்ளவில்லை என காங்கிரஸ், பாஜக இரண்டுமே மறுத்துள்ளன. ஆனால், இதுவரையில் வெளிவந்த ஆவணங்களிலிருந்து இவ்விரண்டு கட்சிகளுமே சிஏ அல்லது அதன் துணை நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வந்திருப்பது தெரியவந்துள்ளது. ஆயினும், இந்திய தேர்தல்களில் சிஏ எந்த அளவிற்கு தலையிட்டது என்பதும் அதன் ஈடுபாடுகள் எவ்வாறெல்லாம் இருந்தன என்ற விவரங்களும் இன்னமும் தெளிவாக விளங்கவில்லை. சிஏ நிறுவனம் பற்றி வெளியான சர்ச்சைக்குரிய விவகாரம் இரண்டு முக்கியமான விஷயத்தை கோடிட்டு காட்டுகிறது. ஜனநாயக நடைமுறைகளில் அயல்நாடுகளின் செல்வாக்கு எந்த அளவிற்கு போக முடியும் என்பதையும் தகவல்களை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்றும், அவற்றை தம்மிஷ்டத்திற்கு எவ்வாறு தவறாக பயன்படுத்தப்படுகிறது என்பதையும் இவ்விவகாரம் காட்டுகிறது.

சிஏ விவகாரம் பல விஷயங்களை வெளிக்கொண்டுவந்திருந்தாலும் தனிநபர் தகவல்களின் அடிப்படையில் ப்ரொஃபைல்களை ஏற்படுத்தி அத்தனிநபரின் விருப்பவெறுப்பு தேர்வுகளில் செல்வாக்கு செலுத்துவது என்ற நிகழ்வுப்போக்கு இணையதளத்தில் அன்றாடம் நிகழ்ந்துகொண்டிருக்கும் நிகழ்வாகும். இலக்கு வைத்து பரப்பப்படும் பொய்ச்செய்திகள், ட்ரோல் செய்வது, அவதூறுப் பிரச்சாரங்கள் செய்தல் போன்றவை அரட்டை அரங்கங்கள் (Chats) மூலமும் வலைப்பூக்கள் (Blogs) மூலமும் அடிக்கடி நிகழ்கின்றன. இத்தகைய அச்சுத்துறுத்தல் குறித்து கவனத்துடன் இருத்தல் வேண்டும்.

தேர்தல் நோக்கங்களுக்காக அனுமதிக்கப்படாத வகையில் தகவல்களைத் திரட்டும் சம்பவங்கள் அம்பலப்படுத்தப்பட்டதானது தனிநபரின் விஷயம் (Privacy) எனப்படும் தனிப்பட்ட சொந்தவிவகாரம், தனிப்பட்ட தகவல்கள் சேகரிப்பின் பாதுகாப்புத்தன்மை ஆகிய பிரச்சினைகளை மீண்டும் விவாதப்பொருளாக்கியுள்ளது. இப்பிரச்சினை வெறும் தேர்தல்களை மட்டும் பொருத்ததல்ல. இப்பிரச்சினையில் வேறுபல விஷயங்களும் அடங்கியுள்ளன. கட்டாய ஆதார் திட்டத்தை பாஜக அரசாங்கம் தீவிரமாக கடைபிடித்து வருகிறது. ஆதார் எண்ணை வங்கிக் கணக்கோடும் இதர எல்லா வகை சேவைகளோடும் இணைக்க வேண்டும் என்று நிர்ப்பந்தித்து வருகிறது. இந்தியக் குடிமகன் ஒவ்வொருவனுடைய தனிப்பட்ட தகவல்களையும் அரசாங்கம் ஆதார் மூலம் தன்வசம் கைப்பற்றி வைத்துள்ளது. அதாவது, தனிநபர் பொருளாதார நிலைமை, அவரது அரசியல் சார்பு, அவர் எங்கெங்கே சென்று வருகிறார் போன்ற விவரங்களை அரசாங்கம் தன்வசம் வைத்துள்ளது. இது மிகமிக அபாயகரமான ஒன்றாகும். “வேவு பார்க்கப்படும் சமூகம்” என்றழைக்கப்படுகின்ற சமூகத்தை இது உருவாக்குகிறது. பிரதமருடைய ‘நமோ’ (NaMo) செயலி கோடிக்கணக்கானவர்களின் தனிப்பட்ட தகவல்களை சேகரித்துவிட்டது. ஆதார் தரவுகள் சமீபத்தில் அத்துமீறி கைப்பற்றப்பட்ட சம்பவம் வங்கிக்கணக்கு வைத்திருப்போர் தொடர்புடைய தகவல்கள் கசிந்த சம்பவம் ஆகியன மிகவும் கவலை தரத்தக்க விஷயங்களாகும். ஏனெனில், அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய முழுமையான தகவல்கள் பாதுகாப்பு சட்டமும் அதனை அமல்படுத்துவதற்கான பொறியமைவும் இந்தியாவில் இல்லை. அது மட்டுமின்றி, அரசியல் கட்சிகள் அயல்நாட்டு நிதியைப் பெற்றுக்கொள்வதை சுலபமாக்குவதற்காக சமீபத்தில் திருத்தப்பட்ட சட்டங்களும் இந்தியத் தேர்தல் எனும் ஜனநாயக செயற்போக்கில் அந்நிய டிஜிட்டல் நிறுவனங்கள் தில்லுமுல்லு செய்வதற்கு வழிகோலும். சொந்த விவகாரத்தை தனக்குள் வைத்திருப்பதற்கான தனிநபர்களின் உரிமையை பாதுகாப்பதற்காகவும் அவர்களின் சொந்த தகவல்களை களவாடி கார்ப்பொரேட் கம்பெனிகள் சுயலாபத்திற்காகவும் அரசியல் கட்சிகள் தேர்தல் ஆதாயங்களுக்காகவும் பயன்படுத்துவதிலிருந்து தடுப்பதற்கும் உரிய சட்டங்களை அரசாங்கங்கள் இயற்றவேண்டும் என்று ஜனநாயக வெகுஜன இயக்கங்கள் இக்கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும். தகவல்கள் பாதுகாப்பு வளையத்திற்குள் அத்துமீறுபவர்கள் எவறாயினும் அவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கவேண்டும். டிஜிட்டல் வெளியிலுள்ள தனிநபர் தனிப்பட்ட தகவல்களின் உதவிகொண்டு குடிமக்களை துன்புறுத்தி அவர்களை சட்ட சிக்கல்களில் மாட்டிவிடும் வேலையை அரசாங்கங்களும் செய்யக்கூடாது. ஏனெனில், வளர்ந்துகொண்டிருக்கும் இன்றைய உலகில் தங்கள் அன்றாட வேலைகளான பொருட்கள் வாங்குதல், வங்கிப் பரிவர்த்தனைகள், கல்வி, பொழுதுபோக்கு என பல்வேறு விஷயங்களுக்கு மேன்மேலும் அதிக எண்ணிக்கையிலான மக்கள் ஆன்லைன் முறைகளை சார்ந்திருக்கத் துவங்குகின்றனர். இவ்விஷயங்களில் தகவல்கள் கசிவதென்பது மிகப்பெரும் பிரச்சினையாகும். தனிநபரின் தன்விவரங்களை தனக்குள் வைத்திருக்கும் உரிமையையும் அவரது பாதுகாப்பையும் இது கடுமையாக பாதிக்கிறது. தனிநபர் விஷயம் எனப்படுவது யாதெனில், ஒரு தனிநபர் சம்பந்தப்பட்ட சொந்த விவரங்கள் அனைத்தும் அனைவருக்கும் கிடைக்காமல் பாதுகாக்கப்படுவதாகும். உரிய தகவல்கள் உரிய நபர்களுக்கு மட்டுமே கிடைக்கவேண்டும். தனிநபரின் விஷயத்தை முதலாளித்துவ ஜனநாயகம் மதிக்கிறது. எனவேதான், அது தனிநபர் விஷயம் மீறப்படுவதை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் என ஜனநாயக இயக்கங்கள் கோரிக்கை எழுப்பவேண்டும்.

## கேலிக்கூத்தாக்கப்பட்ட முதலாளித்துவ தேர்தல்கள்

சிஏ மற்றும் அதன் கூட்டாளி நிறுவனங்களுடைய செயல்பாடுகளின் விரும்பத்தகாத விளைவுகளாக விவரிக்கப்பட்ட மேற்காணும் விஷயங்கள் ஒன்றை மிகத்தெளிவாக சுட்டிக் காட்டுகின்றன. அதாவது, நெருக்கடியில் சிக்கியுள்ள இன்றைய அழுகிய முதலாளித்துவ காலக்கட்டத்தில் முதலாளித்துவ பாராளுமன்றத் தேர்தல்கள் என்பன வெறும் கேலிக்கூத்தாகிவிட்டன என்பதே அதுவாகும்.

நிலப்பிரபுத்துவ யதேச்சாதிகாரத்தையும் முடியாட்சியையும் எதிர்த்து வளர்ந்துவரும் முதலாளித்துவவாதிகள் போராடிய காலத்தில் அவர்கள் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய பதாகைகளை உயர்த்திப்பிடித்து ஜனநாயகத்தின் ஜாம்பவான்களாகத் திகழ்ந்தனர். இந்த கோஷங்களை முன்னிறுத்திய ஜனநாயகம் பற்றிய முதலாளித்துவ கருத்தாக்கத்தின் அடிப்படையிலேயே பாராளுமன்ற அமைப்பு முறை உருவாயிற்று. சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடத்தப்படும் தேர்தல்கள் மூலமாக மக்களின் விருப்பங்கள் வெளிப்படுத்தப்படும் என்று கருதப்பட்டது. தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபடும் வேட்பாளர்கள் பல்வேறு பிரச்சினைகள் குறித்து தங்களுடைய பார்வையை விவரித்து பொருளாதார, கலாச்சார, சமூக முன்னேற்றம் பற்றிய தங்களது பிரத்யேக நிலைப்பாட்டை விவரிப்பர். பல்வேறு வேட்பாளர்களின் பார்வைகளையும் நிலைப்பாட்டையும் கருத்துகளையும் கேட்டறியும் வாக்காளர்கள் தங்களது தர்க்க ரீதியான சிந்தனைத் திறனை பயன்படுத்தி எது சரி எது தவறு என்பதை சீர்தூக்கிப்பார்த்து உண்மையை கண்டறிந்து அந்த உண்மையை பிரதிபலிப்பவர் யார் என்பதைத் தேர்வு செய்து அதற்கேற்ப வாக்களிப்பர். மக்களுடைய சமூகத்தினுடைய உண்மையான பிரச்சினைகளை மக்களுக்கு தெரிவிப்பதும் ஆட்சியாளர்கள் தங்கள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யாமல் தடுப்பரணாக விளங்குவதுமே ஜனநாயகத்தின் நான்காம் தூணாகிய ஊடகத்தின் பாத்திரமாக இருக்கும்.

ஆனால், ஜனநாயகத்தின் உயர் லட்சியங்கள் முதலாளித்துவ வர்க்கத்தால் எப்போதோ காற்றில் பறக்கவிடப்பட்டுவிட்டன. முதலாளித்துவ உற்பத்தியின் நோக்கமான மேலதிக லாபம் என்ற அடிப்படையில் நடைபெறும் ஈவிரக்கமற்ற சுரண்டலானது பொருளாதார, சமூக, அரசியல், கலாச்சாரம் என அனைத்து தரப்பையும் தழுவிய நெருக்கடியில் மீண்டு வர முடியாதவாறு முதலாளித்துவத்தை தள்ளிவிட்டது. இந்த நெருக்கடியிலிருந்து வெளியே வருவதற்கான வாழ்வா சாவா முயற்சியில் முதலாளித்துவவாதிகள் கயமைத்தனத்துடனும் மற்றெல்லா வகைப்பட்ட பிற்போக்கு சக்திகளோடும் சமரசம் செய்துகொள்ளத் துவங்கினர். ஜனநாயக சொற்றொடர்களைப் பயன்படுத்திக்கொண்டே அது பாசிசத்தை கொண்டுவருகிறது. வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகள் என முதலாளித்துவ நாடுகள் அனைத்திலும் பணபலம், அடியாள் பலம், கார்ப்பொரேட் கட்டுப்பாட்டில் இயங்கும் ஊடகங்கள் ஆகியவற்றின் உதவியோடும் மக்கள் மனங்களை குழப்புவதன் மூலமுமே தேர்தல் முடிவுகள் தீர்மானிக்கப்படுகின்றன. அமெரிக்க அதிபர் தேர்தலில்கூட ஜனநாயகக் கட்சி, ரிபப்லிக் கட்சி ஆகியவற்றின் வேட்பாளர்களைத் தேர்வு செய்யும்போதே யார் அதிகபட்சமாக நிதி திரட்டுவார் என்றே விவாதிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி 10ம் பக்கம்

## வரலாற்றுச் சிறப்புமிக்க 132வது மே தினம்







சென்னையில் மே 1, 2018 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டம்

புதுச்சேரியில் மே 1, 2018 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டம்

## ஃபேஸ்புக்–கேம்பிரிட்ஜ் அனலிடிகா . . .

# அறிவியல் வளர்ச்சியை முதலாளித்துவம் தடைசெய்கிறது

9ம் பக்கத் தொடர்ச்சி

முகநூல், சிஏ மற்றும் இதுபோன்ற பிற நிறுவனங்களின் செயல்படும் விதம் ஜனநாயக செயற்போக்கை புதைகுழிக்குள் தள்ளுவதிலும் ஜனநாயக கோட்பாடுகளின் அடிப்படையான கருமையக் கருத்துக்களையே புறந்தள்ளுவதிலும் புதிய வடிவத்தை எடுத்துள்ளது. சரியானதை தேர்வு செய்வதில் தங்களது சீர்தூக்கிபார்க்கும் திறனை பயன்படுத்துவதற்கும் அதற்கொப்ப நன்கறிந்த தகவல்களின் அடிப்படையில் தேர்வு செய்வதற்கும் மக்களை ஊக்கப்படுத்துவதற்கு பதிலாக அவர்களது பலவீனங்களையும் ஆபத்தில் சிக்கிக்கொள்ளும் அபாயகரமான சூழ்நிலையையும் தம்மிஷ்டத்திற்கு பயன்படுத்துவதற்காக தொழில்நுட்ப கருவிகளை பயன்படுத்தி அதன் மூலம் அவர்களின் கருத்துகளை தம்விருப்பப்படி வளைக்கின்றனர். எதிரணியில் உள்ள வேட்பாளர்களை சிறுமைப்படுத்துவதற்காகவும், தங்களை வேலைக்கு வைத்த அரசியல் சக்திகளின் வேட்பாளர்களுக்கு ஆதரவைப் பெருக்குவதற்கும் எந்தமாதிரியான அசிங்கமான கீழ்த்தரமான செயல்களிலும் ஈடுபடுவதற்கு இந்நிறுவனங்கள் தயங்குவதில்லை. தங்களது கொடிய செயல்களை நடத்துவதற்கு அவர்கள் மேன்மேலும் புதுப்புது திட்டங்களை வகுத்துவருகின்றனர். முழுக்க முழுக்க ஒழுங்கீனமாக விளங்கும் இக்கம்பெனிகள் யார் அதிக விலை கொடுக்கிறார்களோ அவர்களுக்காகவே வேலை பார்க்கின்றனர். அவ்வாறு அதிக பணம் கொடுக்கும் கட்சி ஆட்சிக்கு வருவதால் அந்நாட்டிற்கு நல்லதா இல்லையா என்பதைப் பற்றியெல்லாம் அவர்கள் கவலைப்படுவதில்லை. அவர்களுக்கு நல்ல வரும்படி வருகிறதென்றால் மிக மோசமான பிற்போக்கு கட்சிக்காகக்கூட அவர்கள் வேலை செய்வார்கள். இவ்வாறாக, இத்தகு செயல்களால் ஜனநாயகத்தின் சாராம்சமே சிதைக்கப்பட்டுவிட்டது. சரியான கருத்துகளும் சிந்தனைகளும் அடக்கப்பட்டுவிட்டன.

### அறிவியலின் வியத்தகு புதுமைகளும் பிரமிப்பூட்டும் கண்டுபிடிப்புகளும் மிக மோசமான வகையில் தவறாகவும் முறைகேடாகவும் பயன்படுத்தப்படுகிறது

நாம் கவனிக்கவேண்டிய மிக முக்கியமான விஷயம் என்னவென்றால் அறிவியல் தொழில்நுட்பத்தில் செய்யப்படும் புதிய கண்டுபிடிப்புகள் ஒன்று, மக்களுக்கு கிடைக்காமல் இன்றைய அழுகிய முதலாளித்துவத்தால் தடுக்கப்படுகிறது அல்லது மனிதகுலத்திற்கு எதிராக அது பயன்படுத்தப்படுகிறது என்பதாகும். அறிவியல் வளர்ச்சியில் ஏற்படும் புரட்சிகரமான மாற்றங்கள் உற்பத்தி முறையில் தாக்கத்தை ஏற்படுத்தி சமுதாயத்திலும் புரட்சிகரமான மாற்றத்தை கொண்டுவரும் என்பதை வரலாறு காட்டுகிறது. நவீன அறிவியல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் முதலாளித்துவ உற்பத்தி முறையை எவ்வாறு புரட்சிகரமாக்கியது என்பதை தங்களது பல்வேறு படைப்புகளில் மார்க்ஸூம் ஏங்கெல்ஸூம் தெளிவாக விளக்கியுள்ளனர். சொல்லப்போனால், முதலாளித்துவ உற்பத்தி சக்திகளின் பிரம்மாண்டமான வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் 18–19ம் நூற்றாண்டுகள் கண்டுள்ளன. இவை முதலாளித்துவ உற்பத்தி முறை ஒருங்கு திரண்டு கெட்டிப்படுவதற்கு உதவின. ஆனால், முதலாளித்துவ அமைப்பு முறையில் உற்பத்தியை புரட்சிகரமாக்குகின்ற அறிவியல் வளர்ச்சிகளின் பலன்கள் அனைத்தும் முதலாளித்துவ வர்க்கத்தால் அபகரிக்கப்படுகின்றன. ஏனெனில், இங்கே உற்பத்தியின் நோக்கம் என்பது முதலாளிகளுக்கு அதிகபட்ச லாபத்தை ஈட்டுவதாக இருப்பதாலும் இதன் விளைவாக பாட்டாளி வர்க்கத்தின் மீதான சுரண்டல் மேன்மேலும் உக்கிரமாவதாலும் ஆகும்.

தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் இட்டுச்செல்லும் அறிவியல் முன்னேற்றங்கள் உற்பத்தி சக்திகள் வளர்ச்சியில் தீர்மானகரமான பங்காற்றுகிறது. அதோடு கூடவே, சமுதாயத்தில் பகுத்தறிந்து சிந்திக்கும் முறையை வளர்க்கிறது. இதன் மூலம் மனிதகுலத்தின் சிந்தனை உலகில் ஒரு நிலைமாற்றத்தைக் கொண்டுவருகிறது. ஆனால், நெருக்கடியில் சிக்கி அழுகிக்கொண்டிருக்கும் நிலையில் உள்ள இன்றைய முதாளித்துவமானது அறிவியலின் குரல்வளையை நெறித்து அதன் அனைத்துதிசை வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுகிறது. மனித அறிவை விரிவடையச் செய்யக்கூடிய அடிப்படை ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதில்லை. தனது சுரண்டல் இயந்திரத்தை பலப்படுத்தி தனது வர்க்க ஆட்சியை மேலும் ஒருங்குதிரட்டக்கூடிய தொழில்நுட்ப வளர்ச்சியை மட்டுமே அது ஊக்குவிக்கிறது. மனித இனத்திற்கு எதிராகத்தான் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியை முதலாளித்துவவாதிகள் பயன்படுத்துகின்றனர். இதனை நாம் அணு ஆயுதங்கள், இரசாயன ஆயுதங்கள், மிகக்கொடிய போர்த்தளவாடங்கள் ஆகியவற்றின் உற்பத்தியில் கண்கூடாகக் காண்கிறோம். இம்முதலாளித்துவம் கட்டமைத்துள்ள ஆயுதந்தாங்கிய இராணுவமும் போலீஸூம் அந்நிய எதிரிகளை ஒடுக்கி ஒழிப்பதற்காக மட்டும் ஏற்படுத்தப்பட்டதல்ல. தனது சொந்த நாட்டின் உழைக்கும் மக்கள் வளர்த்தெடுக்கின்ற போராட்டங்களையும் இயக்கங்களையும் ஒடுக்கி ஒழிப்பதற்காகவும் அவை பயன்படுத்தப்படுகின்றன. தனது சொந்த நலன் கருதி மக்கள் மத்தியில் அறிவியல்பூர்வ சிந்தனை பரவுவதை விரும்புவதில்லை. அது மக்களை அறியாமையிலேயே வைத்திருக்க விரும்புகிறது. அவ்வாறு அறியாமையில் உழன்றுகொண்டிருக்கும் மக்களால் தங்கள் துன்பத்திற்கான காரணம் என்ன என்பதைக் கண்டறிய முடியாது. ஆகையால் அவர்கள் முதலாளித்துவ சுரண்டலாட்சிக்கு எந்த ஒரு ஆபத்தையும் ஏற்படுத்தமாட்டார்கள்.

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியில் 20ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சைபர்நெடிக்ஸில் ஏற்பட்ட வளர்ச்சி மிக முக்கியமான மைல்கல்லாகும். மின்னணுவியலில் ஏற்பட்ட வளர்ச்சியும் இணையதளத்தின் கண்டுபிடிப்பும் தகவல் தொடர்பை புரட்சிகரமாக்கிவிட்டன. மென்பொருள் (Software) மற்றும் கடினப்பொருளின் (Hardware) நுண்மையான வளர்ச்சிகளின் காரணமாக எழுத்துகள், படங்கள், காணொளிகள் போன்றவற்றை கண்ணிமைக்கும் நேரத்தில் உலகின் மறுகோடிக்கே கூட அனுப்பிவிட முடிகிறது. உலகம் முழுவதும் உள்ள கோடானுகோடி மக்களுக்கு துரித தகவல் தொடர்புக்கான வழித்தடங்களை ஏற்படுத்துவதற்கு இணையதளம் வழிவகுத்தது. சமூக வலைத்தளங்கள் மற்றும் இதர தகவல்தொடர்பு வழித்தடங்களின் வளர்ச்சியின் காரணமாக மக்கள் அணிதிரள்வது என்ற நேர்மறை விளைவுகளும் ஏற்பட்டுள்ளன. 'அரபு வசந்தம்' என்று அழைக்கப்படும் மேற்காசிய மக்கள் எழுச்சியின்போதும் நம் நாட்டில் நிர்பயா பாலியல் வன்புணர்வுக்கு எதிராக எழுந்த இயக்கத்தின்போதும் இதனை கண்கூடாகக் கண்டோம். தொழிற்சாலைகளில் ஆபத்துகள் நிறைந்த வேலைகளை செய்வதில் சைபர்நெடிக்ஸ் முக்கியமான பங்காற்ற முடியும். மருத்துவ அறிவியலில் இது பயன்படும். நோய்களுக்கான சிகிச்சையை புரட்சிகரமாக்குவதில் இதற்கு எக்கச்சக்கமான வாய்ப்புகள் உள்ளன. சைபர்நெடிக்ஸ் துறையில் அதிவேகமாக தொழில்நுட்ப வளர்ச்சி நிகழ்ந்து வருகிறது. அவ்வளர்ச்சிக் கோட்டின் மறுமுனை கண்ணுக்குப் புலனாகாதவாறு நீண்டுள்ளது.

ஆனால், நிலவுகின்ற முதலாளித்துவ அரசியல் முறையானது இவ்வளர்ச்சிகளை கெடுநோக்கத் திற்காகவே பயன்படுத்துகிறது. தங்களது கொடிய ஆட்டத்தை ஆடுவதற்கும் ஜனநாயக செயற்போக்கை நாசப்படுத்துவதற்கும் மிகமுன்னேறிய தகவல் தொழில்நுட்பத்தை முதலாளித்துவ வர்க்கம் ஒரு கருவியாக பயன்படுத்துகிறது. இணையதளம், சமூக வலைத்தளங்கள், வலைப்பூக்கள் போன்றவை முதலாளித்துவ தேர்தல் முறையின் பிரிக்க முடியாத பங்காகிவிட்டன. பொய்ச்செய்திகள், கெடுநோக்கம் கொண்ட தனிநபரின் குணாதிசயங்களை படுகொலை செய்யும் பிரச்சாரங்கள், கேலிகிண்டல் படத்தொகுப்புகள் ஆகியன முதலாளித்துவ தேர்தல் முறையில் பிரிக்க முடியாத அங்கங்களாகிவிட்டன. முன்னெப்போதும் கண்டிராத அளவிற்கு இவை மிகப்பெரிய அளவில் மக்களை சென்றடைகின்றன. இப்புதிய வளர்ச்சிகளை முதலாளித்துவவாதிகள் பிரச்சாரத்திற்காக துஷ்பிரயோகம் செய்கின்றனர். அதே சமயம், புரட்சிகர சக்திகளையும் புரட்சிகர இயக்கங்களையும் ஒடுக்குவதற்கும் இவற்றை பயன்படுத்துகின்றனர். குறுக்கு வழிகளை பயன்படுத்தி உண்மையை மறுதலித்து, மக்களுடைய பகுத்தறியும் திறன் மீது தாக்குதல் தொடுக்கின்றனர். சமுதாயத்தில் கலாச்சார சீரழிவை கொண்டு வருகின்றனர். மக்களின் தார்மீக முதுகெலும்பை முறிக்கின்றனர். ஜனநாயகத்தின் மீதான சைபர் தாக்குதலின் ஒரேயொரு உதாரணம்தான் கேம்பிரிட்ஜ் அனலிடிகா விவகாரமாகும். ஆனால், முதலாளித்துவ பாராளுமன்ற தேர்தல்கள் போர்த்தியிருந்த முகத்திரையை ஒரு ஓரமாக இது விலக்கிவிட்டுவிட்டு அதன் அசிங்கமான முகத்தை வெளிப்படுத்திவிட்டது.

அறிவியலின் சுதந்தரமான வளர்ச்சிக்கு இன்றைய அழுகிய முதலாளித்துவம் முட்டுக்கட்டை போடுகிறது. அறிவியல் தொழில்நுட்பத்தை முதலாளித்துவத்தின் மேலாதிக்கத்திலிருந்து விடுவிக்காமல் அவற்றின் தங்குதடையற்ற வளர்ச்சி சாத்தியமில்லை. இதனை முதலாளித்துவ எதிர்ப்பு புரட்சிகர இயக்கத்தோடு கோர்க்கவேண்டும். ஜனநாயக செயற்போக்கை படுகுழிக்குள் தள்ளும் வகையில் முன்னேறிய சைபர்நெடிக்ஸின் துஷ்பிரயோகத்துக்கு முடிவுகட்டவேண்டும் என்றும், குடிமக்களின் நியாயமான தனிநபர் விஷயத்தை (Privacy) பாதுகாப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் தகவல்களை திறம்பட பாதுகாப்பதற்கான சட்டங்களை இயற்றவேண்டும் என்றும் கோரிக்கைகளை முன்வைத்து சக்தி வாய்ந்த ஜனநாயக இயக்கங்களை வளர்த்தெடுக்க வேண்டும். இத்தகைய ஜனநாயக இயக்கங்களை வளர்த்தெடுத்து அதில் பங்கேற்குமாறு மனித குலத்திற்கு நற்சேவை வழங்கக்கூடிய அறிவியலின் தங்குதடையற்ற வளர்ச்சியை விரும்பக்கூடிய மக்கள் அனைவருக்கும் அறைகூவல் விடுக்கிறோம் ■

## ஜாலியன் வாலாபாக் படுகொலை நூற்றாண்டு துவக்கம்




மதுரையில் ஜாலியன் வாலாபாக் படுகொலை தினம் ஏஐடிஎஸ்ஓவால் அனுஷ்டிக்கப்பட்டது

# ஆர்எஸ்எஸ்–பாஜகவால் அரசியல் ரீதியில் உருவாக்கப்பட்ட வகுப்புவாதத் தீ
# காரணங்களும் முறியடிக்கும் வழிமுறைகளும்

ராம நவமியும் ஹனுமன் ஜெயந்தியும் இப்படியும் வெறித்தனமாகக் கொண்டாடப்படு மென்பதை இந்நாட்டில் எவரேனும் எண்ணிப் பார்த்திருக்கமுடியுமா? ராம நவமியும் ஹனுமன் ஜெயந்தியும் இந்து நாட்காட்டியின் புத்தாண்டும் கூட வெறித்தனமாக கொண்டாடப்பட்டது. இதை கொண்டாடுவதில் மேற்கு வங்கமும் பீஹாரும் முக்கிய இடத்தைப் பெற்றது. பொதுவெளியில் ஆயுதங்களை ஏந்திக்கொண்டு காதைக் கிழிக்கும் வாத்தியங்களின் இசையை எழுப்பிக்கொண்டு மக்கள்தொகை நிறைந்த பகுதிகளில் ஊர்வலமாகச் சென்றதைக் கண்ட மக்கள் மிகுந்த எரிச்சலுக் குள்ளாயினர். வெறித்தனமாக எழுப்பிய கோஷங்கள் மக்களை ஆதரவாகவோ, எதிராகவோ தூண்டி விடக்கூடியதாகவிருந்தன. நிர்வாகத்தின் செயலற்றதன்மை அபாயகரமான சம்பவங்கள் நேரக்கூடிய வகையிலிருந்தது.

அஞ்சியபடியே விளைவுகள் இருந்தன. அருவருக்கத்தக்க வகுப்புவாத வெறியுடன்கூடிய கொடூர வன்முறையின் காரணமாக பல உயிரிழப்பு கள் ஏற்பட்டன. தடையுத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டதுடன் பாதுகாப்புப் படையும் துணை ராணுவமும்கூட ஈடுபடுத்தப்பட்டது. ஒருபுறம் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அப்பாவிமக்கள் கைதுசெய்யப்பட்டனர். மற்றொரு புறம் நன்கறியப்பட்ட கலவரக்காரர்கள் சுதந்திர மாக உலாவந்தனர்.

### முன்னமே திட்டமிடப்பட்ட, சமீபத்திய மேற்கு வங்க, பீஹார் வகுப்புவாத வன்முறை

இவ்வாறு ராம நவமியை மையமாகக்கொண்ட வகுப்புவாத வன்முறையுடன் தற்போது மத்தியிலும் பல்வேறு மாநிலங்களிலும் அதிகாரத்திலிருக்கும் ஆர்எஸ்எஸ்–பாஜகவின் இடைவிடாத முன் முயற்சிக்கு மற்றுமொரு அத்தியாயம் சேர்ந்துள்ளது. ராமாயணத்தின் 300க்கும் மேற்பட்ட வகையான பதிப்புக்கள் எவையும் இரக்கமற்ற இதுபோன்ற படுகொலைகளை ஆதரிக்கவில்லை என்பதை முதலில் நாம் நினைவிற்கொள்ள வேண்டும். இருந்தபோதிலும், ராமர் பெயரால் உயிர்கள் பலியாவதைப்பற்றி இந்த ஆர்எஸ்எஸ்–பாஜக வகைப்பட்ட இந்துத்துவவாதிகள் கிஞ்சித்தும் கவலை கொள்வதில்லை.

திரிணமூல் காங்கிரஸிலிருந்து தாவிய சில பாஜக தலைவர்கள் வங்கமும்கூட இறுதியில் 'இந்தியக் கலாச்சாரத்தை' ஏற்றுக்கொண்டுவிட்ட தென பெருமை பேசினர். மக்களைக் கொல்வதற்காக ராமர் பெயரை உபயோகிப்பது எவ்வகைக் கலாச்சாரம்? பின் ஏனிந்த மத படுகொலைகள்? இறுதியில் பார்த்தோமானால், நாடுமுழுவதும் வகுப்புவெறியைத் தூண்டிவிட்டு, அதன்மூலம் மக்களை இருகூறாகப்பிரித்து பரஸ்பரம் வெறுப்பு மூட்டி, பின் பெரும்பான்மை சமூகத்தினரின் வெறித் தனமான ஆதரவைப்பெற்று இந்த பூர்ஷ்வா பாராளு மன்ற அமைப்பில் அதிகாரத்தையும் பதவியையும் பிடிப்பதே இதன் நோக்கமென்பது நிரூபணமாகிறது. அதேசமயம், ஆளும் முதலாளித்துவ சுரண்டல் வர்க்கத்தைக் காப்பதற்காக மத வேறுபாடின்றி தங்களை ஒட்டச்சுரண்டும் இவ்வமைப்பிற்கெதிராக ஒன்றுபட்டு போராடுவதை தடுக்க உழைக்கும் மக்களை இருகூறாகப் பிரிக்கிறார்கள்.

மேற்குவங்கத்தில் ஆட்சிக்கு வரத்துடிக்கும் ஆர்எஸ்எஸ்–பாஜகவானது ஆளும் திரிணமூல் காங்கிரசிடமிருந்து வரும் கடும் எதிர்ப்பை சந்திக்க வெறித்தனத்தை தூண்டிவருகிறது. 'ராமர் பாஜகவுக்கு மட்டுமே உரியவரா' எனும் கோஷத்தை எழுப்பி ஆளும் திரிணமூல் காங்கிரஸ் அதற்கு பதிலடி கொடுக்கிறது. ஆயுதங்களை பகிரங்கமாக காட்சிப் படுத்துவதற்கெதிராக கடும்நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேற்குவங்க அரசாங்கம் எச்சரிக்கை விடுத்த போதும் ராமநவமியன்று அதே வெறித்தனத்துடன் ஆயுதங்களுடன் ஊர்வலம் செல்ல ஆளும்கட்சியான திரிணமூல் ஏற்பாடு செய்தது.

ராமநவமியன்று சில பகுதிகளில் இந்த வன்முறை எந்தளவிற்கு இருந்ததென்றால் ஆர்எஸ்எஸ்–பாஜக, விஎச்பிகூட வெளியேவந்து ஊர்வலம் எதுவும் மேற்கொள்ளாமல் ஹனுமன் ஜெயந்தி கொண்டாட் டத்தை அமைதியாக கோவிலுக்குள்ளேயே சில பிரார்த்தனைகளை நடத்துமளவிற்கு இருந்தது. பல்வேறு மாவட்டங்களிலும் நகரங்களிலும் ஹனுமன் ஜெயந்தி ஊர்வலங்களை ஏற்பாடு செய்ததன்மூலம் இவ்வாறான திறந்த களத்தை திரிணமூல் காங்கிரஸ் நன்கு பயன்படுத்திக்கொண்டது. பயங்கர ஆயுதங் களும்கூட அவ்வூர்வலத்தில் இடம்பெற்றிருந்தன.

பாஜகவுடன் அதிகாரத்திற்கான போட்டி இது என்பதை திரிணமூல் தலைவர்கள் பகிரங்கமாகவே ஒப்புக்கொண்டதாக செய்திகள் வந்தன. ஆனால், இதெல்லாம் பாஜகவின் மதவாதத்தை எதிர்க்கிறோம் எனும்பெயரில் அதிகாரத்தைப் பிடிப்பதற்காக மேற்கொள்ளப்படும் கேடுகெட்ட வகுப்புவாத நடவடிக்கையாகாதா?

நிதீஷ்குமார் முதலமைச்சராகவுள்ள பீஹாரில் அரசில் சமீபகாலமாக பாஜக அங்கம் வகிக்கிறது. அங்கு மத்திய அமைச்சர் அஸ்வினிகுமார் சௌபேயின் மகன் மார்ச் 17அன்று பாகல்பூரில் துவக்கிய பேரணி யானது இரண்டு வாரங்களில் அம்மாநிலத்தின் குறைந்தபட்சம் 9 மாவட்டங்களிலாவது வகுப்புவாத வெறியையும் தாக்குதலையும் தூண்டிவிட்டது. அதில் பாஜக தலைவர்களும் முக்கிய பங்காற்றினர். ஒரு பகுதியில் நிலைமை கட்டுப்பாட்டிற்கு கொண்டு வந்தபோதிலும் மாநிலத்தின் மற்ற பகுதிகளில் வெறிவாதம் தூண்டப்பட்டது.

இரண்டு மாநிலங்களிலும் ஒரே மாதிரியான முறையை காணமுடியும். ஒரேசமயத்தில் பல்வேறு பகுதிகளில் துவக்கப்பட்ட வகுப்புவாத தாக்கு தல்கள் ஒவ்வொன்றிலும் புதிய பிரச்சினை களை உருவாக்குவதற்கான முயற்சியும் தென் பட்டது. மேற்கு வங்கத்தில் ராம நவமியானது ஒரு முக்கிய பண்டிகையாக எப்போதும் இருந்த தில்லை. மாறாக, வசந்த காலத்தில் பசந்தி அல்லது அன்னபூர்ணா பூஜை போன்ற பல பண்டிகை களுடன் சேர்ந்து அதுவும் ஒரு குடும்ப நிகழ்வாக பெரும்பாலும் தனிப்பட்ட வீடுகளில் இந்த ராம நவமியானது அனுஷ்டிக்கப்பட்டது. சமீபத்திய வருடங்களாகத்தான் அதன்மீது ஒரு கவர்ச்சியை உருவாக்க பாஜக முயற்சித்துவருகிறது.

இத்தூண்டுதல்களெல்லாம் மதத்துடனோ, பாரம்பரியத்துடனோ எவ்வகையிலும் சம்மந்தப் பட்டவையல்ல என்பதை மேற்கூறிய விஷயங்கள் தெளிவுபடுத்துகிறதல்லவா? சிறுபான்மை சமூகத் தினர் துரத்தப்பட்டதும், அடிக்கப்பட்டதும், கொல்லப்பட்டதும், அவர்களுடைய வீடுகளும் கடைகளும் கொள்ளையடிக்கப்பட்டதும் சூறை யாடப்பட்டதும் தீ வைக்கப்பட்டதுமான முன் கூட்டியே திட்டமிடப்பட்ட இத்தாக்குதல்களின் நோக்கத்தின்மீது எவ்வித சந்தேகமும் எழவில்லையா?

ராம நவமிக்கு முன்பு ஆர்எஸ்எஸ்ஸின் தலைவர் மோகன் பகவத் பீஹாருக்கு 14 நாட்கள் வருகை தந்தது இச்சந்தேகத்தை நன்கு வலுப் படுத்துகிறது. மேற்குவங்கத்திற்குச் சென்ற பாஜகவின் தலைவர் அமித்ஷாவும் அதன் உள்ளூர் தலைவர்களும் தம்முடைய பேச்சில் விஷத்தை கக்கினர். வகுப்புவாத மோதல்களை உருவாக்கும் திட்டத்தை வடிவமைக்க பாஜகவின் உள்ளூர், மாவட்ட கிளைகளுக்கு இப்பேச்சுக்கள் போதாதா?

வெறுப்புக்கு எதிரான ஒன்றுபடுதல் (யுனைடெட் எகெய்ன்ஸ்ட் ஹேட்–United Against Hate) என்ற தன்னார்வ அமைப்பானது தனது உண்மையறியும் ஆய்வின்மூலம் பீஹாரின் 9 மாவட்டங்களில் நிகழ்ந்த வகுப்பு வன்முறை யானது 'தன்னிச்சையானதல்ல' பாஜக, பஜ்ரங் தளால் 'முன்கூட்டியே திட்டமிடப்பட்டது' என டெல்லியில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் உறுதிப்படுத்தியது.

### வகுப்புவாத சக்திகளின் பயங்கரத் தாக்குதல் இருந்தபோதிலும் வகுப்புவாத செயற்பாடுகளையும் சிந்தனைகளையும் மக்கள் நிராகரித்துவருகின்றனர்

ராம நவமியை மையமாக கொண்ட சமீபத்திய வன்முறைகளெல்லாம், குறிப்பாக ஆட்சியதி காரத்திற்கு வந்தபின் ஆர்எஸ்எஸ்–பாஜகவினு டைய கேடுகெட்ட சதித்திட்டத்தில் சேர்ந்த புதிய அத்தியாயமாகும். மறுபுறம், ஊடகங்களில் வந்த மிகக்குறைந்த செய்திகளும்கூட வகுப்பு வாத பயங்கரவாத சக்திகளின் மூர்க்கத்தன மான முயற்சிகளுக்குப்பின்பும் இவ்விரு சமூகங் களையும் சேர்ந்த சாமானிய மக்கள், பாதிக்கப் பட்ட பகுதிகளில்கூட வகுப்புவாத மோதல்களை அங்கீகரிக்கவில்லை என கூறுகின்றன. அவர்கள் அமைதிக்காகவும் நல்லிணக்கத்திற்காகவும் உறுதியுடன் இருக்கிறார்கள்.

எங்கெல்லாம் அமைப்புரீதியாக இல்லையோ அங்கு இறப்பையும் அழிவையும் தடுக்கமுடிய வில்லை, முடிந்தமட்டும் விரைவாக நிவாரண நடவடிக்கையில் இறங்க முயற்சித்தனர். சமூக விரோதிகளால் அழிக்கப்பட்ட சொத்துக்களை மறுகட்டுமானம் செய்வதற்காக முடிந்த இடங் களில் மக்கள் நிதி திரட்டினர். ஒரு மசூதியை மறுகட்டுமானம் செய்வதற்கு ஒரு கோவில் டிரஸ்ட் நிதிகூட உபயோகப்படுத்தப்பட்டது. துவக்க அதிர்ச்சியிலிருந்து மீண்ட இரு சமூகத் தினரும் நாசமும் அழிவும் மேற்கொண்டு ஏதும் ஏற்படாதவாறு இரவு ரோந்து உட்பட கூட்டு கண்காணிப்பை மேற்கொண்டனர்.

தொடர்ச்சி 12ம் பக்கம்

## பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்
## காரல் மார்க்ஸ் அவர்களின் 200வது பிறந்த ஆண்டு




சென்னையில் மே 11, 2018 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் அனவரதன், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டி உறுப்பினர் உரையாற்றுகிறார்

## ஆர்எஸ்எஸ்–பாஜகவால் அரசியல் ரீதியில் உருவாக்கப்பட்ட வகுப்புவாதத் தீ

# பயங்கரத் தாக்குதலுக்கிடையிலும் மக்கள் ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் காத்தனர்

11ம் பக்கத் தொடர்ச்சி

வகுப்புவாத சதித்திட்டம் முன்கூட்டியே திட்டமிடப்பட்டபோது, அதற்கெதிரான மக்களின் எதிர்வினை தன்னெழுச்சியாக இருந்தது. எல்லாவிடங்களிலும், பத்திரிகை அல்லது அரசு நிர்வாகத்திடம் இரண்டு உண்மை களை மக்கள் தெளிவுபடுத்தினர். ஒன்று, பகிரங்க மாவோ மறைமுகமாகவோ வகுப்புவாதவெறியை தூண்டிவிடுவதற்காக வெளியூர் ஆட்கள் பெரும் எண்ணிக்கையில் தருவிக்கப்பட்டார்கள்; துவக்கத்தில் குழப்பத்தை ஏற்படுத்தியும் சாதாரண மக்களை பாதுகாப்பற்றதாக்கும் போக்கில் பயங்கர ஆயுதங்களுடன் அவர்களுடைய திடீர் ஊடுருவலானது உள்ளூர் ரௌடிகளையும் ஈர்த்துக்கொண்டது. மேற்குவங்கத்தில் முன்பு நடைபெற்ற வகுப்புவாத வன்முறையிலும்கூட பிரச்சினை ஏற்படுத்துவதற்காக வெளிஆட்கள் வரவழைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் இருந்தன.

இரண்டாவது, பாதிக்கப்பட்டவர்களை பார்பதற்காக வருகைபுரிந்த கவர்னரின் பாதுகாப்பிற்காக அணியணியாய்வந்த காவல்துறையினர் எவரையும் வகுப்பு கலவரத்தின்போது காணோம் அல்லது கண்டும் காணாதிருந்தனர் என கடும் அதிருப்திகொண்ட மக்கள் பத்திரிகையிடம் சுட்டிக் காட்டினர். பீஹாரிலும்கூட, தாக்குதலின்போது நாசமாக்கப்பட்ட மத ஸ்தலங்கள் உட்பட சொத்துக்களை மறுகட்டுமானம் செய்வதற்கான நிதியை ஒதுக்க முதலமைச்சரை நிர்ப்பந்திக்குமளவிற்கு வகுப்புக் கலவரத்திற்கெதிராக மக்களிடமிருந்து அழுத்தம் உருவானது.

### உ பி யிலும் மற்றெங்கும் புதிய வடிவத்தையடைந்த கீழ்த்தரமான வகுப்புவாத அபாயம்

இது இவ்வாறிருக்க, ஆர்எஸ்எஸ்–பாஜக கூட்டணியானது அதன் பன்முனைத்தன்மையுள்ள பயங்கரத் தாக்குதலை நாடு முழுக்க மூர்க்கத்தனமாக தொடுத்துவருகிறது. ராம நவமியை மையமாக வைத்து பெரிய சம்பவங்கள் எதுவும் உ பி மாநிலத்தில் நடைபெற்றதாக செய்திகள் எதுவும் வரவில்லையாகிலும், வகுப்புவாத தீயின் ஒரு களமாக எப்போதும் அம்மாநிலம் இருந்துவருகிறது. மாட்டிறைச்சி உண்பது குறித்த பொய்யான அமளிதுமளியாகட்டும் அல்லது லவ் ஜிகாத் ஆகட்டும் அல்லது ஏதாவது கட்டுக்கதைகளை மையமாகவைத்து சிறுபான்மையினர், தலித்துக்கள் மீது தாக்குதல்கள், கொடூரமாக அடித்து கொலை செய்தல், கொலைகள், பரந்துபட்ட கலவரங்கள் ஆகியவற்றிற்கு அம்மாநிலத்தில் எந்தப் பஞ்சமுமில்லை. சிறுபான்மையினரை கொலைசெய்த, அவர்தம் வீடுகளிலிருந்தும் மண்ணிலிருந்தும் பிடுங்கியெடுத்த சமீபத்திய முசாபர்நகர் படுகொலை நடைபெற்ற மாநிலம்தான் அது.

அதுபோன்ற தாக்குதல்கள்தான் அருகமைந்த மத்தியபிரதேசம், ராஜஸ்தான், குஜராத்தில் சற்றும் தணியாது நடைபெற்றுவருகிறது. தற்போது இம்மாநிலங்களையெல்லாம் அரங்கத்தில் பாஜகவும் அந்தரங்கத்தில் ஆர்எஸ்எஸ்ஸும் ஆண்டுவருகின்றன. சிறுபான்மையினருக்கும் தலித்துக்களுக்கும் பாதுகாப்பற்ற பீதிகொண்ட ஒரு பயங்கரமான சூழ்நிலையை உருவாக்குவதன்மூலம் எவ்வித செயற்பூர்வமான எதிர்ப்புமின்றி இந்த பயங்கரவாத படைகளும் அவற்றின் தோழமை அமைப்புக்களும் தங்கள் தாக்குதல்களை நேர்த்தியாக்கியும் கூர்மைபடுத்தியும் வருகின்றன.

மிகவும் வருந்தத்தக்க விஷயம் என்னவென்றால், உ பியில் பாஜக ஆட்சியின்கீழ் ‘முஸ்லீம்கள் பிறப்பிலேயே எதிரிகள் என குழந்தைகள் மூளைச்சலவை செய்யப்பட்டு முஸ்லீம்களை தாக்கவும் கொலைகூட செய்யவும் பயங்கர ஆயுதப் பயிற்சி அளிக்கப்பட்டுவருவதாக செய்திகள் கூறுகின்றன. மேற்குவங்கம், பீஹாரின் சமீபத்திய நிகழ்ச்சிகளிலிருந்து இவ்வகையான கேடுகெட்ட, இழிந்த வகுப்புவெறி கலாச்சாரத்தை பிற மாநிலங்களுக்கும் ஏற்றுமதிசெய்ய பாஜக–ஆர்எஸ்எஸ் கூட்டணியானது முயற்சிப்பதாகத் தோன்றுகிறது.

அதுபோலவே கவலைதரும் விஷயமென்னவென்றால் காவல் மரணம், ‘என்கவுண்டர்கள்’ அதிகரிப்பதுகுறித்து உ பி முதலமைச்சர் இவையெல்லாம் தொடரும் என பகிரங்கமாக அறிவிக்கிறார். அவருடைய இவ்வறிவிப்பின் அர்த்தம் பாஜகவையும் அதன் அரசாங்கத்தையும் எவராவது குறிப்பாக, சிறுபான்மையினரும் தலித்துக்களும் எதிர்த்தால் அவர்களுக்கு இவ்வாறு நேருவது நிச்சயம் என்பதுதானாகும். உ பியில் ஒரு கிராமத்தில் நடைபெற்ற ஒரு பயங்கர சம்பவமே இதற்கு சாட்சி.

அக்கிராமத்தில் போலீஸ் முரசுகளுடன் சென்று ஒரு குடும்பத்தையே கிரிமினல் குடும்பம் என பொதுவெளியிலேயே முத்திரைக்குத்தி சித்திரவதை செய்தது. முன்பு நடைபெற்ற ‘என்கவுண்டர் வழக்குகளை மேலும் தொடராதீர்கள், இல்லையேல் உங்கள் குடும்பத்திலுள்ள பிற மகன்களுக்கும் இதே கதிதான் ஏற்படும்’ என மிரட்டப்பட்டதாக அக்குடும்பத்தினர் கூறுகின்றனர் (டைம்ஸ் ஆஃப் இந்தியா ஏப்ரல் 1, 2018). சிறைச்சாலையிலோ அல்லது சுடப்பட்டோ இறந்த அவர்களின் குற்றங்களுக்கும் அக்குடும்பத்தின் பிற உறுப்பினர்களுக்கும் எந்த சம்மந்தமுமில்லாத நிலையில் அக்குடும்பத்தினர் தேவையின்றி சித்திரவதை செய்யப்படுகின்றனர் என அக்கிராமத்தினர் செய்தியாளர்களிடம் கூறினர்.

### முதலாளித்துவ சுரண்டல் அமைப்பின் அடித்தளத்தில்தான் வகுப்புவாதம் வளர்கிறது

இவையெல்லாம் ஏன் நடைபெறுகிறது என்ற கேள்விக்கான விடை: நாட்டை வகுப்புவாதமயமாக்கும் ஆர்எஸ்எஸ்ஸின் சதித்திட்டத்தின் ஒரு அவசர புதிய அத்தியாயமாக ராம நவமியும் ஹனுமன் ஜெயந்தியும் ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டதென்பதை சில பின்னணி விவரங்களைக் கொண்டு பார்ப்போம்.

தற்போது நாடு ஆயிரத்தெட்டு பிரச்சினைகளுடன் முழுமையான சமூக, பொருளாதார, அரசியல் நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. அரசாங்கங்கள் வருகின்றன போகின்றன. ஆனால் நிரந்தர நோயான நாட்டின் முதலாளித்துவ பொருளாதாரம் அப்படியே நிலைத்து நிற்கிறது. வளர்ச்சியின் நாயகன் என ஏகபோகங்களாலும் கார்ப்பொரேட் குழுமங்களாலும் திருவாளர் மோடிக்கு சூட்டப்பட்ட திருநாமம் ஏற்கெனவே வெளுத்துவிட்டது.

வேலையின்மையால் விரட்டப்பட்ட இளைஞர்கள் பாதுகாப்பு ஏதுமற்ற புலம்பெயர்வு தொழிலாளியாய் தாறுமாறாக ஓடிக்கொண்டிருக்கின்றனர். சாமானிய மக்கள் விலையேற்றத்தாலும் வேலையின்மையாலும் வாங்கும் சக்தியை ஒவ்வொரு நொடியும் இழந்து கொண்டிருக்கின்றனர். அச்சிதின் நல்லநாட்களை தருவதாக வாக்குறுதியளித்த பாஜக, பணமதிப்புநீக்க நடவடிக்கையால், அது கருப்புப் பணத்தை வெளிக்கொண்டுவர தவறியது மட்டுமல்ல, மக்களிடம் கொஞ்சநஞ்சமிருந்ததையும் பறித்துவிட்டது, ஏன் அவர்களின் வாழ்வாதாரத்தையே அழித்துவிட்டது. ஜிஎஸ்டி எரியும் வயிற்றில் எண்ணெய் ஊற்றியது போலாகியது.

எப்போதும் அதிகரிக்கும் வங்கிகளின் பல லட்சம் கோடி செயல்படாத சொத்துக்கள், வங்கிக்கணக்கை துவக்கச்சொல்லி கட்டாயப்படுத்தப்பட்டு பின் குறைந்தபட்ச இருப்பு இல்லாததால் தண்டம் விதிக்கப்பட்ட, விழிபிதுங்கி நிற்கும் ஏழை–நடுத்தர வர்க்க வாடிக்கையாளர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக கொடூரமான எஃப் ஆர்டிஐ மசோதா. விஜய் மல்லையா, நீரவ் மோடி போன்ற மோசடிக்காரர்கள் பல ஆயிரக்கணக்கான கோடிகளை கொள்ளையடித்துவிட்டு, ஒரு வருடத்திற்கு முன்பே விஜிலென்ஸ் கமிஷன் எச்சரிக்கை கொடுத்திருந்தபோதும், நாட்டைவிட்டு ஓட அனுமதிக்கப்பட்டனர்.

பிரதமரும் நிதியமைச்சரும் இத்தகைய மோசடிப்பேர்வழிகளை பிடிப்பதற்கு முயற்சி செய்வதற்கு பதிலாக கார்ப்பொரேட்டுகளை மகிழ்விக்கும் திட்டங்களை ஒன்றன்பின்ஒன்றாக அமுல்படுத்திவருகிறார்கள், அதேவேளையில் மக்கள் தங்கள் வயிறை இறுக்கிக்கொள்கிறார்கள். இத்தனைக்கும்மேல், அமைச்சர்களும் தலைவர்களும் பெருமைபீற்றிக்கொள்வது நமது தேசத்தை திகைப்பிற்குள்ளாக்குகிறது, நாம் காரணகாரியமறியும், ஆய்வுசெய்யும் விஞ்ஞான யுகத்தில்தான் வாழ்கிறோமா அல்லது மூடநம்பிக்கையில் வீழ்ந்துகிடக்கும் பழைமைவாத சிந்தனைக்கு அடிமைப்பட்டுகிடக்கும் இருட்டுச் சிறையில் வாழ்கிறோமா என நம்மைப்பற்றி உலக மக்கள் நினைக்கக்கூடும். யாராவது கிராமத்தாரோ அல்லது நன்கறிந்த முற்போக்கான சிந்தனையாளரோ, பத்திரிகையாளரோ மாறுபட, கேள்விகேட்க, எதிர்க்கத் துணிந்தால் அவர்கள் மிரட்டப்படுவர், அவசியம் நேர்ந்தால் கொலைகூடச் செய்யப்படுவர். மேலே உ பியை சேர்ந்த குடும்பத்தினர் கூறிய வார்த்தையில் சொல்வதானால், ‘உயர்ஜாதி இந்துக்களுக்கு கீழ்படியுங்கள் அல்லது உயிரை விடுங்கள்’ என்பதுதான் விளிம்புநிலை தலித்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் அவர்கள் இடும் கட்டளை. பெண்களும் குழந்தைகளும் ஆள்கடத்தலுக்கும் முறைகேடான பாலியலுக்கும் எளிதாக இலக்காகிவிடுகின்றனர். இவையெல்லாம் ஆளும் வர்க்கத்தின் மௌனமான ஆதரவோடு நடைபெறுகின்றன.

ஏகபோகங்களுக்கு தற்போது மிகவும் கீழ்படிந்து நடக்கும் பாஜகவானது உள்நாட்டு, வெளிநாட்டு ஏகபோகங்களையும் கார்ப்பொரேட்டுகளையும் முழுமையாக மகிழ்விக்கும் செயல்களை செய்து வருகிறது. பிற பாராளுமன்ற கட்சிகளும் தேசிய அல்லது பிராந்திய பூர்ஷ்வா–குட்டி பூர்ஷ்வா, சமூக ஜனநாயக கட்சிகள் பூர்ஷ்வா பாராளுமன்றத்தில் பாஜகவுடன் போலிச் சண்டையில் ஈடுபட்டு வருகின்றன. ஏகபோகங்களுக்கு சேவைசெய்வதொன்றும் பாஜகவின் பிறப்புரிமையன்று என்பதை நிரூபிக்க இக்கட்சிகளெல்லாம் ஆட்சிக்கு வரும்போது இதே பாதையில் நடைபோடுகின்றன.

இயற்கையாகவே, இவையெல்லாம் கடுமையான அதிருப்தியையும் கோபத்தையும் மக்களிடம் ஏற்படுத்துகின்றன; எப்போது வேண்டுமானாலும் போராட்டங்கள் வெடித்தெழும் நிலை காணப்படுகின்றன. இவ்வதிருப்பதியும் கோபமும் ஒன்றுபட்ட நீடித்த போராட்டங்களாக உருவெடுப்பதை, ஏன் வாக்குகளாகக்கூட மாறாதிருக்க சுரண்டப்படும், ஒடுக்கப்படும் மக்களை பிளவுபடுத்தும், அடக்கியாளும் வழிகளை ஆட்சியாளர்கள் எப்போதும் மேற்கொள்கின்றனர். அவர்களின் கீழ்படிந்த திறம்படைத்த ஓர் இயக்கம் எனும் வகையில் பாஜக–ஆர்எஸ்எஸ் கூட்டணியானது மனிதத்தன்மையற்ற வகுப்புவாதத்தினடிப்படையில் வாக்கு சேகரிக்கும் தந்திரத்தை வகுக்கிறது.

ராம நவமி, ஹனுமன் ஜெயந்தியை ஒரு ஆயுதந்தாங்கிய கொண்டாட்டமாக்கி, சிறுபான்மையினரை ரத்தம் சிந்தச்செய்து, வீடு வாசலிலிருந்து அவர்களை விரட்டியடித்து, பெரும்பான்மை மதத்தின் ஒரு பிரிவினரை தூண்டிவிட்டு வெறிகொள்ளச்செய்து மத சிறுபான்மையினர்மீது வெறுப்பும் விரோதமும் கொள்ளச்செய்வது ஆகிய இவையெல்லாம் இழிந்த வகுப்புவாத வாக்குவங்கி அரசியலின் ஒட்டுமொத்த திட்டத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

### தேர்தலை மனதில்கொண்டு மக்களிடையே பிளவை உண்டாக்க பாஜக–ஆர்எஸ்எஸ் எப்போதுமே வகுப்புவாதத்தைத் தூண்டுகிறது

பாராளுமன்ற தேர்தலுக்கு இன்னும் ஒரு வருடமே இருக்கிறது. பல்வேறு மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல்கள் நடைபெற்று வருகின்றன. மேற்குவங்கத்தில் 3 அடுக்கு பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இடதுசாரிவாதத்தின் பெருமையை உயர்த்திப்பிடிக்க நமது கடும்முயற்சி இருந்தபோதிலும், 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சியிலிருந்த சமூக ஜனநாயக கட்சியான சிபிஐ(எம்) பிற பூர்ஷ்வா கட்சியைப் போலவே மக்கள் விரோத கொள்கைகளை அமுல்படுத்தி மாநிலத்தின் இடதுசாரிவாதத்தின் வலிமையான பாரம்பரியத்தை கறைபடுத்திவிட்டது. இத்தகைய நிலையில், மிகவும் தேவைப்படுகிற வெகுஜன இயக்கங்கள் தடைபட்டுள்ளன.

முன்பு, திரிசூலம் தரித்த காவித் துறவிகள்

தொடர்ச்சி 13ம் பக்கம்

## ஆர்எஸ்எஸ்–பாஜகவால் அரசியல் ரீதியில் உருவாக்கப்பட்ட வகுப்புவாதத் தீ

# உண்மையான இடதுசாரிவாதம் மற்றும் உயர்ந்த கலாச்சாரத்தின் மீதமைந்த மக்கள் இயக்கமே வகுப்புவாதத்திற்கெதிரான தடையரண்

*12ம் பக்கத் தொடர்ச்சி*

அரசியலில் இணைவது குறித்து நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களே எச்சரிக்கை விடுத்திருக்கும் பொழுது, தேசிய இயக்கத்திலேயே பங்குபெறாத பாஜகவின் முன்னோடிகள் குறித்து எதுவும் சொல்வதற்கில்லை ஆனால், காங்கிரஸ் உட்பட நாட்டின் பூர்ஷ்வா தேசியத் தலைவர்கள் செவிமடுக்கவில்லை.

இருந்தும்கூட, விடுதலை இயக்கத்தின்போது வகுப்புவாத சக்திகள் நாடுதழுவிய அளவிலும்சரி, பல்வேறு மாநில அளவிலும்சரி வெகுஜனங்களிடம் ஊடுருவுவதில் தோல்வியுற்றன. விடுதலைக்குப் பின்பும்கூட இடது, ஜனநாயக இயக்கம் குறைந்த பட்சமாவது இருந்ததன் காரணமாக முஸ்லீம்கள் மீதான வெறுப்பு சிந்தனையை ஆர்எஸ்எஸ்ஸானது தான் பிறந்தது முதற்கொண்டே தூண்டிவிட்டு வந்தபோதிலும் அது தலைதூக்க முடியவில்லை.

ஆனால் சுரண்டல் முதலாளித்துவ அமைப்பு ஸ்திரப்படுத்தப்பட்டுவிட்டதால் முதலாளித்துவ ஆட்சிக்கெதிராக எழுந்த மக்களின் அதிருப்தியையும் கோபத்தையும் தந்திரமாகப் பயன்படுத்தி, சுரண்டல் மேலும் அதிகரிக்கவும் வலுப்படவும் ஆர்எஸ்எஸ் உதவியது. இதன் போக்கில், ஒரு கட்டத்தில் ஆர்எஸ்எஸ்ஸின் அரசியல் முகமான பாஜக தன்னை வலுப்படுத்திக்கொள்ளும் வாய்ப்பை பெற்று, காற்று தன் பக்கம் அடிப்பதை கண்டது. வரலாற்றுச்சிறப்புமிக்க பாப்ரி மஸ்ஜித் இடிக்கப்பட்டதாகட்டும் பேரழிவு குஜராத் படுகொலையாகட்டும் அதுபோன்ற வகுப்புவாத வெறித்தனத்தை தூண்டிவிடுவதில் புத்தூக்க ஆற்றல்கொண்டு புதியபுதிய வழிகளையும் முறைகளையும் கையாண்டனர்.

மத்தியில் அல்லது பல மாநிலங்களில் அதிகாரத்திற்கு வந்தபின் கொள்ளையடித்தல், அடித்துக்கொல்லுதல், கொலைசெய்தல், போலி என்கவுண்டர் நடத்துதல், சிறுபான்மையினர் மீதும் தலித்துக்கள் மீதும் அவதூறு அல்லது வெறுப்புப் பிரச்சாரம் செய்தல் ஆகியவற்றின் மூலம் வாக்குவங்கியை உருவாக்க கேடுகெட்ட, அபாயகரமான புதிய வழிகளையும் முறைகளையும் கையாள்கின்றனர்.

இந்துத்துவா எனும் முத்திரைதாங்கிய ஆர்எஸ்எஸ்–பாஜகவானது பரஸ்பரம் வெறுப்பு கொள்ளச்செய்து உழைக்கும் மக்களை செங்குத்தாக பிரிப்பதானது ஏகபோகங்களுக்கும் முதலாளித்துவ அமைப்பிற்குமெதிராக ஒன்றுபட்டு போராடுவதிலிருந்து சுரண்டப்படும் மக்களை தடுப்பதானது ஆளும் ஏகபோகங்களின் அதிகரிக்கும் நலனுக்கு நன்கு பொருந்துகிறது. நான்காவது தூணின் செல்வாக்குமிக்க ஒரு பிரிவு உட்பட அரசு கட்டமைப்பின் வெளிப்படையான மறைமுகமான ஆதரவானது புதியபுதிய வழிகளும் முறைகளையும் கண்டுபிடிப்பதற்கு ஆர்எஸ்எஸ்–பாஜகவுக்கு உற்சாகத்தைத் தருகிறது.

ஆனால், இப்படிப்பட்ட இருண்ட அரசியல் சூழ்நிலையிலும்கூட, பாஜக எல்லாஇடங்களிலும் குறிப்பாக மேற்குவங்கத்தில், தன் வேரை ஆழமாக செலுத்தமுடியவில்லை. பீஹாரிலும்கூட, முதலமைச்சர் நிதீஷ் குமாரை தங்கள் பிடிக்குள் கொண்டுவந்ததன்மூலம் அதிகாரத்தில் இடம்பெற்ற போதும் அம்மாநிலத்தில் உறுதியான வேரை ஊன்ற இன்னும் முயற்சித்துக் கொண்டிருக்கிறது. வெறுப்பு, படுகொலை விஷத்தை உமிழக்கூடிய ராம நவமி–ஹனுமன் ஜெயந்தி ரீதியிலான இந்து வகுப்புவாதத்தை முரசு கொட்டும் பாஜகவானது இவற்றையெல்லாம் நிறைவேற்ற வேண்டியதிருக்கிறது.

பெருமெண்ணிக்கையிலான அப்பாவி மக்கள் இறப்பதோ அல்லது அவர்கள் வீடு, கடை சூறையாடப்படுவதோ, தீ வைக்கப்படுவதோ அதுவெல்லாம் அவர்களுக்கு ஒரு விஷயமேஅல்ல. முன்னர் கூறியதுபோல், மேற்குவங்க ஆளும்கட்சியான திரிணமூல் காங்கிரஸின் உக்கிரங்கொண்ட தலைவர் பாஜகவை எதிர்க்கிறோம் எனும்பெயரில் அதே வகுப்புவாத திட்டத்தை கையிலெடுக்க எந்த தயக்கமும் கொள்ளவில்லை.

அப்படியில்லையெனில், சிறுபான்மை வாக்காளர்களை திரிணமூல் கவருகிறது எனும் நம் குற்றச்சாட்டை, அக் குற்றச்சாட்டு சரியோ தவறோ, முறியடிக்கும் மூர்க்கத்தனமான முயற்சியில் பாஜகவுடன் போட்டியிட்டுக்கொண்டு பெரும்பான்மை வாக்குவங்கியை கவருவதற்கான முயற்சியேயன்றி வேறல்ல.

வகுப்புவாதத்தை ஏதாவதொருவகை வகுப்புவாதத்தைக் கொண்டு முறியடிக்கமுடியுமா? நிச்சயமாக முடியாது. மாறாக, சூழ்நிலையை மேலும் விஷமாக்கி, மக்களிடம் வகுப்புவாத மனநிலையை விதைப்பதன்மூலம் வகுப்புவாத சக்திகள் தம் வேரை மேலும் நன்கு ஊன்றிக் கொள்ளவே உதவும்.

### வகுப்புவாதத்தை முதலாளித்துவம் உற்பத்திசெய்து உரமூட்டுகிறது: அதை எதிர்ப்பதும் விரட்டியடிப்பதும் மக்கள் கையில்தான் உள்ளது

முதலாளித்துவம் நீடிக்கும்வரை, இம் முதலாளித்துவ சுரண்டல் அமைப்பிற்கு கீழ்படிந்து சேவகம் செய்யும் பூர்ஷ்வா–குட்டி பூர்ஷ்வா கட்சிகளும் சமூக ஜனநாயக கட்சிகளும் மக்களை பிரிக்கவும் அவர்களுடைய ஒற்றுமையை குலைத்து அதன்மூலம் மக்கள் வாழ்வின் எரியும் பிரச்சினைகளை மையமாகக்கொண்ட முதலாளித்துவ எதிர்ப்பு மக்கள் இயக்கத்தை வளர்த்தெடுக்கும் திறன்மிக்க உண்மையான முயற்சியை முறியடிக்க ஆயிரத்தெட்டு சூழ்ச்சிகளையும் சதிகளையும் கண்டுபிடித்துக் கொண்டேயிருக்கும். இத்தகைய சூழ்ச்சிகள் சதிகளில் மிகக் கொடியது வகுப்புவாத, வெறுப்பு அரசியலாகும்.

ஒடுக்கப்படும் மக்களிடம் எடுத்துச்செல்லப்படவேண்டிய உண்மை இதுவேயாகும். இத்தகைய சூழ்ச்சிகளையும் சதிகளையும் மக்கள் அடையாளம் கண்டுகொள்ள வலிமிகுந்த முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தற்போது வகுப்புவாத இடையூறுகள் அல்லது பிறகு எரிபொருள் விலைஉயர்வின்மூலமான விலைவாசி உயர்வு அல்லது மற்றபிற புதிய பொருளாதார தாக்குதல், சில சமயம் வரலாற்றின் மீது தாக்குதல், வேறொரு சமயம் கருத்துச் சுதந்திரத்தின்மீது தாக்குதல் அல்லது போலிச் செய்திகளை கட்டுப்படுத்துகிறோம் எனும்பெயரில் அவற்றில் பெரும்பாலானவை பாஜக காரர்களாலேயே உருவாக்கப்படுபவை, பத்திரிகையாளர் உரிமைப் பறிப்பு இதுபோல ஒவ்வொரு எரியும் பிரச்சினைகளுக்கெதிராகவும் மக்கள் தம் எதிர்ப்புக் குரலை எழுப்பவேண்டும், ஒன்றுபட்டு அணிதிரண்டு போராடவேண்டும்.

பணம் பதவிக்காகவும் ஆளும்வர்க்கத்தின் பேராசைக்கு நேர்மையுடன் அடிபணிந்து செல்வதற்குமான பாராளுமன்ற அரசியலில் வாக்குவங்கியை உருவாக்கும் அல்லது பராமரிக்கும் கேடுகெட்ட இந்த வகுப்புவாத அரசியலானது மக்கள் வாழ்வில் பேரழிவை உருவாக்காமல் இருக்கமுடியாது.

தேர்தலில் ஆர்எஸ்எஸ்–பாஜகவை தோற்கடிப்பதை மட்டுமே நோக்கமாகக்கொண்ட பல்வேறு அரசியல் கட்சிகளைக்கொண்ட கதம்பத்தை உருவாக்குவதன்மூலம் ஆர்எஸ்எஸ்–பாஜகவின் சதிகளை முறியடிக்கமுடியாது.

### உண்மையான இடதுசாரிவாதம் மற்றும் உயர்ந்த கலாச்சாரத்தின் மீதமைந்த சக்திவாய்ந்த ஜனநாயக இயக்கமே வகுப்புவாதத்திற்கெதிரான தடையரண்

திறவுகோல் மக்களிடமே, அவர்களுடைய ஒற்றுமையிலும் முன்முயற்சியிலுமே உள்ளதென்பது கேள்விக்கப்பாற்பட்டதாகும். சமீபத்திய நிகழ்வைப் போலவே வரும் நாட்களிலும் உழைக்கும் மக்கள் மதப் பிரிவினையைக் கடந்து அல்லது மற்றபிற பிரிவினையையும் கடந்து வகுப்புவாத கொடிய அரசியலை புறக்கணிப்பர். வகுப்புவாத அபாயமென்பது மக்கள் நலனுக்கு மிகப்பெரும் கெடுதலாகும் என்பதை கண்டுகொள்கின்றனர். ஆனால், வகுப்புவாதத்தை திறம்படவும் உண்மையிலேயும் தடைசெய்யவும் முறியடிக்கவும் சித்தாந்த தெளிவும் உறுதிப்பாடும் மேலும் தேவை.

நாம் விவாதித்ததுபோல நம்முடையதைப் போன்ற பன்–மத, பன்–மொழியுள்ள ஒரு நாட்டில் எவ்வகைப்பட்ட வகுப்புவாதமும் அது எங்கிருந்து வந்தாலும் ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் முன்னேற்றத்திற்காக மக்களைப் பிரித்து, ஒற்றுமையைக் குலைக்கிறதென்பது முதலில் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

இரண்டாவதாக, இவ்வுணர்தலானது உயர்ந்த கலாச்சாரத்தின் மீதமைந்த வர்க்க விழிப்புணர்வு பெற்ற உண்மையான இடதுசாரிவாதத்தை அடித்தளமாக கொண்டிருக்கவில்லையெனில் உறுதியான அஸ்திவாரத்தைப் பெறாது. சமூக அமைப்பிலிருந்து தோன்றும் இவ்வபாயத்தை பாராளுமன்ற வாக்குவங்கி அரசியலால் துடைத்தெறியமுடியாது, ஏனெனில் அதன் வேராக இருக்கக்கூடிய முதலாளித்துவத்தை இத்தகைய அரசியல் சுட்டிகாட்டவில்லை. உயர்ந்த சித்தாந்தம் மற்றும் உன்னத கலாச்சாரத்தின் அடிப்படையில் வகுப்புவாதத்திற்கெதிரான சித்தாந்த பிரச்சாரத்தை ஒருங்கிணைப்பதன்மூலம் நீடித்த ஒன்றுபட்ட ஜனநாயக இயக்கத்தால் மட்டுமே இது முறியடிக்கப்படமுடியும்.

உண்மையான எதிரிக்கெதிராக மதம் போன்ற அனைத்துவகை பிரிவினைக்கும் அப்பாற்பட்ட அனைத்துபிரிவு ஒடுக்கப்படும் மக்களின் ஒற்றுமையிலிருந்துதான் இதுபோன்ற மக்கள் ஜனநாயக இயக்கமானது வலிமைபெறும்; அதேபோல உறுதியான சித்தாந்த தெளிவும் உயர்ந்த, உன்னத கலாச்சாரத்தால் உரமூட்டப்பட்டால் மட்டுமே வகுப்புவாத அபாயத்திற்கெதிராக தடையரணை ஏற்படுத்தமுடியும், கொடிய அரசியலுக்குத் தடைபோடமுடியும். இதுபோன்ற ஜனநாயக இயக்கங்களின் பங்கும் பகுதியுமாக நல்லெண்ணங்கொண்ட அனைத்துபிரிவு மக்களின் ஒன்றுபட்ட முயற்சியின்மூலம் அமைதியையும் வகுப்பு நல்லிணக்கத்தையும் பராமரிக்க ஒவ்வொரு முயற்சியும் மேற்கொள்ளப்படவேண்டும் ■

## புதுக்கோட்டை மாவட்டத்தில் கொழுவனுரில் டாஸ்மாக் கடையை மூடக்கோரி பேரணி



மே 3, 2018 அன்று கொழுவனுரில் டாஸ்மாக் கடையை மூடக்கோரி அனைத்துக் கட்சி சார்பாக நடந்த பேரணியில் ஏஐகேகேஎம்எஸ் கலந்துகொண்டது

# மோடியின் நான்காண்டுகால ஆட்சியை அம்பலப்படுத்தியும் ஸ்டெர்லைட் ஆலைக்கெதிராகப் போராடிய மக்கள் மீதான துப்பாக்கிச்சூட்டை கண்டித்தும் மே 23 அன்று இடதுசாரி கட்சிகளின் வெகுஜன அமைப்புகள் நடத்திய இயக்கங்கள்


சென்னை


மதுரை


தேனி



விழுப்புரம்


கடலூர்


கரூர்


சிவகாசி


அறந்தாங்கி



சேலம்

## தூத்துக்குடி மக்களின் போர்க்குணமிக்க எழுச்சி . . .

2ம் பக்கத் தொடர்ச்சி

போராட்டப்பாதை இதுதான். இக்கண்ணோட்டத்தில் பார்க்கையில், தூத்துக்குடி போராட்டமானது, ஒரு புதிய நம்பிக்கைத்தீயை மூட்டியுள்ளது. அசைந்து கொடுக்காமல் வெகுஜனப் போராட்டங்கள் கட்டியமைக்கப்படுமானால் கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும் என்பதை சந்தேகத்துக்கிடமின்றி இப்போராட்டம் நிரூபித்துள்ளது. ஆனால் போராட்டத்தை தக்கவைத்திருக்கவும், அவைகளை சரியான பாதையில் கொண்டு செல்லவும், அவை உயர்ந்த கட்டத்திற்குக் கொண்டு செல்லவும் ஒரு சரியான புரட்சிகரத் தலைமை தேவைப்படுகிறது. இல்லையெனில், எண்ணற்ற நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் எழுந்துவரும் அத்தகைய பல போராட்டங்கள் பாதியிலேயே பலமிழந்துபோய் விரக்திக்கு வழிவகுத்துவிடும்.

ஒருமுறை மக்கள் காலாவதியாகிப்போன பழைய சமூக அமைப்பை மாற்றுவதற்கான சமூக விழிப்புணர்வை, நெஞ்சுரத்தை, வெல்லமுடியாத உத்வேகத்தை, திடமான தீர்மானத்தை மற்றும் உறுதியை அடைந்துவிட்டார்களேயானால், அது ஆளும் வர்க்கத்தின் நலனைப் பேணுபவர்களுக்கு நடுக்கத்தை ஏற்படுத்தும் என்பதை வரலாறு காண்பித்திருக்கிறது. போராட்ட உத்வேகம் ஆழமாக வேரூன்றிவிட்டால், அதை எதிர்க்க முடியாது. ஆளுவோரின் எத்தனை காட்டுமிராண்டித்தனமான தாக்குதலாலும் அதை பணியவைக்க முடியாது. நான்கு முன்னணி ஒருங்கிணைப்பாளர்களை ஆட்சியாளர்கள் சுட்டுக்கொல்லலாம், ஆனால் அத்தகைய ஒருங்கிணைப்பாளர்கள் எட்டாக, பதினாறாக, அதற்கும் மேலாக உருவாகிவிடுவார்கள். ஒருபுறம் உண்மையான புரட்சியாளர்கள் முதலாளித்துவத்தைத் தூக்கியெறிவதன் மூலம் சமுதாயத்தில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தும் கடமையில் உறுதிபூண்டுள்ளனர். மனிதனை மனிதன் சுரண்டும் அமைப்பை முடிவாக ஒழித்துக்கட்டும் போக்கை துரிதப்படுத்திக்கொள்கின்றனர். சரியான சித்தாந்த உயரிய கலாச்சார மற்றும் அறநெறியின் அடிப்படையில் மக்கள் போராட்டங்களை வளர்த்தெடுக்கும், வழிநடத்தும், தீவிரப்படுத்தும் அவசியத்தை எப்போதுமே உயர்த்திப்பிடித்துக்கொண்டிருக்கின்றனர். மற்றொருபுறம் ஆளும் முதலாளித்துவத்தின் சேவகர்கள் போராட்டப்பாதையைத் தேர்ந்தெடுப்பதிலிருந்து மக்களைத் தடுத்து திசைதிருப்பும் முயற்சிகளைச் செய்துகொண்டே இருக்கின்றனர்.

நாம் விரும்புகிற போராட்டம் அடிமட்ட அளவில் வலுப்பெற்று படிப்படியாக ஒரு உகந்த கலாச்சார சூழலுடன், பாடுபடும் அனைத்து பிரிவினரையும் ஈடுபடுத்திய நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட நெடிய தொரு போராட்ட வடிவம் அடைவதை உத்திரவாதப் படுத்திட, இச்சகாப்தத்தின் முன்னணி மார்க்சிய சிந்தனையாளர்களில் ஒருவராகிய தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் போதனைகளினடிப்படையில் எமது கட்சி அடிமட்ட அளவிலிருந்து போராட்டக் கருவிகளாக மக்கள் கமிட்டிகளை உருவாக்குவதற்கும் மற்றும் போராட்டங்களை நடத்தும் பொறுப்பை ஏற்றிட தன்னார்வத் தொண்டர்களை உருவாக்கும் அறைகூவலை மீண்டும் மீண்டும் விடுத்துக் கொண்டிருக்கிறது. இத்தகைய போராட்டக் கமிட்டிகளே பலம் வாய்ந்த எதிரிகளுக்கு எதிராக முன்னிற்கும் மக்கள் சக்தியாகச் செயல்படும்.

போராட்டத்தின்போது துவக்கத்தில் தேவைப்படும் அரசியல் ஞானத்தை மக்கள் பெற்றிருக்காமலிருக்கலாம். ஆனால், அவர்களிடம் மிகச்சிறந்த போராட்ட உத்வேகம் இருக்கும். காலப்போக்கில் அவர்கள் சிந்தனையிலும் கண்ணோட்டத்திலும் தெளிவைப் பெறுவார்கள். இத்தகைய ஒன்றுபட்ட போராட்டங்கள் நடைபெறும் போக்கில், அவர்களிடம் உரிய அரசியல் விழிப்புணர்வு ஏற்படும். சரியான புரட்சிகரத் தலைமையை அவர்களால் கண்டறிய முடிவதுடன், பிற சமரசவாத சக்திகளை தனிமைப்படுத்தி அவர்களே போராட்டத்தில் அத்தகைய தலைமையை நிறுவிட முன்வருவார்கள். சரியான புரட்சிகரத் தலைமையின் கீழ், சரியான பாதையில் ஒருமுறை போராட்டத்தை நடத்துவார்களேயானால், இத்தகைய வெகுஜனப் போராட்டங்கள் படிப்படியாக வர்க்கப் போராட்டங்களாக வளர்த்தெடுக்கப்பட்டு அவற்றின் தர்க்க ரீதியிலான முடிவுக்குச் சென்றடையும். மகத்தான தூத்துக்குடி போராட்டத்தின் ஆழ்ந்த முக்கியத்துவம் இங்குதான் உள்ளது.

இத்தகைய முன்னோடியான போராட்டங்களிலிருந்து உத்வேகத்தைப் பெற்று, இந்த ஈவிரக்கமற்ற ஒடுக்குமுறை முதலாளித்துவ அமைப்பு மற்றும் அதன் பாதுகாவலர்கள், சேவகர்களுக்கெதிரான பாடுபடும் மக்களின் அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கிய ஒன்றுபட்ட பரந்த அளவிலான ஒருங்கிணைக்கப்பட்ட போர்க்குணமிக்க போராட்ட வீச்சை கட்டவிழ்த்துவிட வேண்டிய தேவை இருப்பதை நாங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

பாராளுமன்ற மாயையிலிருந்து வெளிவந்து, மந்த நிலையிலிருந்து விடுபட்டு, அனைத்துத் தடைகளையும் கடந்து, துணிவை வரவழைத்துக்கொண்டு, ஆளும் முதலாளித்துவம் மற்றும் அதன் எடுபிடிகளால் தங்கள் மீது கொண்டுவரப்படும் பொருளாதார, அரசியல், கலாச்சாரத் தாக்குதல்களுக்கு எதிராக ஒன்றுபட்டு உறுதியாய் நின்று போராட்ட உத்வேகத்தை காட்டிட வேண்டுமென்பதே இத்தருணத்தின் தேவையென தூத்துக்குடி போராட்ட வெற்றி காண்பித்திருப்பதை மக்கள் உணர்ந்திட வேண்டும் என்பதே எங்களது வேண்டுகோளாகும். போராட்டத்தின் அழுத்தத்தினால் மட்டுமே ஆளும் வர்க்கத்திடமிருந்து, அதன் அரசாங்கங்களிடமிருந்து அவர்களின் நியாயமான கோரிக்கைகளை அவர்கள் வென்றெடுக்க முடியும்.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை மூட உத்தரவிட்டிருக்கும் தமிழக அரசாங்கத்தின் அறிக்கையைக்கண்டு மக்கள் திருப்தியடைந்திடக் கூடாது. எவ்வகையிலும் அது மீண்டும் திறக்கப்படாத வண்ணம் நாடு தழுவிய மக்கள் இயக்கங்கள் தொடர்ந்துகொண்டேயிருக்க வேண்டும் ■

# ஏப்ரல் 24: எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் 71வது ஸ்தாபகதினம்




சென்னையில் ஏப்ரல் 27 அன்று நடந்த மாநில அளவிலான பொதுக்கூட்டத்தில் தோழர் கே ராதாகிருஷ்ணா, மத்தியக் கமிட்டி உறுப்பினர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) உரையாற்றுகிறார், கூட்டத்தில் கலந்துகொண்டோர்

## மனித நாகரிகத்தின் கட்டுக்கோப்பை அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் . . .

# வெகுஜனங்களை இணைத்த மிகப்பெரும் கலாச்சார இயக்கம் வாயிலாக ஒவ்வொரு குற்றச்சம்பவத்தையும் எதிர்த்துப் போராடித் தடுக்க வேண்டும்

6ம் பக்கத் தொடர்ச்சி

போராடுவதைத் தடுக்கும் நோக்கிலும், புரட்சிகரப் போராட்டத்தின் எந்த வளர்ச்சியையும் முன்கூட்டியே தடுத்திடும் நோக்கிலும் செய்யப்படுகின்றன. ஆனால் அனைவரும் அதிர்ச்சியடையும் வகையில் உயரிய உன்னத கலாச்சாரத்தை, நற்பண்புகளை நன்னெறிகளை மற்றும் ஒழுக்கநெறிகளை எவரும் தங்களுக்குள் வளர்த்துக்கொள்வதில்லை.

சமூகத்தில் ஆசிரியர்கள் மற்றும் பேராசிரியர்கள் உள்ளனர். அவர்களில் பெரும்பகுதியினர் எவ்வித நற்பண்புகளும் இல்லாதிருக்கின்றனர். அவர்களில் பலர் குற்றம் புரிந்துகொண்டு வருபவர்களாகவும் கொடிய குற்றங்களில் சம்பந்தப்பட்டவர்களாகவும் இருக்கின்றனர். இத்தகைய ஒரு நிலைமையில், வாழ்வின் உயரிய நோக்கத்தை மாணவர்களிடம் ஊக்குவிக்கக்கூடிய எந்த சக்தியும் இல்லை. இதனால் ஏற்படும் விளைவு சாமானிய மக்களிடம் காணப்படாதா? ஆபாசம், வன்முறை மற்றும் பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்யுமளவிற்கு நடைபெறும் குற்றங்களுக்கு எதிராக, முறையான சித்தாந்த, கலாச்சார, அரசியல் வழிகாட்டல் இல்லையெனில் அவர்களும், ஏன் அவர்களது குழந்தைகளும்கூட பலியாவதற்கான அனைத்து வாய்ப்புகளும் இல்லையா?

ஒருங்கிணைக்கப்பட்டு நடத்தப்படும் குற்றங்களைப்பற்றிக் கூறியாகவேண்டும். முன்பிருந்த அரசியல்வாதிகள் ஒருகாலத்தில் அவர்களின் அரசியல் எதிரிகளை எதிர்கொள்ள அடியாட்களை அமர்த்திக்கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இன்றைய நாட்களில் அடியாட்களும் குற்றவாளிகளும்கூட மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் பிரதிநிதிகளாக தைரியமாக வலம் வருகின்றனர். தேர்தல்கள் யாவும் நிர்வாகத்தின் உதவியுடனும் உடந்தையுடனும் மற்றும் பணபலம், அடியாட்கள் பலம், ஊடக பலத்தின் அடித்தளத்தில் நடைபெறுவதால் இறுதியில் தேர்தல் என்பது ஒன்றுமில்லை என்பதை மக்கள் காண்கின்றனர். இருக்கின்ற இந்த அமைப்பை, முடிந்த வரையில் அப்படியே வைத்திருக்கக்கூடிய, உண்மையில் ஆளுகின்ற ஆளும் வர்க்கத்திற்கு கீழ்ப்படிந்து சேவை புரியக்கூடிய சில சக்திகளை, கட்சிகளை ஆட்சியில் அமர்த்திடும் வகையில் தேர்தல் முடிவுகள் அப்பட்டமாக முன்கூட்டியே தீர்மானிக்கப்படுகிறது, அல்லது தேர்தல் தில்லு முல்லுகள் செய்யப்படுகிறது.

மக்கள் பிரதிகள் உண்மையில் மக்கள் பிரதிநிதிகளாக இருப்பதில்லை. பெரும்பாலும், காலப்போக்கில் அல்லது குறுகிய காலத்திலேயே தேர்தல் உறுதிமொழிகள் யாவும் வெற்று தேர்தல் முழக்கங்களாக மறைந்து போகின்றன. இப்போதெல்லாம் வெளிப்படையாகத் தெரிவதுபோல், சமூக ஊடக தளங்களும்கூட, அவைகளிடமிருக்கும் தகவல்களை ஆளும் வர்க்கம் விரும்புகின்ற வேட்பாளருக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றன. மேலும் அமெரிக்காவில் டிரம்ப் விஷயத்தில் நடந்தது போல, இந்தியாவில் பாஜக விஷயத்தில் நடந்தது போல இது உலகம் முழுவதும் நடந்துகொண்டிருக்கிறது. இது எவருக்கு வேண்டுமானாலும் நடக்கலாம், எந்த நாட்டிலும் நடக்கலாம்.

பத்தாண்டுகளுக்கு முன்பு, ஒரு உயர்நீதிமன்ற நீதிபதியானவர், “காவல்துறை என்பது மிகவும் ஒருங்குதிரட்டப்பட்ட கிரிமினல்களின் கும்பலைக் கொண்டது” என்றார். சூழ்நிலை இப்போது இன்னும் மோசமாகியிருக்கிறது. பார்ப்பதற்கு முழுமையான அராஜக ஆட்சிபோல் உள்ளது. அனைத்துவகை கிரிமினல்களும் அவர்களின் வருங்காலத்தை வளமாக்கிக்கொள்வதற்கு உகந்த வகையில் இருக்கும் இத்தகைய ஓர் சூழல், சமூகக் கட்டுக்கோப்பை, வாழ்வை, செல்வத்தை அரித்துத் தின்றுகொண்டிருக்கவில்லையா?

### முதலாளித்துவம் இதன் ஆணிவேர்

இத்தகைய போக்கு முதலாளித்துவ அமைப்பு உலகம் முழுவதிலும் வளர்ந்துவிட்டது. இவ்வமைப்பு சில நூற்றாண்டுகளுக்கு முன்பு வளர ஆரம்பித்தது. அப்போது அது சீரழிந்துபோயிருந்த முடியாட்சியையும் நிலப்பிரபுத்துவத்தையும் எதிர்த்துப் போராடியது. தங்களின் வாழ்க்கையை முடிவு செய்துகொள்வதற்கான, வாழ்வாதாரத்திற்காக, தங்களின் அரசாங்கத்தை ஏற்படுத்திக்கொள்வதற்கான, தங்களின் சமுதாயத்தை அமைத்துக்கொள்வதற்கான அனைவருக்குமான சுதந்திரத்தை அது வேண்டியது. சமூக முன்னேற்றத்திற்கான கடமையை அது செய்தது. ஆனால் இந்த முதலாளித்துவ அமைப்பு சுரண்டல், ஒடுக்குமுறை மற்றும் பாகுபாட்டின் அடிப்படையில் அமைந்ததாகும். மென்மேலும் சுரண்டல் அதிகரித்ததால், மென்மேலும் தன்னை ஸ்திரப்படுத்திக்கொண்டு, சீரழிந்துபோய், மேலே விவரித்தபடி சமூக, கலாச்சார, அரசியல் களங்களில் முழுமையான நெருக்கடியை உருவாக்கியுள்ளது.

வெகு நாட்களுக்கு முன்னர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் முதலாளித்துவம் இந்த அளவிற்கு வளர்ச்சியடைந்திராத நிலையில், அடிப்படை மனிதாபிமான மதிப்புகளையும் பூர்ஷ்வா ஜனநாயகக் கோட்பாடுகளையும் கடைபிடிப்பதை முழுமையாக விட்டுவிடாத நிலையில், பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவரும் மனித சமூகம் இதுவரையில் உருவாக்கியிராத ஆகப்பெரும் மேதைகளில் ஒருவருமான காரல் மார்க்ஸ் அவர்கள், முதலாளித்துவத்தில் பணமும் சுயதிருப்தியும் முதன்மையானதாக, சர்வ வல்லமை படைத்ததாக ஆகிவிட்டது என்பதை, மனித சமுதாயத்தின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய மிக ஆழ்ந்த விஞ்ஞானபூர்வ ஆய்வின் அடிப்படையில் முடிவு செய்தார். வாழ்க்கையில், சமுதாயத்தில், மனித உறவுகள் உள்ளிட்டவைகளில், குடும்பத்திற்குள்ளும் கூட அனைத்தும் பணத்தினாலேயே கட்டுப்படுத்தப்படுகிறது. இன்று ஒவ்வொரு கணமும் மார்க்ஸ் அவர்களின் முடிவுகள் எத்தகைய தீர்க்கதரிசனமானது என்பதை உணர முடிகிறது.

இன்று முதலாளித்துவம் முற்றிலும் சீரழிந்த கட்டத்தை அடைந்திருக்கின்ற நிலையில், இத்தகைய குணாம்சங்கள் இன்னும் கோரமான வடிவத்தை அடைந்திருக்கிறது. இந்த சீரழிந்த, காலாவதியாகிப் போன அமைப்பானது, மனிதனை மிருகமாக மாற்றிக்கொண்டிருக்கின்றது. எப்படியாவது எவ்வழியிலாவது சுயதிருப்தி அடைவது, எதைச் செய்தாவது பணத்தை அபகரிப்பது எனும் போக்கு தான் மக்களை வெறிபிடிக்கவைத்து அஞ்சத்தக்க கிரிமினல்களாக மாற்றுகிறது. இதனால்தான் பாலியல் பலாத்காரம் செய்பவன் அல்லது கொலைகாரன் குற்றம் புரிகையில் வேதனையேதும் கொள்வதில்லை. சுற்றியிருக்கும் மக்கள் ஒன்றும் செய்ய முடியாமல், வாயடைத்துப்போய், செயலற்றுக் காணப்படுகிறார்கள். ஆட்சிப்பொறுப்பில் இருப்பவர்களும் நிர்வாகமும் அக்குற்றத்தை எந்த அளவிற்கு, எந்த வகையில் பயன்படுத்த முடியும் என்றுதான் எண்ணுகின்றனர். இங்குமங்கும் நடக்கின்ற இத்தகைய கொடூர நிகழ்வுகள் யாவும் மனித இனத்திற்கு விடப்பட்டிருக்கும் கடுமையான சவாலாக உள்ளது.

### விடுபடுவதற்கான வழி என்ன?

எதுவும் செய்யாதிருந்துகொண்டிருந்தால் மக்களையோ, குடும்பத்தாரையோ, வாழ்க்கைத் துணையையோ, குழந்தைகளையோ எவரையும் காப்பாற்ற முடியாது. மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடியாக வேண்டும். தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் மனிதத்தன்மையற்ற காட்டுமிராண்டித்தனமானக் கொலைகளை மற்றும் பிற குற்றங்களைத் தடுத்து நிறுத்தும் குறிக்கோளை ஒன்றிணைத்த நீடித்த ஒரு கலாச்சார இயக்கத்தை நாடு முழுவதும் உருவாக்குவது தான் இத்தருணத்தின் தேவை.

நற்சிந்தனை கொண்ட, நல்லெண்ணம் படைத்த அனைவரும் இத்தகைய கலாச்சார இயக்கத்தைப் பலப்படுத்த இப்போராட்டத்தில் முன்வந்து இணைய வேண்டும். இத்தகைய இயக்கம் ஒவ்வொரு நகரத்தையும், ஒவ்வொரு கிராமத்தையும் சென்றடையுமளவிற்கு ஒருங்குதிரட்டப்பட வேண்டும். ஒவ்வொரு நிலையிலும் நடந்துகொண்டிருக்கின்ற ஈவிரக்கமற்ற இத்தகைய செயல்களுக்கு எதிராக நிற்க வேண்டும். அதன் அவசரக் கடமை இத்தகைய மனிதத்தன்மையற்ற செயல்களுக்கும் குற்றங்களுக்கும் எதிரான பலம் வாய்ந்த பொதுக் கருத்தை வளர்த்தெடுப்பதாக இருக்க வேண்டும்.

இத்தகைய போராட்டத்தை பரந்த அளவில், பலமான அடித்தளத்தில் கட்டியெழுப்ப முடிந்தால், அது ஒருபுறம், ஊடகத்தின் பாராமுகமாக மந்தமாக இருக்கின்ற ஒரு பிரிவினர் உள்ளிட்டவைகளுக்கும், அரசாங்கத்திற்கும் அதிகார மையங்களுக்கும் ஒரு மிகப்பெரும் அழுத்தத்தைக் கொடுக்கும். மற்றொருபுறம், மனிதத்தன்மையற்ற கிரிமினல் செயல்களைப் புரிபவர்களுக்கு பின்னடைவை ஏற்படுத்தும். இதுவே நம் முன்னுள்ள கடமை ■

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : First week of Every Month

பாட்டாளி சிந்தனை

TN/CCN/429/2018-2020
TN/PMG (CCR)/WPP-373/2018-2020
Registered with the Registrar of Newspapers for India No : 62018/1988

# தோழர் பிரணதி பட்டாச்சார்யா அவர்களுக்குச் செவ்வணக்கம்!



மத்தியக் கமிட்டி உறுப்பினரும், மேற்குவங்க மாநில செயற்குழு உறுப்பினரும் கட்சியின் புருலியா மாவட்டக் கமிட்டிச் செயலாளருமான தோழர் பிரணதி பட்டாச்சார்யா அவர்கள் நீண்டகாலமாக வேதனைமிக்க கடும் புற்று நோயால் பாதிக்கப்பட்டு, 23 மே அன்று காலை கொல்கத்தா ஹார்ட் கிளினிக்கில் இயற்கை யெய்தினார். அப்போது அவருக்கு வயது 67. கட்சியின் அனைத்து அலுவலகங்களிலும் செங்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது.

1968இல் தோழர் பிரணதி பட்டாச்சார்யா அவர்கள், அவரது 17வது வயதில் மேற்கு வங்காளத்தின் முர்ஷிதாபாத் மாவட்டத்திலிருக்கும் ஜியாகுஞ் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கையில், கட்சியின் மாணவர் அமைப்பான ஏஐடிஎஸ்ஓவுடன் தொடர்பு கிடைக்கப்பெற்றது. ரகுநாத்புர் கல்லூரி ஏஐடிஎஸ்ஓ அமைப்பின் பொறுப்பாளராக அவரது பொறுப்புகளை திறம்பட நிறைவேற்றியதன் போக்கில் அவர் விரைவிலேயே ஏஐடிஎஸ்ஓவின் மாவட்ட செயற்குழு உறுப்பினரானார். அவருக்கு வெகுஜன அமைப்புகளான ஏஐகேகேஎம்எஸ், ஏஐஎம்எஸ்எஸ் போன்ற இன்னும் பலவற்றில் முக்கியப் பொறுப்புக்களும் ஒப்படைக்கப்பட்டன.

1987இல் நடந்த புருலியா மாவட்ட கட்சி முதல் மாநாட்டில், கட்சியின் மாவட்டக் கமிட்டி உறுப்பின ரானார். 2006இல் புருலியா மாவட்ட செயலாளராகப் பொறுப்பேற்றார். 2009இல் மேற்கு வங்க மாநிலக் கமிட்டியின் ஒரு உறுப்பினராக ஆகும் அளவிற்கு வளர்ந்தார். 2009இல் நடந்த கட்சியின் இரண்டாம் மாநாட்டில் மத்தியக் கமிட்டியானது அவருக்கு ஸ்டாப் உறுப்பினர் தகுதியை வழங்கியது. 2018இல் மேற்கு வங்க மாநில செயற்குழுவிலும் கட்சியின் மத்தியக் கமிட்டியிலும் சேர்க்கப்பட்டார். அவர் மாநிலக்கமிட்டியின் சார்பாக பங்குரா மாவட்ட பொறுப்பாளராகவும்கூட இருந்துள்ளார்.

வாழ்வின் பல்வேறு முக்கிய அவசரக் கோரிக்கை களை, குறிப்பாக அம்மாவட்டத்தில் தொடர்ந்து இருந்துவந்த வறட்சி நிவாரணம் மற்றும் மதுபானம் ஆகிய இரண்டு பிரச்சினைகளை முன்வைத்த போராட்டங்களை திறம்பட ஒருங்குதிரட்டி வழிநடத்தி யதின் போக்கில், புருலியா மாவட்ட ஏழை, நடுத்தர மக்கள் மனதில் ஓர் அசைக்க முடியாத இடத்தைப் பெற்று, ஒரு வெகுஜனத் தலைவராக உருவானார். இத்தகைய போராட்டங்கள் நடந்ததன் போக்கில் இவர் பலமுறை சிறை சென்றுள்ளார்.

மார்க்சிசம், லெனினிசம், சிப்தாஸ் கோஷ் சிந்தனை மீதான அவரது ஊசலாட்டமற்ற விசுவாசம் மற்றும் ஒரு மிக உயர்ந்த அறநெறி, கலாச்சாரத் தரத்துடன் அவர் காண்பித்த அவரது புரட்சிகர குணாம்ச முன்மாதிரி வாழ்க்கைப் போராட்டம், அனைத்துத் தடைகளையும் மீறி அனைத்து துன்புறுத்தல்களையும் அலட்சியம் செய்து அவரது புரட்சிகர நோக்கத்தில் உறுதியுடன் இருக்க உதவியது. அவருடன் நெருங்கிப் பழகியவர்களெல்லாம் அவரது பரிவுள்ளத்தையும், இளகிய மனத்தையும், ஆழமான அன்பையும் இனிய குணாம்சத்தையும் உணர முடிந்தது. இளைய தோழர்களெல்லாம் அவரது குழந்தைகள் போல் போற்றப்பட்டனர். இவரது மென்மையான குணாம்சத்தால் அவர்களது வேதனைகளும் கவலைகளும் பெரும்பாலும் முற்றிலுமாக துடைக்கப்பட்டன. மே 24 அன்று அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்த வந்தவர் வடித்த கண்ணீரில் அது தெளிவாக வெளிப்பட்டது.

தோழர் பிரணதி பட்டாச்சார்யா 2016இல் கல்கத்தா ஹார்ட் கிளினிக் மற்றும் மருத்துவ மனையில் சிறுநீரக பிரச்சினை என கண்டறியப்படக் கூடிய, தீராத வயிற்று வலி காரணமாக அனுமதிக்கப் பட்டார். டில்லியிலுள்ள கல்லீரல் மற்றும் பித்தப்பை மருத்துவ நிறுவனத்தின் டாக்டர் எஸ்கே சரின் –னிடம் கலந்தாலோசிக்கப்பட்டபோது, புற்று நோய் இருப்பதும் அது மேலும் பரவியிருந்த தும் கண்டறியப்பட்டது. அதிர்ச்சியில் உறைந்து போன தலைவர்களும் தொண்டர்களும் முடிந்த அனைத்து மருத்துவ கவனிப்பையும் உதவியையும் வழங்கியதன் மூலம் அவருக்கு சற்று நிவாரணம் தர முயற்சித்தனர். இறுதியில் எதுவும் பயன்தராமல், கொடிய நோயானது அனைத்து முயற்சிகள் இருந்த போதிலும் நீடித்தேயிருந்தது. ஆயினும் தோழர் பிரணதி பட்டாச்சார்யா அசைந்துகொடுக்காமல் அந்நோயை எதிர்கொண்டேதானிருந்தார். அவருக்கு முன்பாக தோழர்கள் கட்டுப்படுத்த முடியால் அழுத போதெல்லாம், தைரியத்துடன் அவர் எழுந்துநின்று அவர்களை இவரே சமாதானப்படுத்தியிருக்கிறார். இவரது மறைவு கட்சிக்கு பெரும் இழப்பு மட்டு மின்றி, பாடுபடும் மக்களின் வர்க்கத்திற்கும் வெகுஜனப் போராட்டத்திற்கும் ஒரு இழப்பு என்பது நிச்சயம் நிரூபணமாகும் ■

# ஸ்டெர்லைட் ஆலைக்கெதிராகப் போராடிய மக்களை படுகொலை செய்ததைக் கண்டித்து மே 24, அகில இந்திய கண்டன நாள்



புதுதில்லி



கேரளா


பெங்களூர்



ஒரிஸ்ஸா



மத்தியபிரதேஷ்



உத்தரகாண்ட்



புதுச்சேரி



தேனி



மதுரை

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: ஆ ரெங்கசாமி அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 007 அச்சகம் : ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094, **ஆசிரியர்: ஆ ரெங்கசாமி**

Published by: A Rengasamy on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 007 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. **Editor : A Rengasamy**
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**